# ஏன், எப்படி?

NARA PUBLIC LIBRARY
- 7 JAN-
MADRAS

இந்துமதி

விற்பனை உரிமை:

**தமிழ்ப் புத்தகாலயம்**

58, டி.பி. கோயில் தெரு, N.K.T. பெண்கள் பள்ளி எதிரில்
திருவல்லிக்கேணி, சென்னை-600 005

என், எப்படி? (இரு நாவல்கள்)
முதற் பதிப்பு: ஆகஸ்டு, 1988

விலை ரூ. 12-00

EN, EPPADI ?
novellets
by INDHUMATHI
© INDHUMATHI
First edition: August, 1988
152 pages
10pt. Letters
18x12.5 cms
10.9 kg white printing Paper
Box board binding
Cover design : Eswari
Printed at : Pooncholai Achagam
Madras-5
POONCHOLAI PATHIPPAGAM
Sales Right :
TAMIL PUTHAKALAYAM
58, T. P. Koil Street
Triplicane : Ice House
Madras-600 005
Price Rs : 12-00

அச்சிட்டோர்:

பூஞ்சோலை அச்சகம்
சென்னை-5

# இந் நாவல்கள்

வேகம் நிறைந்த, ஆழம் அற்ற மேம்போக்கான அவசர வாழ்க்கையாக நமது நாகரிகமும் பண்பாடும் மாறிவருவதின் மோசமான விளைவுகளை இந் நாவல்கள் எடுத்துக் கூறுகின்றன.

இப்படியும் நடக்குமா எனத் தோற்ற மளித்தாலும் நாள்தோறும் செய்தித்தாள்களில் நாம் காணும் கொலை, தற்கொலைகளின் பின்னணிகள்தான் இவை.

திருமணம் என்பது ஆயிரங்காலத்துப் பயிர் என்பது போய், பொறுப்பைத் தோள்மாற்றி இறக்கி வைப்பது என்பதாகப் பெற்றோர்கள் நடந்துகொள்வதின் விளைவை முதல் நாவல் கூறுகிறது.

விடலைப் பருவத்தின் ''காதல் அணுகுமுறை''யின் வித்தியாசத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது இரண்டாவது நாவல்.

தனக்கே உரிய சரள நடையில் மெலிதாய் கூறிச் செல்கிறார் ஆசிரியை. அவர்கட்கு நன்றி.

—பூஞ்சோலை

## உள்ளே


ஏன், எப்படி? ... 5

அவளுக்கு அமுதென்று பேர் ... 71


# ஏன் எப்படி?

## 1

"அம்மா..."

குளியல் அறைக் கதவை லேசாய்த் திறந்து தலையை மட்டும் வெளியில நீட்டி, குழைவும் கொஞ்சலுமாகக் குரல் கொடுத்தாள் ஜனனி. பக்கத்து வீட்டு மஞ்சள் ரோஜாச் செடியின் பூ மட்டும் ஜன்னல் வழியாக எட்டிப் பார்க்கிற மாதிரி இருந்தது. முகம் நிகு நிகு வென்று மின்னிற்று. தாழம்பூ நிறத்திற்கு பார்டர் கட்டின அடர்த்தியான தலைமுடி அழகாகத் தெரிந்தது. தலையில் கொட்டின தண்ணீர் முத்து முத்தாக முகத்தில் உருண்டோடி இன்னமும் எடுப்பாகக் காட்டிற்று. அகலமும், நீளமுமாக நல்ல கண்கள், தீர்மை யான மூக்கு, சின்ன உதடுகள், குமிழிட்ட முகவாய். இன்னமும் சிறு பிள்ளைத்தனம் பாக்கி நிறகிற பாவம். 'இவளா, பள்ளியில் கடைசி வருஷம் படிக்கிறாள்'-எவரையும் ஆச்சரியமாகப் பார்க்க வைக்கிற கள்ளமற்ற குழந்தைத்தனம். 'இவளா குழந்தை' என்று மாற்று கட்சியில் நின்று கொடி தூக்கி எதிர்க்குரல் கொடுக்கும் வாகான பதினாறு வயது உடம்பு. நல்ல உயரம். திரட்சியான சதைப் பிடிப்பு.

இந்தத் திரட்சியும் சதைப் பிடிப்பும் இப்போது ஏற்பட்டவை. இந்த ஆறே மாதத்தில் மட மடவென்று வளர்ந்து நிற்கும் பயிரைப் போல் சட்டென்று கொடுத்த வளர்ச்சி. அதற்கு முன்பு வரை ஒட்டின மார்பில் நிற்க ஆதார மற்று விலகி விலகிப் போகும் தாவணியுமாக மரப்பாச்சி பொம்மையாக நின்றிருந்தவள்தான்.

'என்னடி இவ...வயசு பதினாறு முடியப் போவுது, இன்னமும் இப்படி நிக்கறா...? பொண்ணுன்னால் அதுக் கேத்த லட்சணம் வேணாம்...? இப்படி ஒட்டி உலர்ந்த உடம்போடு இருந்தால் நாளைக்கு எவன்டி கல்யாணம் கட்டிக்குவான்...? ஏய் ராஜாம்பா...பொண்ணுக்கு பால், தயிர் ஊற்றி ஒரு பொம்பளையாக்க வேணாம்...?'

—பாட்டி மங்கையற்கரசிக்கு பேத்தி அப்படிக் குச்சு மாதிரி இருப்பதில் பெரிய அதிருப்தி. தன் மருமகள் ராஜாம்பாள்தான் பெண்ணை சரியாகக் கவனிக்கவில்லை என்பதுதான் குறை. பேத்தியுடன் பள்ளிக்கூடத்திலிருந்து வருகிற மற்ற பெண்கள் எல்லாரையும் பார்க்கப் பார்க்க அவள் மருமகள் மீது காய்வாள்.

'மொதல்ல பெண்ணை தேற்றுகிற வழியைப் பாரு...' என்று சிடுசிடுப்பாள்.

'எங்க குடும்பத்துல யாருக்கும் இந்த மாதிரி கொத்த வரங்கா வற்றலா உடம்பு கிடையாது. யாரைக் கொண்டு வந்ததோ இது?' என்று மறைமுகமாக மருமகள் ஒல்லி என்பதை இத்தனை வருடங்கள் கழித்து சொல்லிக் காட்டு வாள்.

மாமியாரின் அத்தனை பேச்சுக்களையும் கேட்டு சில சமயங்களில் 'கிழவிக்கு வேற வேலை இல்லே...' என்று ஒதுக்கித் தள்ளுவாள் ராஜாம்பாள். மற்ற சந்தர்ப்பங்களில் அவளும் பதிலுக்குத் திருப்பிக் கொடுப்பாள்.

''ஆமாம்...இங்க எல்லாருக்கும் அப்படியே தளதளன்னு உடம்பு பாரு...பேசறீங்களே? உங்க கடைசி மக ரேணு மட்டும் எப்படி இருக்காம்? புடலங்கா மாதிரித்தான் இருக்கு. ஜனனியோட அப்பா கட்டு மஸ்தா இருக்காரா என்ன...? எங்க குடும்பத்தைப் பிடிச்சு இழுக்கறதுக்கு...?''

சட்டென்று தழைந்து போய் விடுவாள் கிழவி. மிஞ்சினால் கெஞ்சுகிற சுபாவம்.



''அதுக்குச் சொல்லலைடி. கூட கொஞ்சம் பால், தயிர், நெய் எல்லாம் தரக் கூடாதான்னுதான் கேட்டேன்...''

''அதற்கெல்லாம் ஒரு குறைவும் இல்லே... நல்லா தயிரும், நெய்யுமாகத்தான் சாப்பிடறா...ஆனாலும் உடம்புல ஒட்டலேன்னால் நான் என்ன செய்யறது...?''

சாகும் வரை கிழவிக்கு அந்தக் குறை இருந்தது. பேத்தியை சதைப்பற்றும் பிடிப்புமாகப் பார்க்க முடிய வில்லையே என்று. கிழவி கண்களை மூடின மறுமாதமே சட்டென்று ஜனனியின் உடம்பில் ஒரு மாறுதல் தெரிந்தது. மொட்டு எப்போது பூவாக மலர்ந்தது என்பது புதிராக இருக்கற மாதிரி ஜனனியின் உடம்பிலும் எப்போது என்று சொல்ல இயலாத ஒரு திரட்சியும் அழகும் வந்து சேர்ந்து கொண்டது. அதன் பின்னரே ராஜாம்பாள் மகளுக்கு முதல் புடவை எடுத்துக் கொடுத்தாள். கட்டிக் கொண்டு வரச் செய்தாள்.

''இதப் பாரு, இனிமேல மேல் புடவை விலகாமல் பார்த் துக்கணும். அப்படி விலகினாலும் கை உடனே அதை அனிச்சையா சரி செய்யணும். தெரிஞ்சதா...?''

சிறு பெண்ணாகத் தலையாட்டினாலும் கூடவே ''என்னம்மா நீ...?'' என்று சிணுங்கவும் செய்தாள்.

''எங்க ஸ்கூல்ல தாவணியைப் படிப்படியா வச்சு ஜாக் கெட்டோட சேர்த்துப் பின் பண்ணணும், ஒற்றைப் பட்டையா தொங்க விடக்கூடாது. தலைப்பை இழுத்து செருகணும். இல்லாட்டி போனால் ஒரு ருபா ஃபைன். சுத்த கட்டுப் பெட்டி ஸ்கூல். இன்னும் ஒரே வருஷம். அப்புறம் காலேஜ் போயிட் டால் இந்தத் தொல்லையெல்லாம் இல்லை...''

''ஆமாண்டி...ஒழுங்காயிருக்கச் சொல்லிக் கொடுத்தால் அது தொல்லையாத் தெரியுதா...? காலேஜ் போனால் இஷ்டப்படி ஆடலாம்ன்ற நினைப்பா...?''

''ஐயோ...நீ ஒன்னும்மா...நான் எதற்கோ சொன்னால் நீ வேற எதையோ பேசு... முதல்ல சாப்பாடு போடு. சண்டை

மில்லாமல் ஸ்கூலுக்குக் கிளம்பறேன்... எனக்கு நேரமாச்சு...''

''அதுசரி. இப்போ நேரமாச்சுன்னு பறந்துகிட்டு கிளம்பற மாதிரி ஸ்கூல் விட்டதும் வீட்டுக்கு வர்றதுக்கும் அதே பறக்கல் இருக்கட்டும். அங்க, இங்கன்னு சினேகிதிங்களோடு சேர்ந்து பராக்கு பார்த்துக்கிட்டு வரவேணாம்...''

ராஜாம்பாள் ஒரே மகளாயிற்றே என்றெல்லாம் பார்க்க மாட்டாள். அன்பு, ஆசை எல்லாம் மனத்தில இருந்தாலும் வெளிக் காட்ட மாட்டாள். செல்லம் கொடுக்க மாட்டாள். அவள் சரியானபடி வளர வேண்டும் என்பதால் மிக மிகக் கவனமாக இருந்தாள். அதனால் பேச்சு எப்போதும் சிடு சிடுவென்றுதான் வரும். முகம் கடுகடுப்பைக் காட்டும். அவள் பள்ளியிலிருந்து வீடு திரும்ப ஐந்து நிமிடங்கள் தாமதமானாலும் அலையாய் அலைவாள். 'டேய் வாசு! தங்கச்சி என் இன்னும் வரலைன்னு ஒரு நடை ஸ்கூல்வரை போய் பார்த்துக்கிட்டு வாடா' என்று மூத்த மகன் கல்லூரியில் படிப்பவனைக் கெஞ்சுவாள்.

''ஆமாம். பிராக் போட்டுக் கிட்டு ஸ்கூல் போற வயசு பாரு, யாரும் தூக்கிக் கிட்டுப் போக...போம்மா... நீ...அடுத்த வருஷம் காலேஜ் சேரப் போவுது... அதைப் போயி இப்படி தைரியமில்லாமல் வளர்த்தியானால் எப்படி...? வெளியில வந்து பாரு... பொண்ணுங்க எப்படி இருக்குன்னு... ஒரு அஞ்சு நிமிஷம் லேட்டானாலும் இப்படிப் பதறி எங்களையும் விரட்டறியே...'' என்று பாதி கேலியும், பாதி சிடுசிடுப்புமாகச் சொல்லி விட்டுப் போய் விடுவான் அவன்.

சின்னவன் சிவாவைக் கேட்டால் அவனிடமிருந்தும் இதே மாதிரி பதிலாகத்தான் வரும்.

''ஆமாண்டா, நாளைக்கு உங்களுக்குப் பொண்ணு பொறந்தால் இந்த பதைப்பு என்னன்னு புரியும்...'' என்று முணுமுணுத்துக் கொண்டே வாசலுக்குப் போகவும், ஜனனி படியேறவும் சரியாக இருக்கும். அத்தனை நேரப்



பதைப்பையும் சட்டென்று கோபமாக மாற்றிக் கொள்கிற, ரஸாயன வித்தையை எங்கு கற்றுக் கொண்டாளோ ராஜாம்பாள். சடாரென்று முகம் சிவக்க, குரல் காட்டமாக வரும்.

''ஏண்டி இத்தனை நேரம்...?''

அம்மாவின் கோபமும், அதற்கான காரணமும் புரிய ஜனனி கொஞ்சியும், கெஞ்சியும், ராஜாம்பாளின் கழுத்தைக் கட்டிக் கொண்டும் அவளைச் சிரிக்க வைத்து விடுவாள். தன் காரியத்தைச் சாதித்துக் கொண்டு போய் விடுவாள்...

அப்போதும் அதே மழுப்பலுடன்தான் குளியல் அறையிலிருந்து குரல் கொடுத்தாள். தலை நிறைய அம்மா எண்ணெய் வைத்து தேய்த்து விட்டதில் சீயக்காய் போட்டு முடியைக் கசக்க முடியாத சங்கடத்தில் உதவி செய்ய அம்மாவைக் கூப்பிட்டாள். ராஜாம்பாளிடமிருந்து பதில் குரல் வராமற் போகவே மீண்டும் சற்று உயர்த்தி சிணுங்கலாக அழைத்தாள்.

''அம்... மா...''

கரண்டியை ணங்கென்று மேடை மீது வைத்து விட்டு நடையைக் கடந்து ''என்னடீ...?'' என்று சலிப்பாகக் கேட்டவாறு ராஜாம்பாள் குளியல் அறையை நெருங்கினாள். கதவை ஒருக்களித்து இடைவெளியில் எட்டிப் பார்த்த மகளின் முகப் பிரகாசம் அவளையே ஒரு வினாடி அடித்து நிறுத்தியது. அந்த நிகு நிகுப்பும், வழ வழப்பும் மருட்டுகிற அழகாகத் தெரிய சட்டென்று உணர்விற்கு வந்தவளாகக் கேட்டாள்.

''என்னடீ கன்னுக்குட்டி மாதிரி ம்மா... ம்மான்னு அடிச்சுக்கறே...?''

''ஒன்னுமில்லேம்மா...'' என்று பயந்து போன மாதிரி குரலைத் தழைத்துக் கொண்டாள் மகள்.

''ஒன்னுமில்லாததற்கா அந்தக் கத்தல் கத்தினே...? ஏன், துண்டு கொண்டு போக மறந்துட்டியா...?''

''இல்லம்மா...கொண்டு வந்து வச்சிட்டிருக்கேன்...''

''உன் பாவாடை, தாவணி ஏதாவது வேணுமா...?''

''ம்ஹாம். இருக்கும்மா...''

''பின்னே, சீயக்காய் எடுத்து வச்சுக்கலியா...''

''ஒ வச்சிட்டிருக்கேனே...''

''வேற எதுக்குடி கூப்பிட்டே...? நான் என்ன சும்மா உட்கார்ந்திட்டிருக்கிறதா நினைப்பா ! இன்னும் சாம்பார் கூட கொதிக்கலை. அப்பாவும், ரெண்டு அண்ணன்மாருங் களும் டான்னு எட்டடிச்சா தட்டு போட்டுக் கிட்டு உட்கார்ந் துடப்போறாங்க. நீ வேற உபத்திரவப் படுத்தற, எதுக்குக் கூப்பிட்டேன்னு சட்டுன்னு சொல்லித் தொலை...''

''ஒன்னுமில்லேம்மா...நீ போ...நானே தலையைக் கசக்கிக்கிறேன்...''

''தலை கசக்கி விடணுமா...? அதை இத்தனை நேரம் சொல்றதுக்கென்ன...? வயசு பதினாறுமுடியப் போவுது, இன்னும் எண்ணெய் தேய்ச்சு குளிக்க வகை தெரியலை... உன் வயசுக்கு நான் மாமியார் வீட்டுக்கு வந்தாச்சி, உன் பெரியண்ணன் பொறந்தாச்சு. சின்னண்ணன் சிவா ஆறு மாசம் வயத்துல. நீ என்னடான்னா இன்னும் சீயக்காய் தேய்ச்சுக் குளிக்க ஆள் கூப்பிடற...

''என்னம்மா நீ...? எண்ணெயைக் கொஞ்சமாவையின்னு சொன்னாலும் கேட்கமாட்டேன்ற...ஒரு கப் எண்ணெயைத் தலையில் கவிழ்க்கற. எத்தனை சொன்னாலும் கேட்க மாட் டேன்ற. அப்புறம் தலைவாரிப் பின்னல் போடும்போது எண்ணெய் போகலேன்னு திட்டுவே...

''உன் கையாலாகாத தனத்திற்கு என்னைக் குறை சொல்லு...'' என்று அந்த அம்மாள் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைய ஜனனி கீச்சுக் குரலில் 'ஐய்யோ, என்னம்மா நீ...?' என்று அலறி எதிர்க் கட்டையில் போட் டிருந்த துண்டை உருவி உடம்பில் சுற்றிக் கொள்ள ராஜாம் பாள் அதட்டலாகச் சொன்னாள்:



''ஆமா. இவமட்டும் தனியா எங்கிருந்தோ வானத்து லேருந்து வந்து குதிச்ச மாதிரி கத்தறா... என் வயித்துல பொறந்து நான் பார்த்து வளர்ந்த பொண்ணு...இப்ப புதுசா என்ன வந்திடுச்சு...?''

''அதுக்காக இப்படியா கதவைத் தள்ளிக் கிட்டு உள்ளே நுழைவாங்க...? இன்னும் என்னை கவுன் போடற பொண் ணுன்னா நினைச்சுட்டிருக்கே...?''

''சரி...எற்கெனவே நேரமாயிடுச்சு. இன்னும் வாயாடி வேற நேரமாக்காதே. உக்காரு. சட்டுனு தலைமுடியைக் கசக்கி அலசிட்டுப் போறேன்...''

மறு வார்த்தை பேசாமல் உட்கார்ந்தாள். பெண்ணின் அழகிலும் முட்டியைத் தொட்ட அடர்த்தியான கூந்தலில் ஏற்பட்ட பெருமிதத்திலும் சீயக்காய் வைத்து கசக்க ஆரம்பித் தாள் ராஜாம்பாள். அவளுக்கே மூச்சு முட்டிற்று. முதுகுத் தண்டு விட்டுப் போயிற்று. கை வலிக்கத் தொடங்கிற்று. அத்தனைக் கிடையிலும் மகளை நினைத்து பாவப்பட்டாள். 'இந்தச் சின்னப் பொண்ணால மட்டும் தானே எப்படி கசக்கிக்க முடியும்...? சும்மா நாம் கோபப்படறோமே...' என்று முணகிக் கொண்டே செம்பு செம்பாக நீர் விட்டு அலசி துண்டால் முடிந்து விட்டு நிமிர்ந்தாள்.

''பாய்லர்ல தண்ணி இருக்குதாடி...?''

''இருக்கும்மா...இப்போதான் ஊத்தினேன்...''

''எரியுதா பாரு, இல்லைன்னால் எரியப் போடறேன்...''

''இப்ப வேணாம்மா. நான் குளிச்சிட்டு வந்ததும் போட்டுக்க. இல்லைன்னால் புகையற புகைச்சலில் பாய்லர் எரியுதோ, இல்லையோ, கண் எரிஞ்சுடும்...''

''சரி, சீக்கிரம் உடம்பு தேய்ச்சுக்கிட்டு வெளியே வா.''

''இதோ ஐந்தே நிமிஷத்துல வந்துடறேம்மா...''

பரபரவென்று குளித்து முடித்து வெளியில் வந்தாள். தன் அறைக்குப் போய் கறுப்புப் பட்டுப் பாவாடையும், கறுப்பு ஜாக்கெட்டும் வெளிர்மஞ்சள் தாவணியும் அணிந்து கொண்டாள். நிகுநிகுவென்று மின்னிய முகத்தை சந்தனப் பவுடரால் ஒற்றினாள். நெற்றியில் சிவப்புச் சாந்தில் பொட்டிட்டு அதற்கு மேல் சின்னதாய் விபூதியைக் கீறினாள். தலைமுடியைப் பிரித்து துண்டால் அழுந்தத் துடைத்து சிடுக்கு எடுத்து வாரி தளர இரட்டைப் பின்னல்களாகப் போட்டுக் கொண்டாள். மேஜை மீது கிடந்த புத்தகங்களில் வேண்டியவற்றை அடுக்கி எடுத்து வைத்து அம்மாவைத் தேடி சமையலறைக்குப் போனாள்.

''அம்மா...சாப்பாடு போடும்மா. ஸ்கூலுக்கு நேரமாயிடுச்சு...''

பரபரத்து தனியாக அல்லாடிக் கொண்டிருந்த ராஜம்பாளுக்குக் கோபம் வந்தது.

''தனியா திண்டாடிட்டிருக்கேன். கூட ஒத்தாசை எதுவும் செய்யாமற்போனாலும் ஆம்பிளைங்களுக்கு சமமா அதட்டுற யேடி...உக்காரு. சாம்பாரும், வெண்டைக்காய் பொறியலும் ஆயிருக்கு. சாப்பிட்டுப் போ. பகலுக்கு தயிர்சாதம் போடறேன் டிபன் டப்பாவிலே.''

சாப்பிட்டு முடித்து மார்போடு புத்தகங்களை அணைத்து ''போயிட்டு வரேம்மா...'' என்று படியிறங்கி தெருவில் நடந்த மகளைப் பார்க்கிற ஆசையில் அவசர அவசரமாகக் கையைக் கழுவி முந்தானையில் துடைத்துக் கொண்டே ஓடி வந்தாள் ராஜாம்பாள். வீட்டை விட்டுச் சற்று தள்ளிப் போய் விட்ட மகளை பெருமை பொங்கப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

அந்த உயரமும், நிறமும், வாகான உடம்பும், செதுக்கின முகமும்...

நல்ல பிள்ளையா தேடி இந்தப் பிஞ்சு வயசுல கல்யாணத்தை முடிச்சுடணும். இந்தக் காலத்துப் பொண்ணுங்



களைப் போல் முப்பதுக்கு மேல் முற்றிய முதிர்ச்சி தட்டினப்புறம் கல்யாணத்துக்கு மாப்பிள்ளை தேடக் கூடாது. இன்னிக்கு அவரு கிட்ட இதைப் பற்றிப் பேசி முடிவுக்கு வரணும்...

தீர்மானித்தவளாக உள்ளே திரும்பிய ராஜாம்பாள் அன்று முழுதும் ஜனனிக்கு மாப்பிள்ளை தேடுகிற நினைவிலேயே இருந்தாள்.

## 2

கங்காதரன் வந்ததும் ராஜாம்பாள் அவருக்கு சாப்பாடு போட்டுக் கொண்டே நிதானமாக ஜனனியின் கல்யாணத்தைப் பற்றி ஆரம்பித்தாள்.

''எங்க... நம்ம ஜனனி உயரமும் பருமனுமா பெரிய பொம்பளை மாதிரித் தெரியலே...?''

''சீ...சீ...!'' என்று ரஸத்தை உறிஞ்சினார் அவர்.

''வயசு பதினாறாகலை இன்னும் அதுக்குள்ளாற பெரிய பொம்பளைன்னு சொல்ற...''

''இல்லைங்க... ஒரு பார்வைக்குச் சட்டுனு பொம்பளை மாதிரி தெரியுதுங்க...''

''சரி... சரி'' என்று சிரித்தார் அவர்.

''இப்படி அழுத்தி சொல்றதைப் பார்த்தா மனசுக்குள்ள எதையோ முடிவு செய்திட்டு வந்து பேசறேன்னு புரியுது. என்ன விஷயம்னு நேரிடையாகவே சொல்லிடு...''

''ஒன்னுமில்லீங்க... எனக்கென்னவோ அதுக்குக் கல்யாணம் பண்ணிப் பார்க்கணும்னு தோணுதுங்க...''

''யாருடி இவ... பதினாறு வயசுல யாராவது கல்யாணம் செய்வாங்களா...? மேஜராகறதுக்கு முன்னால் செய்யற கல்யாணம் சட்டப்படி செல்லாதுடி...''

''அட... நீங்க என்ன இப்போ வந்து சட்டம் பேசறீங்க... என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறப்போ அந்தச் சட்டம் எங்க போச்சு...? பெரியவளாகி மூணு மாசம் முழுசா முடியலை அதுக்குள்ள வந்து பொண்ணு கேட்டு பேசி முடிச்சுக்கிட்டீங் களே, மறந்தா போயிடுச்சு...? அதுக்கே உங்கம்மா எம்புள் ளைக்கு வயசாயிடுச்சுன்னு நூறு தரம் சொன்னாங்க...''

''அது அந்தக் காலம்டி... இருபத்தைஞ்சு வருஷத் துக்கு முந்தின காலம். இப்போ அப்படியில்லை. நிறைய மாறிப் போயிருக்கு. நீங்க இருந்த மாதிரி இந்தக் காலப் பொண்ணுங்க இருக்கிறதில்லை. வீட்டை விட்டு வெளிய வராமல் எந்தப் பொண்ணு இருக்கு? உன்னை மாதிரி அஞ் சாவதோட எந்தப் பொண்ணு படிப்பை நிறுத்துது? வெறும் பால் கணக்கு மோர் கணக்கு பார்க்கத் தெரிந்தால் போறும்னு எது நினைக்குது? இப்போதான் ஆம்பிளைப் பசங்களுக்கு சரியா படிக்குதுங்க, உத்யோகத்துக்குப் போவுதுங்க..''

''அப்படின்னா நீங்க உங்க மகளை உத்யோகத்துக்கா அனுப்பப் போறீங்க...?''

''யாருடீ இவ எதைச் சொன்னாலும் பிடுச்சுக்கறா... உத்யோகத்துக்கு அனுப்பப் போறதாகவா சொன்னேன்...?''

''பின்ன என்ன சொன்னீங்களாம்...?''

''எல்லாரும் படிக்கறாங்க. நம்ம பொண்ணும் படிக்கட்டு மேன்னு நினைக்கிறேன்.''

''படிச்சு என்ன செய்யப் போவுது...? வேலைக்கா போகப் போவுது?''

''வேளைக்குப் போகலேன்னாலும் நல்லது கெட்டது தெரியும். நாலு விஷயம் புரியும். உலக விவங்காரகளைத் தெரிஞ்சுக்கும்...''

''அதெல்லாம் ஒண்ணும் வேணாம். அவ எதையும் தெரிஞ்சுக்க வேணாம். ஒழுங்கா குடித்தனம் நடத்தத் தெரிஞ் சால் போறும். வீட்டுக்காரனோட சந்தோஷமாக இருக்கத் தெரிஞ்சால் போறும்...''



''அதெல்லாம் சரிடி... அவ ஒரு டிகிரி எடுத்தால் நாளைக்கு எது நடந்தாலும் சொந்தக் கால்ல நிக்கிற தைரியம் வரும்''.

''எதுவும் நடக்காது. அவ சொத்தக் கால்ல நிற்கவும் வேணாம். ஒழுங்கா குடியும் குடித்தனமுமா இருக்கட்டும். அது போறும்...''

''பொண்ணையும் உன்னை மாதிரியே ஆக்க நினைக் கறே...?''

''அதுல என்னங்க தப்பு... இத்தனை அழகான பொண்ணை வெளியே அனுப்பிட்டு திரும்பி வர்ற வரைக்கும் நான் வயிற்றுல நெருப்பைக் கட்டிக் கிட்டில்ல நிக்கறேன். அவளை ஒருத்தன் கைல பிடிச்சுக் கொடுத்துட்டா அதுக்கப் புறம் அவன் பாடு...''

ஒன்றும் சொல்லாமல் யோசித்தார் கங்காதரன். சில வினாடிகள் அவர் முகத்தையே பார்த்தவாறு நின்றிருந்த ராஜம்பாள் பொறுமை இழ்ந்தவளாகக் கேட்டாள்.

''என்னங்க யோசனை...''

''ஒன்னுமில்லே, புள்ளை படிக்குதே...ஒரு வருஷம் படிச்சதுன்னால் ஸ்கூல் படிப்பு முடிஞ்சுப் போயுடுமேன்னு நினைச்சேன்...''

''அதெல்லாம் ஒன்னும் வேணாம். தள்ளிப் போட்டோம் னால் தள்ளிக்கிட்டே போயிடும். அதனால இப்பவே மாப்பிள்ளை பார்க்கலாம்...''

''ஏண்டி...நீ அவசரப் படற... ஜனனி என்ன சொல்லுமோ?''

''அதைக் கேட்டுக்கிட்டா செய்வீங்க...? என்னைக் கேட்டா எங்க வீட்டுல கல்யாணம் முடிச்சாங்க...?''

''அதே மாதிரி அதைக் கேட்காமலே செய்யச் சொல்றியா...?''

''அதுக்கு என்னங்க தெரியும், சின்னப் பிள்ளை... நாம தான் பார்த்து செய்யணும்...''

''ஏண்டி அப்படின்னா என் தங்கச்சி மகன் துரைசாமி—''

பட்டென்று குறுக்கிட்டாள் ராஜம்பாள்.

''இதப் பாருங்க உங்க தங்கச்சி மகனும் வேணாம். என் தம்பி மகனும் வேணாம். சொந்தத்திலேயே வேணாம். வெளியிடமா, வெளியூரா பாருங்க. திரும்பத் திரும்ப உள்ளுக்குள்ளேயே சுற்றி சுற்றி வரவேணாம்.''

''அப்படின்னா சரி'' என்று எழுந்து கொண்டார் அவர்.

அன்றிரவு முழுதும் தூங்காமல் புரண்டு புரண்டு படுத்தார் கங்காதரன். ராஜம்பாள் சொன்னதை யோசித்துப் பார்த்தார். அதிலும் நியாயமிருப்பதாகப்பட்டது. இந்த வயசிலேயே ஜனனிக்குக் கல்யாணம் பண்ணி விடுவதில் நிறைய அனுகூலங்கள் இருந்தன. தங்களின் பொறுப்பு தீரும். இந்த காலத்துக் கல்யாணங்கள் போல் இல்லாமல் இளவயதில் நிற்க வைத்து கண்குளிரப் பார்க்கலாம். வயது முற்றி, லேசாய் நரை ஓடி, கிழடுதட்டி பெண்ணிற்கு முப்பதும், முப்பத்தைந்துமாகி, ஆணிற்கு நாற்பதைத் தாண்டி மாமா -மாமியாகத் தோற்றம் அளிக்கிற போதுதான் கல்யாண ஞாபகமே வருகிறது. அதன் பின்னர் வரன் தேடி முடித்து பந்தலில் நிற்கிற கோலம் கல்யாணமா; இல்லை அறுபதாம் கல்யாணமா என்று கேட்க வைக்கிறது. மனதிற்கு ரம்யத்தைத் தருவதற்கு பதில் ஒருவித சலிப்பையே ஏற்படுத்துகிறது. அப்படியில்லாமல் சிறு வயதில் கண்ணிற்கும், மனதிற்கும் குளிர்ச்சியாய்க் கல்யாணம் செய்து முடிக்காலாம். காலத்தில் பூத்து காய்க்கிற மரங்களைப் போல் குழந்தைகளும் நேரத்தில் பிறக்கும். அவர்களைப் படித்து ஆளாக்குவதற்குள் இவர்களுக்கும் அப்படி ஒன்றும் வயதாகி விடாது. உடல் தளர்ந்து மனம் சோர்ந்து ஒடுங்கிப் போய்விட மாட்டார்கள். பென்ஷன் வாங்குகிற நிலைமையில் இருக்க மாட்டார்கள். அதிலும் ஜனனி அழகான பெண். இவர்கள் குடும்பத்திலும், குலத்திலும் இல்லாத ஓர் அதீத அழகு அவளிடமிருந்தது. அதிகாலையில் மலர்ந்து பனித்துளிகளோடு நிற்கும் செடியின் பூக்களைப் போன்ற சௌந்தரியம். பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல் ஒரு வசீகரம். அடித்து நிறுத்துகிற தோற்றம்.



இவை அத்தனையும் அந்தக் குடும்பத்திற்குச் சொந்தமில்லாத ஒரு விஷயம். இதுவரை அவர் பக்கமோ, ராஜம்பாள் பக்கமோ யாரும் அத்தனை அழகில்லை. அந்தக் குடும்பத்துப் பெண்களிலும் நிறம் உண்டு. ஆனால் இவளைப் போல் சந்தன நிறமில்லை. அழகான பெண்கள் உண்டு. ஏன் ராஜம்பாளே அழகுதான்.

ஆனால், ஜனனி மாதிரி அடித்து நிறுத்துகிற அழகில்லை. பார்வையைத் திருப்ப ஒட்டாமல் கட்டிப் போடுகிற அழகில்லை.

அந்த அதீத அழகுதான் ராஜம்பாளை சீக்கிரம் கல்யாணம் பண்ணி வைத்துவிட வேண்டும் என்கிற வேகத்தைக் கொடுத்திருக்கிறது என்று நினைத்துக் கொண்டார் கங்காதரன். அப்படி இருந்தால் அதிலும் தவறில்லை. இப்படிப்பட்ட அழகைப் பாதுகாப்பது என்பது சாதாரண விஷயமில்லை. அதற்குப் பயந்து உள்ளே பூட்டி வைக்கவும் முடியாது. பின்னாலேயே பாதுகாக்கவும் துணைக்கு ஆளனுப்பிக் கொண்டிருக்கவும் இயலாது.

'சரி, பெண் ரொம்ப சாமர்த்தியமான பெண், தன்னை எந்தச் சூழ்நிலையிலும் காப்பாற்றிக்கொண்டு விடும்' என்றும் சொல்ல முடியாது. ஜனனி அத்தனை கெட்டிக்காரப் பெண்ணில்லை. ஓடுகிற பாம்பிற்குக் கால் எண்ணுகிற சாமர்த்தியமில்லை. சுயமாய் சிந்தித்து செயல்படுகிற திறமையில்லை. சொன்னால் அதை தட்டாமல் செய்வாள். அந்த

வேலையிலும் குறை இருக்கும். இவளிடம் சொல்வதைவிட நாமே செய்துகொண்டு விடலாம் என்று தோன்றும். படிப்பிலும் அப்படி ஒன்றும் பிரமாதமில்லை, விட்டுவிட்டால் சந்தோஷமாக வீட்டில் உட்கார்ந்து விடுகிற வர்க்கம்தான்.

''எம்மா இத்தினி குறைச்சலா மார்க் வாங்கிட்டு வரே...?'' என்று கங்காதரன் கேட்டால் ''போங்கப்பா... டீச்சர் யாருமே பாடமே ஒழுங்கா சொல்லித்தர மாட்டேன் றாங்க. எல்லாம் நாங்களா படிக்க வேண்டி இருக்குது, ரொம்ப போரடிக்குது...'' என்பார்கள்.

''படிப்பு போர் அடிக்குதா...என்னம்மா நீ...?''

''இன்னும் ஒரு வருஷத்தைத் தள்ளிவிட்டால் ஜம்முனு வீட்டுல இருக்கலாம்ப்பா...''

''வீட்டுல இருந்துகிட்டு என்ன செய்யப் போற...?''

''என்ன செய்ய முடியாது...அம்மாவுக்கு சமையல் கட்டுல உதவி செய்யலாம் குமுதம், கல்கின்னு படிச்சு உலக விஷயம் தெரிஞ்சிக்கலாம்...''

''எம்மா...பாடப் புஸ்தகம் கலேஜ் படிப்புல இல்லாததை பத்திரிகை படிச்சா தெரிஞ்சுக்கப் போற...?''

''பத்திரிகை படிச்சாதாம்ப்பா நிறைய விஷயம்தெரிய வருது...''

''அப்படி என்ன விஷயம்லாம்மா தெரிஞ்சுக்கிட்ட...?''

''கமல்-சரிகா விஷயம், ரஜினி ஹரே ராமா இயக்கத்துல சேர்ந்த விஷயம், ஸ்ரீதேவி எத்தனை இந்திப் படம் நடிக் கிறாங்க, ஜெயலலிதா அரசியல்ல...''

''போதும்மா...இந்த உலக விஷயத்தைச் சொல்றியா நீ...? நான் ஏதோ இன்டர் நேஷனல் பாலிடிக்ஸ் பத்தி பேசப் போறியோன்னு நினைச்சேன்...சரி...போம்மா'' என்று விட்டு விட்டார் அவர்.



மகளின் மனோபாவம் பற்றி அவருக்கும் தெரிந்துதான் இருந்தது. படிப்பில் அவளுக்கு நாட்டமில்லை. இவர்களின் வற்புறுத்தலினாலேயே ப்ளஸ் 2 எட்டியிருக்கிறாள். இவர் தான் மகள் கல்லூரிப் படிப்பை முடித்துப் பட்டம் பெற வேண்டுமென்று ஆசைப்படுகிறாரே தவிர அவளுக்கு அந்த ஆசை எதுவுமில்லை. அதனால் படிப்பு பாதியில் தடைப்படுவ தற்கு அவளிடம் மறுப்பு எதுவும் எழாது. அதனால் அது பிரச்சினையாக இருக்காது. படிப்பு இல்லாமல் வீட்டில் சும்மா வைத்திருப்பதைவிட கல்யாணம் செய்து கொடுப்பது தான் நல்லது.

யோசித்து மகளின் திருமணத்தை முடிப்பதுதான் நல்லது என்கிற முடிவிற்கு வந்தார் கங்காதரன்; ராஜம்பாள் சொன்ன மாதிரி சொந்தத்தைவிட வெளியில் மாப்பிள்ளை பார்ப்பது உசிதம் என்று தோன்றிற்று.

ஆனால் இவர்களாக மாப்பிள்ளை தேடிப்போகமுடியாது. பிள்ளை வீட்டுக்காரர்கள்தான் பெண் கேட்டு வரவேண்டும். அதற்கு பெண்ணிற்குக் கல்யாணம் செய்யத் தயாராக இருக்கிற செய்தி நாலு பேரை எட்டினால் போதும். இந்த அழகைக் கொத்திக் கொண்டு போக போட்டி போட்டுக் கொண்டு வீடு தேடி வருவார்கள்... அதனால் நாளைக்கே இவர்களின் குடும்ப நண்பர் மாணிக்கவாசகத்திடம் ''ஜனனிக்கு கூடிய சீக்கிரம் கல்யாணம் பண்ணுகிற முடிவுக்கு வந்துட்டேம்ப்பா; முடிஞ்சா இந்த தையிலயே முடிச்சுடலாம்னு இருக்கேன்...'' என்று சொல்லி வைத்தால் போதும். வீட்டைத் தேடி வரன்கள் குவியும். அதில் பெயர்ராசி, பொருத்தம் பார்த்து மாப்பிள்ளை இவளுக் கேற்ற அழகாகவும் இருந்தால் உடனே தாம்பூலம் மாற்றி நிச்சயம் செய்து விடலாம்...

அந்த முடிவு கொடுத்த நிம்மதியில் விடியற்காலை மூன்று மணிக்கு அப்புறம் மெல்லக் கண் மூடினார் அவர்.

# 3

மறுநாள், பிற்பகல். அதிக வியாபாரமின்றி கடையில் உட்கார்ந்து கொண்டிருந்தவர், சட்டென்று நினைவிற்கு வந்தவராக எழுந்து கொண்டார்.

''எலே சோமு...கடையைக் கொஞ்சம் பார்த்துக்கடா... நான் வெளிய போயிட்டு வாறேன்...'' என்றார்.

''எப்ப, முதலாளி வருவீங்க...?'' என்று ஒப்புக்கு கேட்டான்.

அவர் நேரம் கழித்து வந்தால் அவனுக்குத் திருப்தி. அது வரை அவன் தான் அத்தனை பெரிய கடைக்குத் தற்காலிக முதலாளி. சாமான் வாங்க வருபவர்களிடம் சற்று தோரணையாகப் பேசலாம். அலட்சிய பதிலாகச் சொல்லலாம், கால் நீட்டி நாற்காலியில் உட்காரலாம். வாடிக்கையாளர்கள் யாரும் வராத பட்சத்தில் லேசாய் கண்மூடி அப்படியே தூங்கலாம். தாராளமாய் வெல்லமும் காய்ந்த உரித்த வேர்க் கடலையும் கலந்து சாப்பிடலாம். பிடி சர்க்கரை, உடைத்த கடலை, எதையாவது அள்ளி வாயில் போட்டுக் கொள்ளலாம். ஓரிரு முந்திரி பருப்பு கூட மெல்லலாம், கங்காதரன் கடையில் இல்லாத சந்தர்ப்பங்களில் இத்தனை வசதிகளும் இவனுக்கு உண்டு. இது தவிர டெலிபோன் அடிக்கும். எடுத்துப் பேச முடியும். அழகாய் ரஜனி ஸ்டைலில் நின்று அலட்சிய பதிலாய்...

நகர மாட்டாரா அவர் என்ற ஆதங்கத்தில் பையன் காத்துக் கொண்டு நிற்க படியிறங்கிக் கொண்டே கங்காதரன் அதட்டலாகச் சொன்னார்.

''பக்கத்துத் தெருவுக்குத்தான் போறேன். பத்தே நிமிஷத்துல வந்துடுவேன். ஜாக்கிரதையாக இரு...''

தெருவில் இறங்கி நடந்து கொண்டே மாணிக்க வாசகத்திடம் விஷயத்தை எப்படிச் சொல்வது என்பதை மனதிற்குள்ளாகவே தீர்மானப்படுத்தலானார்.



''மாணிக்கம்...எம் பொண்ணுக்கு நல்ல எடமா இருந்தாச் சொல்லேன். கல்யாணம் பண்ணிடலாம்னு தீர்மானிச்சிருக்கேன்...'' என்று சொல்லலாமா...? அல்லது ''உனக்குத் தெரிஞ்ச பையன் யாரும் இருக்காங்களா...? என் சிநேகிதனுடைய பொண்ணுக்கு மாப்பிள்ளை தேடறாங்க. நல்லாச் செய்து கொடுப்பாங்க...'' என்று யாருக்கோ மாதிரிப் பேசலாமா...? என்ன செய்வது...?

இவர் யோசித்துக் கொண்டிருந்த போதே மாணிக்க வாசகத்தின் வீடு வந்தது. பெரிய வீடு. மாடியும், கீழும், முன்னால் கார் நிற்கிற வசதியும், பின்னால் மாட்டுக் கொட்டிலுமாகப் பெரிய இடம். குளு குளுவென்று காற்று வீச சுற்றிலும் குட்டைத் தென்னை மரங்கள். பொன் மூட்டை கட்டித் தொங்கவிட்ட மாதிரி காய்த்துத் தொங்கின தேங்காய்கள். மாணிக்கவாசகம் இருப்பதற்கு அடையாளமாக வாசலில் அவரது பச்சையும், வெள்ளையுமான ஸ்டாண்டர்ட் கார் நின்றிருந்தது.

மாணிக்கவாசகத்திற்கும் வியாபாரம்தான். இவரைப் போல் பலசரக்குக் கடையில்லை. அரிசி மண்டி. மொத்தமாய் ஆயிரம் மூட்டைகள் அடுக்குவதற்கு வசதியாக மண்டி கூடப் பெரியதுதான். இரண்டு பேரும் ஒன்றாகத் தொழில் தொடங்கினவர்கள். கிடு கிடுவென்று மாணிக்கவாசகத்திடம் பணம் சேரத் தொடங்கிற்று. இவரிடம் சற்று மெதுவாய் நிதானமாய் சேர்ந்து கொண்டு வருகிறது.

மாணிக்கவாசகத்தின் வீட்டில் கால் பங்கு வீடு இருக்கும் இவருடையது. அதுவும் இவருடைய அப்பா எழுதி வைத்து விட்டுப்போனது. பூர்வீகச் சொத்து. பழைய கால வீடு அதில் ஒரு சின்ன செங்கலைக் கூட இடித்துக் கட்டாமல் அப்படியே வைத்திருந்தார். நாலைந்து வருடங்களுக்கு ஒரு முறை பொங்கல் சமயத்தில் வெள்ளை அடிப்பதோடு சரி. அதைக் கூட கூடுமான வரை தள்ளிப்போட நினைப்பவர் இரண்டு பிள்ளைகளின் கல்லூரிப் படிப்பு, பெண் கல்யாணத்திற்காக நகைகள், பாத்திரங்கள்...

கொஞ்சம் கொஞ்சமாய் செய்து கிட்டத்தட்ட நாற்பது சவரன் நகைகள், எவர்சில்வர் பாத்திரங்கள், சில வெள்ளிச் சாமான்கள் எல்லாம் சேர்த்திருந்தார். தினசரி சாப்பாட்டுச் செலவு, துணி, படிப்புச் செலவு போக சேமிப்பது என்பது கஷ்டமான விஷயமாகத்தான் இருந்தது. கையில் எத்தனை பணம் இருந்தாலும் வியாபாரம் இழுத்துக் கொண்டது. தான் இத்தனைக் கஷ்டப்படுகிறபோது மாணிக்கவாசகத்தினால் மட்டும் சுலபமாக எவ்வாறு பணம் பண்ண முடிகிறது என்ற யோசனை வந்தது. அவனுக்கு ஒரே மகன், மகள் இல்லை. மனைவியும் பெரிய இடத்துப் பெண். எல்லாவற்றையும் விட அதிர்ஷ்டம் அவன் பக்கம் இருக்கிறது...அதை நினைத்து பெருமூச்சு விடுவதைவிட சின்னத்தனம் வேறொன்றும் இருக்க முடியாது.

கங்காதரன் அமைதியாய் கார் நிறுத்தும் இடத்தைக் கடந்து உள்ளே படியேறியதும் நடையிலேயே சாய்வு நாற்காலியில் சாய்ந்து வெற்றிலை மென்று கொண்டிருந்த மாணிக்கவாசகத்தைப் பார்த்தார். அதே நேரத்தில் மாணிக்கவாசகமும் அவரைத் திரும்பிப் பார்த்து வெற்றிலை வாயுடன் முகம் மலரக் கூப்பிட்டார்!

''வாவ்ழா...கங்கு...''

கங்காதரன் புன்னகைத்து எதிர்கித்தான் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு சொன்னார்.

''நீ போய் முதல்ல வெற்றிலையை துப்பிட்டு வா. முக்கியமான விஷயம் ஒன்னு பேசணும்னு வந்திருக்கேன்...''

''என்ன அப்பிழி முக்கியம்...?''

''நீ துப்பிட்டு வந்து பேசப் போறியா, இல்லை நான் வந்த மாதிரியே கிளம்பிப் போயிடட்டுமா...?

அவர் எழுந்து வெளிச்சுவர் ஓரமாய் வாயினுள் புகையிலையோடு அடக்கிக் கொண்டிருந்ததைத் துப்பிவிட்டு வந்து உட்கார்ந்தார்.



''ம்...இப்பச் சொல்லு...இரு இரு—முதல்ல என்ன சாப்பிடற? நல்ல வெயில்ல நடந்து வந்திருக்க...?''

''ஒண்ணும் வேணாம்ப்பா...''

''ஆமா, இப்பத்தான் புதுசா வீட்டுக்குள்ள நுழையற... முன்னபின்ன பழக்கமில்ல...அதனால தயங்கற. போப்பா...'' என்ற மாணிக்கவாசகம் உள்ளே திரும்பி ''மீனாட்சி...'' என்று மனைவிக்குக் குரல் கொடுத்தார்.

''நம்ம கங்காதரன் வந்திருக்கான். சில்லுனு குடிக்க ஏதாச்சும் கொண்டு வா...''

அந்த அம்மாள் ஐஸ் பெட்டி மோரில் பதமாய் உப்பிட்டு கால்படி அளவிருந்த அந்த டம்ளர் நிறைய நுரை ததும்பக் கொண்டு வந்து வைத்துவிட்டு கங்காதரனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே கேட்டாள்.

''சௌக்கியமா இருக்கீங்களாண்ணே?''

''ஹா...இருக்கேம்மா...''

''அண்ணி எப்படி இருக்காங்க...?''

''நல்லா இருக்கா...''

''ஜனனி...?''

''அதுக்குத்தான் கல்யாணம் செஞ்சுடலாம்னு முடிவு பண்ணியிருக்கோம்...''

''என்ன...என்ன...!'' என்று சடாரென்று தலையை உயர்த்தினார் மாணிக்கவாசகம்.

''ஜனனிக்கு கல்யாணம் செய்ய முடிவு பண்ணியிருக்கியா?''

''ஆமா...ம்...'' என்று கங்காதரன் மெதுவாகச் சொன்னார்.

''ஏம்பா...உனக்கென்ன பைத்தியமா பிடிச்சுடுச்சு ப்ளஸ் 2 படிக்கிற பதினாறு வயசுப் பொண்ணுக்குக் கல்யாணம் பண்ண...?''

''அதில்லை ராஜம்பா ரொம்ப அவசரப்படுத்தறா...''

''அப்படி அவசரப் படும்படியா என்ன நிர்ப்பந்தம் வந்துடுச்சு இப்போ...?''

''நிர்ப்பந்தம் ஒன்னும் வரலே. அவளுக்குத்தான் மகளைக் கல்யாண மேடையில் பார்க்கணும் என்கிற ஆசை வந்திருக்கு...''

''அதுசரி, பொண்டாட்டி ஆசைப்படறான்னு மகளோட படிப்பு,எதிர்காலம் எல்லாத்தையும் வீணாக்கப்போறியா...?''

''என்னப்பா நீ...?'' என்று சுள்ளென்று முகத்தைச் சுறுக்கினார் கங்காதரன். உள்ளுக்குள் முள் தைத்தமாதிரி ஒரு வேதனை ஏற்பட்டது.

''முதல் முதலா கல்யாணம்னு பேசறப்போ எதிர் காலத்தை வீணாக்கப் போறியான்னு ஒரு பேச்சு கேட்கற...? நல்ல விஷயமா, நல்ல பேச்சா பேசக்கூடாதப்பா...''

சட்டென்று கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டார் மாணிக்கவாசகம். அப்போது தான் தன் பேச்சிலிருந்த தவறு பிடிபட்டது. அவருக்கே என்னவோபோல் இருக்க அதை ஈடுகட்டுகிற மாதிரி கலகலவென்றும் வேகமாகவும் தொடங் கினார்.

''சீ...பைத்தியம் மாதிரி உளறாத கங்கு. நல்ல அழகான பொண்ணு. படிச்சதுன்னால் நல்லா இருக்குமே என்ற ஆதங்கத்துல ஏதோ தவறி வந்திடுச்சு, விடு...இப்போ ஜன னிக்கு கல்யாணம் பண்ணனும் என்கிற முடிவிற்கு நீயும் தங்கச்சியும் வந்துட்டீங்க. அவ்வளவுதானே...? செஞ்சுப் புடுவோம். ஜாம் ஜாம்னு நடத்திப் புடுவோம். மாப்பிள்ளை எப்படி இருக்கணும், என்ன படிச்சிருக்கணும், உள்ளூரா வேணுமா, வெளியூரா என்ற எல்லா விவரத்தை யும் சொல்லிவிட்டுப் போயிட்டியானால் ஒரே வாரத் துல நிச்சய தாம்பூலம் மாற்றிக்கலாம். அதுக்கு நான் பொறுப்பு. மாப்பிள்ளை எப்படி இருக்கணும்னு நினைக்குது தங்கச்சி...?''



அந்தப் பேச்சைக் கேட்ட பின்னர் கங்காதரனின் முகச் சுணுக்கமும், உறுத்தலும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டே வந்து அடங்கிப் போயிற்று. நெருடல் தீர்ந்த நிலையில் சிறிது உற்சாகத்துடனே ஆரம்பித்தார்.

''சொந்தமோ, உள்ளூரோ வேணாம்னு அபிப்ராயப் படறா அவ. எங்கேயாச்சும் வெளியூர்ல, நல்லா படிச்சு, கை நிறைய சம்பாதிக்கிற பிள்ளையா பார்க்கச் சொல்றா...''

''வெளியூர்னால் எந்த ஊரு...? இங்கேயே தஞ்சாவூர், கும்பகோணம், திருச்சி பக்கமா-இல்லே பெங்களூர், ஹைதராபாத் பம்பாய்னு தள்ளின ஊரா...?''

''தள்ளின ஊராவே பார்த்திடலாம்...''

மாணிக்கவாசகம் முகவாயைத் தடவியபடி யோசித்தார்.

''ஏம்ப்பா...ஒரே பொண்ணு, அத்தனை தூரம் தள்ளியா கொடுக்கப் போற...?''

''தூர இருந்தால் நல்லதுதானே...நாம் போய் பத்து... நாள் தங்கி ஊர் சுற்றிப் பார்க்கலாம். அவளும் வந்து தங் கலாம். இதெல்லாம் பக்கம்னால் சுவாரஸ்யப்படுமா...?''

''அது சரி...ஆமாம் என்ன படிச்சிருந்தால் தேவலை?''

''ஒரு டாக்டர், இன்ஜினியர்னு பார்த்தால்...?''

''டாக்டர்... இன்ஜினியர்னு...''—அரண்டு போனார் மாணிக்கவாசகம்.

''என்னப்பா விளையாடற... அந்தப் படிப்புக்கு ஏற்ற மாதிரி செய்ய முடியுமா நம்மால...?''

''நம்மாலேன்னு ஏன் உன்னையும் சேர்த்துக்கறே...?''

''சரி, அந்தப் பேச்சை அப்புறம் வச்சுக்கலாம். இப்போ முக்கியமானதைப் பேசலாம். டாக்டர் மாப்பிள்ளை, இன்ஜி னியர் மாப்பிள்ளைன்னால் செய்து கொடுக்த் தயாரா இருக் கியா...?''

''இதப்பாரு மாணிக்கம். பொண்ணுக்கு என்னால ஒரு நாற்பது ஐம்பது சவரனுக்கு செய்து போட முடியும். பித்தளை, எவர்ஸில்வர் பாத்திரங்களுக்குக் குறைச்சல் இல்லை. வெள்ளியிலும் ராஜம்பாள் ஏதேதோ வாங்கி வச்சிருக்கு. அது தவிர குறைவில்லாம கல்யாணச் செலவு செய்துதர முடியும்...''

''நீ சொன்ன இத்தனையும் சாதாரண மாப்பிள்ளைங்களுக்குதான். இன்ஜினியர், டாக்டருன்னு போனால் கைல பணம் தரணும். ஸ்கூட்டர், காரு வாங்கித் தரணும், மிக்ஸி, க்ரைண்டர், பிரிட்ஜுன்னு எல்லாம் கொடுக்கணும்...''

''என்னப்பா இதெல்லாம் அநியாயமாயிருக்கு... நம்பள்ல இதெல்லாம் வழக்கமில்லையேப்பா...''

''இப்போ எல்லாருக்குமே இது பொது வழக்கமாயிடுச்சு...''

''நீ சொல்றதைப் பார்த்தால் செலவு எக்கச்சக்கமா ஓடும் போல இருக்கே...''

''உன் பொண்ணு நல்ல லட்சணம். அதுக்கு ஆசைப்பட்டு அதிக சீர் இல்லாமல் கூட கட்டிட்டுப் போகலாம். பாக்கறேன். உனக்கும் உன் பொண்ணுக்கும் அதிர்ஷடமிருந்தால் நடக்கும்.''

''பார்க்கலாம்'' என்று எழுந்து கொண்டார் கங்காதரன்.

''நான் வரேன். சீக்கிரமா பார்த்துச் சொல்லு... ராஜம்பாள் குணம்தான் உனக்குத் தெரியுமே... நினைச்சது நடக்கலேன்னால் குளவியாகக் கொட்டிடுவா...''

''சரியா ஒரு வாரம் கொடு பார்த்து முடிச்சுடலாம்...''

## 4

ஜனனிக்கு நல்ல இடத்தில் கல்யாணமாக வேண்டும் என்கிற அக்கறை மாணிக்கவாசகத்திற்கும் இருந்தது. அவர் பார்த்துப் பிறந்து வளர்ந்த பெண். நல்ல அடக்கம். எதிர்த்து



ஒரு வார்த்தை பேசத் தெரியாது. குனிந்த தலை நிமிர்ந்தது கிடையாது. இதுவரை கங்காதரனின் எதிரில் நின்றுகூட அவள் பேசி இவர் பார்த்ததில்லை. இவர் போனால் ''வாங்க பெரியப்பா...'' என்று எழுந்து உள்ளே ஓடி விடுவாள். இந்த பெரியப்பா உறவுமுறை இல்லை என்றால் தன் பையனுக்கே ஜனனியைக் கல்யாணம் செய்து கொண்டிருப்பார். அந்த அழகும் அடக்கமும் வெளியிடம் போக விட்டிருக்க மாட்டார்.

இப்போது அந்தப் பேச்சிற்கு இடமில்லை. அவர் மகன் தயானந்தம் அவளைக் கூடப்பிறந்தவளாக நினைத்துப் பழகுகிறான். அவளும் தயாண்ணே என்றுதான் கூப்பிடுகிறாள். அதனால் நடக்க முடியாததை நினைத்துக் கொண்டிருப்பதை விட நடக்க வேண்டியதைப் பார்ப்பதுதான் நல்லது...

மறுநாளிலிருந்தே ஜனனிக்கு மாப்பிள்ளை பார்க்கத் தொடங்கினார். தன்னுடைய உறவில் நல்ல பையனாக யாரும் இருக்கிறார்களா என்று ஆராய்ந்தார். அப்படி ஜனனிக்குத் தகுதியாக ஒருவரும் இல்லாததால் வெளியிடம் தேடினார். எங்கெங்கோ இருக்கிற பையன்களின் பெற்றோர்கள் சென்னையில் இருப்பதாகக் கேள்விப்பட்டு சென்னைக்கும் போய் வந்தார். எதுவும் சரியாக அமையவில்லை.

கடைசியில் பெங்களூரில் தனியார் தொழிற்சாலை ஒன்றில் இன்ஜினியராக இருக்கு ஜகன்னாதன் என்கிற பையனைப் பற்றின விவரங்கள் சேகரித்தார். அந்த வருடம் தான் படிப்பை முடித்து வேலையில் சேர்ந்திருக்கிறான். தற்போது எழுநூறு ரூபாய் சம்பளம். இது வேலை கற்றுக் கொள்ளக் கொடுக்கப்படுகிற பணம் தானே தவிர சம்பளமில்லை. ஒரே பையன். அப்பாவும் அம்மாவும் சென்னையில் இருக்கிறார்கள். மூன்று அக்காள்களுக்குக் கல்யாணமாகி விட்டது. இவன்தான் கடைசி. பார்க்க ஜனனிக்கு ஏற்ற மாதிரி வெள்ளை வெளேறென்று அழகாக இருப்பான்.

சேகரித்த விஷயங்கள் உண்மைதானா என்று விசாரித்து அறிய அவர் சென்னை கிளம்பிப் போய் கீழக்கட்டளை என்ற இடத்தில் சொந்தமாக வீடு கட்டிக் கொண்டுள்ள அவனது அம்மா அப்பாவைத் தேடிப் போனார். தான் வந்திருக்கும் விஷயத்தைச் சொல்லி ஜனனியின் புகைப் படத்தைக் காட்டினார். அந்தப்பையனின் புகைப் படத்தையும் வாங்கிப் பார்த்தார். கேள்விப்பட்ட விஷயங்கள் உண்மை தான் என்பதையும் தெரிந்து கொண்ட பின்னர்—

''நீங்க வந்து பெண்ணைப் பாருங்க. பெங்களூருக்கு எழுதிப் போட்டு உங்க மகனையும் வர வழையுங்க...பார்த் தீங்கன்னால் விடமாட்டீங்க. அவதான் மருமகளாக வரணும்னு அடம்பிடிப்பீங்க. அத்தனை அழகு அந்தப் பொண்ணு...''

''அது சரிங்க...பொண்ணுக்கு நீங்க என்ன உறவுன்னு சொல்லலையே...?''

''உறவுன்னு நினைச்சால் எல்லோரும் உறவுதான். ரொம்ப நாளைய சிநேகிதம். அதுதான் உறவு...''

''அவ்வளவுதானா...'' என்று இழுத்தாள் அந்த அம்மாள்.

''எங்க என்ன சந்தேகம் உங்களுக்கு...எதுவானாலும் என்கிட்ட தாராளமா கேட்கலாம்.''

''அதில்லை...என் பையனுக்கு இப்போ இருபத்திநாலு வயசுதான் ஆகுது...''

''அந்தப் பொண்ணுக்கும் பதினாறு வயசுதாம்மா...''

''அதான் யோசிக்கிறேன் இன்னும் கொஞ்சம் வயசா கட்டுமேன்னு...''

''எம்மா வயசாவதில் என்ன லாபம் வரப்போவுது...''

''எங்க, நாலு பொண்ணுக்கு நாங்க கல்யாணம் செய் திருக்கோம். அந்தக் கடன் அப்படியே நிக்குது. இவனைப் படிக்கவச்ச கடன் வேற இருக்குது. இப்போதான் சம்பாதிக்க



ஆரம்பிச்சிருக்கான். இதுக்குள்ள கல்யாணம் செய்து வச்சிட் டால் அவன் குடும்பத்தைத்தானே கவனிப்பான்? எங்களையோ, கடனடைப்பதையோ எப்படிக் கவனிக்க முடியும்?''

''எங்க முடியாது...? கெட்டிக்காரப் பிள்ளையாக இருந் தால் எல்லாம் முடியுங்க...''

அந்த அம்மாள் நீண்ட நேரம் யோசித்தாள். பின்னர் ஒரு முடிவிற்கு வந்தவளாகக் கேட்டாள்.

''அவங்க நல்லா செய்து தருவாங்களா?''

''ஒரே பொண்ணுங்க. அதைக் கண்ணா வளர்க்கறான் என் சிநேகிதன். அதுக்குச் செய்யாமல் வேற யாருக்குச் செய்யப்போறான்?''

''எத்தனை சவரன் நகை போடுவாங்க தெரியுமா...?''

''என்ன ஒரு நாற்பது ஐம்பது சவரன் போடுவான்...''

''ப்கு...'' என்றாள் அந்த அம்மாள் அலட்சியமாக.

''ஏங்க...?'' என்று நிமிர்ந்தார் மாணிக்கவாசகம், கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமற் போய்விடப் போகிறதே என்ற பயம் ஏற்பட்டது. அந்த அம்மாள் தொடர்ந்தாள்.

''நானே என் பொண்ணுங்களுக்கு நாற்பது சவரன் போட்டு செய்து கொடுத்தேன். கைல தலா இருபதாயிரம் கொடுத்தேன். இது தவிர எவர்சில்வர், பித்தளை, வெள்ளின்னு பாத்திரங்கள். எல்லாம் போகக் கல்யாணச் செலவு வேற...இத்தனைக்கும் என் மாப்பிள்ளைங்க யாரும் பெரிய படிப்பு படிக்கலை. இன்ஜினியருங்க இல்லை... சாதாரண பாங்க் உத்தியோகமும், கவர்ன்மெண்ட் உத்தி யோகமும்தான்...''

''அப்படியா...'' என்று முகவாயைத் தடவிக் கொண் டார் மாணிக்கவாசகம். இப்போது யோசிக்கிறமுறை அவருடையதாகி விட்டது. சில வினாடிகள் மௌனமாக இருந்து பின்னர் அந்த அம்மாளை ஏறிட்டார்.

''அப்போ நீங்க என்ன எதிர்பார்க்கறீங்க...''

அதற்கு அந்த அம்மாளின் கணவர் ஏதோ பேசத் துவங்க சட்டென்று அந்த அம்மாள் இடைமறித்தாள்.

''அதிகம் ஒன்னும் எங்களுக்கு செய்து தரவேணும். என் மகனின் படிப்புக்கும், அந்தஸ்திற்கும் குறை ஏற்படாமல் செய்தால் போதும். கையில் நாற்பதாயிரம் கொடுத்துடச் சொல்லுங்க. நூறு சவரன் நகை, பத்தாயிரம் ரூபாய்க்கு வெள்ளிப் பாத்திரம், ஐயாயிரத்திற்கு பித்தளை எவர்ஸில்வர், மற்றபடி நல்ல சத்திரம் பார்த்து, பெரிய கச்சேரியா ஒன்னு வச்சு, வர்றவங்களுக்கு நல்லா சாப்பாடு போட்டு அனுப்பினால் போதும்...''

''அம்மாடி...!'' என்று அசந்து போனார் மாணிக்க வாசகம். நல்ல காலமாய் தனக்குப் பெண் பிறக்காததற்கு ஆண்டவனுக்கு நன்றி சொல்லிக் கொண்டார். தன் மகனுக்கும் இந்த மாதிரியெல்லாம் கேட்கக் கூடாது என்கிற தீர்மானத்திற்கும் வந்தார். நூறு சவரனுக்கு மனதிற்குள் விலை போட்டார். கையில் நாற்பதாயிரத்தை அதனுடன் கூட்டினார். பத்தாயிர ரூபாய் பாத்திரங்கள், சத்திரம், சாப்பாடு, கச்சேரி, தாம்பூலப் பை...

அடேயப்பா...! அவருக்கே மூச்சு முட்டிற்று. இதைக் கேட்டால் கங்காதரனுக்கு இதயத் துடிப்பு நின்று கூடப் போகலாம். பெண்ணை வந்து பார்க்காமலே இத்தனையும் பேசுகிறார்களே என்கிற சந்தேகம் வந்தது. பெண் பிடிக்க வேண்டாமா? பெண் பிடிக்காது போனாலும், இத்தனையும் செய்கிற பட்சத்தில் ஒப்புக் கொண்டு விடுவார்களோ...? ஒரு வேளை நாம் பெண் அழகாக இருப்பாள் என்பதை முன்னாலேயே சொல்லி விட்டதால்தான்—நம் பேச்சில் ஏற்பட்ட நம்பிக்கையில் இத்தனையும் கேட்கிறார்களோ...?

அப்படித்தான் இருக்கவேண்டும் என்று தோன்றிற்று. நல்ல படிப்பு. நல்ல வேலை. வாழ்க்கையில் முன்னுக்கு வரக் கூடிய சூழ்நிலை. தங்கை கல்யாணம், தம்பியின் படிப்பு



என்று பொறுப்புகள் எதுமற்ற வாழ்க்கை. பார்க்கவும் நல்ல லட்சணமாக இருக்கிறான். இதை விடச் சிறந்த இடமாக அமையாது. அதனால் இந்த வரனைத் தவற விடக் கூடாது என்பதில் மிக மிக உறுதியானார் மாணிக்கவாசகம். எப்படியாவது கங்காதரனிடம் பேசி அவனையும் ஒப்புக்கொள்ள வைக்க வேண்டும்...

சட்டென்று அந்த அம்மாவைப் பார்த்துப் பேச ஆரம்பித்தார் மாணிக்கவாசகம்.

''இதப் பாருங்கம்மா... நீங்களும் நாலு பொண்ணுங்களுக்குக் கல்யாணம் செய்திருக்கீங்க. அந்தக் கஷ்டம் உங்களுக்கும் தெரியும். ஒரேயடியாக நூறு சவரன் என்றால் முடியாதும்மா... கைல வேற நாற்பது கேக்கறீங்க. அதைக் கொடுத்துடச் சொல்றேன். நூறுசவரன் நகைன்றதை மட்டும் ஐம்பது சவரனாகக் குறைச்சுக்குங்க. கேட்டமாதிரி மற்ற எல்லாத்தையும் செய்திடச் சொல்றேன்...''

''ஐம்பதுன்றது ரொம்பக் குறைச்சலாகப் படுதுங்க... என் மகனோட படிப்பு என்ன—''

சடாரென்று இடை மறித்த மாணிக்க வாசகத்தின் குரல் உயர்ந்தது.

''உங்க மகனோட படிப்புக்குத்தானே ஓடி வந்து கேட்கிறது. ஐம்பதுக்கு மேல் எங்களால் முடியாது. பொண்ணோட லட்சணம், அடக்கம் எல்லாத்தையும் பார்த்துட்டுப் பேசுங்க. அதுவும் நூறு பவுன்லதான் நிற்போம்னு பிடிவாதமா நின்னீங்கன்னால் அதுக்கு மேல உங்க சௌகரியம். உங்களுக்கும் வேற பொண்ணு கிடைக்கும். எங்களுக்கும் மாப்பிள்ளை கிடைக்காமல் போகாது...'' என்று எழுந்து கொண்டதும் அந்த அம்மாள் சடாரென்று விழித்துக் கொண்ட மாதிரி உடனே இறங்கி வர ஆரம்பித்தாள்.

''அட என்ன நீங்க... இதுக்குப் போய் என் எழுந்துக்கிட்டீங்க...? உட்காருங்க. ஐம்பது சவரனுக்காக நல்ல இடத்தைத் தவற விடலாமா...?'' என்றவள்

"என்னங்க, கொஞ்சம் எழுந்திருச்சு உள்ள வாங்க..." என்று அவரை உள்ளே அழைத்துப் போனாள். தன் பேச்சுக்கும் செய்கைக்கும் நல்ல பலன் கிடைத்ததை நினைத்து சந்தோஷப்பட்ட மாணிக்க வாசகம் அவர்களின் வருகைக்காக அமைதியாகக் காத்திருக்க ஐந்து நிமிடங்களுக்குப் பின்னர் அந்த அம்மாள் கணவர் பின்தொடர வெளியில் வந்தாள். மாணிக்க வாசகத்தின் எதிரில் உட்கார்ந்து நழைந்த குரலில் பேசத் துவங்கினாள்.

"இதப்பாருங்க. நான் இவருகிட்டே கலந்து பேசி ஒரு முடிவிற்கு வந்திருக்கேன். நீங்க சொன்ன மாதிரி ஐம்பது சவரன் நகையே போடுங்க. அதுக்கு நாங்க ஒப்புக்கறோம். ஆனால் கையில் தருவதாகச் சொன்ன நாற்பதோடு ஒரு பத்து சேர்த்துக் கொடுத்துடுங்க. இது கூட எங்களுக்கில்லை. என் மகன் உங்க சினேகிதக்காரரு மாப்பிள்ளையானால் இருக்கிற கடனையெல்லாம் ஒட்டுமொத்தமா ஒழிச்சுட்டு நிம்மதியா இருக்கலாம். உங்க பொண்ணும் சுகப்படலாம், சந்தோஷமா குடும்பம் நடத்தலாம் என்கிறதுக்காகத்தானே தவிர வேற எதுக்குமில்லே... இதை நாங்க எடுத்துக்கப் போறதில்லை. எங்களுக்கு இனி மேல் எதுக்குங்க காசும், பணமும்...? ரெண்டு வேளை சாப்பாடும், மாற்றுத்துணியும், தங்க இடமும் கிடைச்சால் போதுங்க. பிள்ளைங்க சுகப்படணும், சந்தோஷமா இருக்கணும். அவ்வளவுதாங்க..."

அந்த அம்மாள் சொன்னதில் நெகிழ்ந்து போனார் மாணிக்கவாசகம். 'இவளுக்கும் ஒரு மகன் தானே... அவன் நல்லா இருக்கணும் என்கிற ஆசை இருக்காதா...?' என்று தோன்றியது. ஆனாலும் ஐம்பது சவரன் நகைக்கும், ஐம்பதனாயிரம் ரூபாய்க்கும் கங்காதரன் ஒப்புக் கொள்வானோ மாட்டானோ என்ற சந்தேகம் ஏற்பட்டது. எப்படியாவது அவனைச் சம்மதிக்க வைத்து விடவேண்டுமென்ற எண்ணத்தில் அந்த அம்மாளிடம் பேசினார்.



"சரிம்மா. நான் என் சினேகிதன்கிட்டே சொல்றேன். நீங்க உங்க மகனை உடனே வரச்சொல்லி ஏற்பாடு செய்திடுங்க. வர்ற வெள்ளிக்கிழமை பொண்ணு பார்க்க வந்திடுங்க. நானே நேர்ல வந்து கூட்டிட்டுப் போறேன். மற்றதை அப்போ பேசிக்கலாம். என்ன...?"

"சரிங்க...?"

"வெள்ளிக்கிழமை வரீங்க இல்லையா...?"

"வரோம்."

"அதுக்குள்ளாற உங்க மகன் வந்திடுவார் இல்லீங்களா...?"

"கட்டாயமா வந்திடுவான்."

"அப்போ நான் புறப்படட்டுமா...?"

"சரிங்க... ரொம்ப சந்தோஷங்க..."

"எனக்கும் சந்தோஷம்தாம்மா. எல்லாம் நல்லபடியா முடியட்டும். வரட்டுமா...? வரேன் சார்..."

மாணிக்கவாசகம் விடைபெற்றுக் கொண்டு எழுந்து வெளியில் வந்தார்...

## 5

ஊருக்கு வந்து கங்காதரனிடம் சொன்னதும் அவர் அதிர்ந்து போனார். ஐம்பது சவரன் நகை ஐம்பதினாயிரம் ரூபாய்.

"இத்தனைக்கு நான் எங்கே போவேண்டா மாணிக்கம்...?" என்று பதறினார்.

"என்னடா செய்யறது கங்கு. நல்ல இடம். நீ ஆசைப்பட்ட மாதிரியே பையன் இன்ஜினீயர், வெளியூர் வேலை, நல்லாவும் இருக்கான். ஒரே பையன். தங்கச்சி கல்யாணம், அக்காளுக்குப் பூமுடிப்புன்னு எந்தத் தொல்லையும் இல்லே... இந்த மாதிரி இடம்னால் கேட்க மாட்டாங்களாடா..."

''அவங்க கேட்கட்டும். நான் வேண்டாம்னு சொல்லலே. ஆனால் எனக்கு சக்தியில்லையே...''

''என்னடா சும்மா சக்தியில்லே, சக்தியில்லேன்னு முணகற... ஆம்பிள்ளைப் பிள்ளைங்க எப்படியும் பிழைச்சுக்கும். அவங்களுக்கு இந்த வீட்டையும், கடையையும் வச்சிட்டு ஊர் நிலத்தை விற்று ஜனனி கல்யாணத்தை முடிச்சுடு...''

''நிலத்தை விக்கிறதா... அதுக்கு ராஜம்பா ஒத்துக்கிடணுமே?''

''ஒத்துகிட்டுத்தான் ஆவணும், பொண்ணு கல்யாணம்னால் சும்மாவா? அதுவும் இன்ஜினியர் மாப்பிள்ளை லேசாக் கிடைச்சிடுவாரா...?''

கங்காதரன் யோசனையில் இறங்க மாணிக்கவாசகம் தீர்மானமான குரலில் சொன்னார்.

''இதப்பாரு கங்கு. சும்மா என்ன யோசனை? கையில இப்போதே நாற்பது சவரன் நகைகள் இருக்கு. இன்னும் பத்து பவுனுக்கு ராஜம்பாள் சங்கிலியைப் போட்டுடு. ஊர் நிலத்தை விற்று கைல ஐம்பதினாயிரம் கொடுத்திடு.''

''அப்புறம் மேற்படி செலவுக்கு...'' என்று இழுத்தார் கங்காதரன்.

''மேற்படி செலவுக்கு நான் தரேன்...''

''நீ தரியா... எப்போ அதைத் திருப்பித் தர்றது...?''

''அதையெல்லாம் அப்புறமா பார்த்துக்கலாம். எல்லா விஷயத்தையும் போய் வீட்டில சொல்லிட்டிருக்காதே...சிலது நமக்குள்ளதான் இருக்கணும். புரிஞ்சதா...? எழுந்து போய் வெள்ளிக்கிழமைக்கு ஆகவேண்டியதை கவனி...ஊர் நிலத்தை விற்க ஏற்பாடு பண்ணு நான் வாரேன். முக்கியமா ஜனனி கிட்டே விஷயத்தைச் சொல்லு...''

அவர் எழுந்து போனதும் கங்காதரன் கடைப் பையனிடம் கடையைப் பூட்டிக் கொண்டு வரச் சொல்லி விட்டு வீட்டுக்கு வந்தார். ராஜம்பாளிடம் வெள்ளிக்கிழமை ஜனனியைப்



பெண் பார்க்க வரப்போவதைத் தெரிவித்தார். ராஜம்பாள் முகம் முழுதும் சிரிப்பாய் மாறிப் பிரகாசிக்க—

''மாப்பிள்ளை யாருங்க...?'' என்று ஆர்வமாகக் கேட்டாள்.

''நீ நினைச்ச மாதிரியே வெளியூர் மாப்பிள்ளை. இன்ஜினியரு. நம்ம ஜனனிக்கு ரொம்பப் பொருத்தமான இடம்னு மாணிக்கவாசகம் போய் பார்த்து விட்டு வந்து அப்படிச் சொல்றான்...''

''அப்படின்னா முடிச்சுடலாங்க...''

''முடிக்க வேண்டியதுதான். ஆனால் செய்வினையெல்லாம் நிறைய கேட்கறாங்களே ராஜம்...''

''அப்படி என்ன கேட்கறாங்க...?''

''ஐம்பது சவரன் நகை, கைல ஐம்பதினாயிரம்...''

அதைக் கேட்டு ஒரு வினாடி அமைதியாக இருந்த ராஜம்பாளின் முகம் மீண்டும் மலர்ந்தது.

''ஏங்க, பையன் நிறைய படிச்சிருக்கான்னு சொல்றீங்க நல்லா இருக்கான். குடும்பத்துல வேற பிடுங்கல் இல்லேன்னெல்லாம் சொல்றீங்க. அப்படின்னால் கேட்கிறது நியாயம் தானுங்களே...''

''என்னடி இவ... நம்ம ஜாதியில் அப்படி கொடுக்கிறதெல்லாம் வழக்கமே இல்லைடி...''

''இப்ப எல்லா ஜாதிக்கும் இந்த வழக்கம் பரவிடுச்சுங்க...''

''இப்படி கொடுக்கறதும், வாங்கறதும் தப்பு இல்லையா ராஜம்...?''

''தப்புத்தாங்க. ஆனால் எல்லாரும் கொடுத்து எல்லாரும் வாங்கிக்கிற போது நாம மட்டும் என்னங்க செய்ய முடியும்...''

''அதனால் அதே தப்பை நாமும் செய்யலாம்னு சொல்றியா...?''

''இது தப்புத்தானே தவிர குற்றமில்லீங்க...? நம்ம பொண்ணு நல்லா வாழணும்னு தானே இதைச் செய்யறோம், ஊர் உலகத்துல பொண்ணைப் பெற்ற அத்தனை பேரும் இதைத்தாங்க செய்யறாங்க...அந்த உலகத்துல தாங்க நாம் இருக்கோம். கோவணம் கட்றவங்களுக்கு நடுவில் நாம் கட்டமாட்டோம்னு அடம் புடிச்சா நாம் தாங்க முட்டாள், வேணும்னால் இவ்வளவு பணம் கொடுக்க முடியாதுன்னு இந்த இடத்தை விட்டுடலாம். இதுக்கப்புறம் இதுக்குக் குறைவான இடம் வந்தாலும் அவங்களும் பணம் கேட்கத் தான் போறாங்க. குறைச்சலா கேட்பாங்க. நம்ம சக்திக்கு முடியும்னு ஒத்துக்குவோம். அப்போ அது இவ்வளவு பெரிய தப்பாத் தோணாது. இப்போ சக்தி ஓரளவு மீறினதாக இருக்கறதால் தான் இவ்வளவு சந்தேகமும் போராட்டமும். ஏங்க, ஏற்கெனவே நாம தான் நாற்பது பவுன் நகைங்க செய்து வச்சிருக்கோம். மேல ஒரு பத்து சவரன்தானே கேட்கறாங்க. என் சங்கிலியைப் போட்டுடுங்க. கைல கொடுக்க வேண்டிய ஐம்பதினாயிரத்துக்கு ஊர் நிலத்தை வித்துடலாங்க. நமக்கும் ஆம்புளைப் புள்ளைங்களுக்கும் இந்த வீடும் உங்க சம்பாத்தியமும் போறுங்க. பொண்ணை நல்ல இடத்துல கொடுத்துடலாங்க. வீணாகப் பிடிவாதம் பிடிக்காதீங்க. வெள்ளிக்கிழமை அவங்களை வரச் சொல்லி விட்டு நாளைக்கே ஊருக்குப் போய் நிலத்தை விற்க ஏற்பாடு செய்யுங்க...என்ன..?''

அவர் சமாதானமடைந்தவராகச் ''சரி...'' என்று சொல்லிக் கொண்டே எழுந்தார்...

மாணிக்க வாசகத்திடம் சொல்லி அவர்களை வெள்ளிக் கிழமை வர ஏற்பாடு செய்தாகி விட்டது. ஊருக்குப் போய் நிலத்தைப் பேரம் பேசினார். கிராமத்துப் பணக்காரர்கள் அவ்வளவு சுலபமாகப் பணத்தை விட்டுப் பிரிய மறுத்தார்கள். செண்ட் நூறு ரூபாய் போகும் நிலத்தை ஐம்பது அறுபது என்று பேரம் பேசினார்கள். கொடுக்க வேண்டியதற்கும் தவணை சொன்னார்கள்.



''பொண்ணுக்குக் கல்யாணம் நிச்சயம் செய்யலாம்னு இருக்கேன். நல்ல இடம். படிச்ச பையன். வெளியூர்ல வேலைல இருக்கான். செய்வினைதான் கொஞ்சம் அதிகம் கேட்கறாங்க. கைல ரொக்கமா ஐம்பதினாயிரம் வேணும் கறாங்க. இல்லாட்டி போனால் நிலத்தை விற்க வேண்டிய காரணமே கூட இல்லை...'' என்று கெஞ்சுகிற மாதிரி பேசினார். அதைக் கேட்ட பின்னும் அக்கிராமத்து மனிதன் பிடி கொடுக்கவில்லை.

''அதெல்லாம் சரிதாங்க...'' என்று இழுத்தான். ''இந்த மாதிரி ஒரு சந்தர்ப்பத்திற்கு உதவும்னுதானே நாம் நிலம், நீரு, நகைங்கன்னு வாங்கி சேர்க்கறது. பொண்ணு கல்யாணம்னால் சும்மாத்தானா...? கைல காலணா காசு இல்லாமல் உருவி விட்டுரும்க. எப்படிப்பட்ட பணக்கார னுக்கும் இதே கதிதாங்க...'' என்று கூடச் சேர்ந்து குறை படத் தொடங்கினான்.

''எனக்குக் கூட மூணு பொண்ணுங்க. பெரிசு இப்பத் தான் வயசுக்கு வந்திருக்கு. அதுக்கு மாப்பிள்ளை பார்த்து வர்ற தைலயாவது முடிக்கணுங்க. மற்ற ரெண்டைப் பற்றி இப்போ கவலையில்லீங்க...''

மேலே அவனது பேச்சைக் கேட்கப் பிரியப்படாதவராகக் கங்காதரன் சலித்துப் போய் சொன்னார்.

''சரி... இப்போ என்ன செய்யலாம்கறீங்க...?''

''அதாங்க... ரொக்கமா கைல இப்போ இருபது தரேங்க. இன்னும் நாலு நாள்ல கரும்பு வெட்டுவேன். வெட்டி விலையானதும் நிலத்தை ரிஜிஸ்டர் பண்றப்ப பாக் கிப் பணம் முழுசையும் கட்டிடறேங்க... மொத்தப் பணத்தை யும் வாங்கிக்கிட்டப்புறமே நீங்க ரிஜிஸ்டர் பண்ணித் தரலாம்...''

வேறு வழியின்றி அதற்கு ஒப்புக் கொண்டார் கங்காதரன். மணியக்காரர் ராமலிங்கம் முன் நின்று பத்திரத்தில் கையெ

முத்து வாங்கிப் பணத்தை கங்காதரனிடம் ஒப்படைத்தார். கங்காதரன் பணத்தைப் பத்திரப்படுத்தி கைப்பையில் வைத்துக் கொண்டே சொன்னார்.

''இன்னும் ஒரு வாரத்துல திரும்பி வரேங்க. பாக்கிப் பணம் பூராவையும் கொடுத்துடுங்க. கல்யாணத்தை நிச்சயம் பண்ணிக்கிட்டு வருவேன். தாம்பூலம் மாத்தற போது அவங்க கிட்டே தவணை சொல்ல முடியாது...''

''அதெல்லாம் ஒண்ணும் வேணாங்க. உங்க பணத்தை வாங்கிக் கொடுத்து நிலத்தை பெயர் மாத்தறது என் பொறுப்புங்க... கவலைப்படாமல் நீங்கள் தைரியமாகப் போயிட்டு வாங்க...''

''அப்போ வரேன்...'' என்று எழுந்து கொண்டார் கங்காதரன். அவங்கவஸ்திரம் தோளில் ஏறிக்கொண்டது. கைப்பை இடுப்பில் பத்திரப்பட்டது. படியருகில் நிறுத்தியிருந்த செருப்பில் காலை நுழைத்துக் கொண்டே மீண்டும் சொன்னார்.

''வரேம்ப்பா... இன்னும் ஒரு வாரத்துல வந்து சேர்த்துடுவேன். கல்யாண காரியம், சாக்கு எதுவும் சொல்லிடாதே...''

''பேச்சு மாத்ற பழக்கம் நம்மகிட்டே இல்லீங்க. தைரியமா போயிட்டு வாங்க...''

அந்த நிலத்தின் வரப்பு ஓரமாக நடந்தபோது கங்காதரனின் கண் கலங்கிப்போயிற்று. பச்சைப்பசேலென்று காற்றலை ஓடிய நாற்றுகளைப் பார்த்த போது குழந்தையை விட்டுப் பிரிகிற ஏக்கம் ஏற்பட்டது. இதைப் பிரிவதே இன்னொரு பிரிவிற்குத்தான் என்கிற நிஜம் சங்கடப்படுத்தியது. இந்தப் பிரிவே இவ்வளவு பாதிப்பை ஏற்படுத்துமானால் அந்தப் பிரிவு இன்னும் எப்படி இருக்கும் என்று யோசித்தார். ஜனனி பிறந்த அந்த நாள் ஞாபகத்திற்கு வந்தது. ராஜம்பாளுக்கு வலி எடுக்கத் தொடங்கினபோது பொழுது சாய்ந்துவிட்டது. அப்போது அவர்கள் இந்த ஊரில்தான் இருந்தார்



கள். அக்கிரகாரத்தை ஒட்டின புதுத் தெருவில் ஜாகை. முதல் இரண்டு பிள்ளைகளும் நிஜார் போட்டுக் கொண்டிருந்தனர். அவர்களுக்கும் விவரம் புரியாத வயசுதான். முன் அறையில் ராஜம்பாளைப் படுக்கவைத்து பக்கத்து வீட்டுப் பெண்களும் எதிர்வீட்டுப் பெண்களுமாகக் குறுக்கும், நெடுக்கும் ஓடினபோது இவர் வாசல் திண்ணையில் இரு பையன்களையும் இரண்டு தொடையிலும் உட்கார வைத்து ஜெபித்துக் கொண்டிருந்தார். உள்ளுக்குள் கந்த சஷ்டி கவசம் முற்றுப்பெறாமல் திரும்பத் திரும்ப ஓடிக் கொண்டிருந்தது.

''அப்பா .. அம்மாவுக்கு என்னப்பா...?'' என்று தொணதொணத்த பையன்களுக்கு விவரம் சொல்ல முடியவில்லை.

''உங்களுக்கு தங்கச்சிப் பாப்பா பொறக்கப் போவுது'' என்றார்.

சொன்னபோது உள் மனசு அதற்கே ஏங்கிற்று. இரண்டு பையன்கள் போதும் என்று நினைத்தார். இந்த முறை ஒரு பெண் குழந்தை பிறந்து விட்டால் அதற்குப் பின்னர் ராஜம்பாளுக்கு இந்தக் கஷ்டம் கொடுக்கக் கூடாது என்று முடிவு செய்து கொண்டார். முருகா, என்னப்பா... ஆசைப்பட்ட மாதிரி பெண்ணாகவே கொடுத்துடப்பா...இந்த ஒரு ஆசையும் நிறைவேறி விட்டால், எல்லா நிறைவும் வந்து சேர்ந்துடும்பா. உன் அனுக்கிரகத்தால ஒரு குறையுமற்று வாழுற மனுஷன் நானாகத்தாம்ப்பா இருப்பேன்...

அவர் நினைத்து முடிக்கவில்லை. உள்ளேயிருந்து குழந்தை வீறிடுகிற சப்தம். ராஜம்பாளின் கிரீச்சிடல். மனசு ஒருகணம் சூனியமாய் நிற்க—

வாசலுக்கு ஓடிவந்த வடிவாம்பாளின் குரல் எங்கிருந்தோ கிணற்றிலிருந்து கேட்கிற மாதிரி கேட்டது.

''அண்ணே...நீங்க ஆசைப்பட்ட மாதிரியே பெண் குழந்தை... பெண் என்றால் சாதாரணப் பெண்ணில்லை அண்ணே— சொக்கத் தங்கம் மாதிரி நிறமும் கறுகறுன்னு முடியும்... இருங்க, தூக்கியாந்து காட்றேன்.''

கால் மணி நேரத்திற்குப் பின்னர் அவள் துணிபோர்த்திக் கொண்டு வந்து காட்டிய அந்தக் குழந்தைக்கு—

இப்போது கல்யாணம்...

பெருமூச்செறிந்து பஸ் நிற்கும் இடத்திற்கு வந்து நிற் கவும், தூரத்தில் பஸ் வருகிற ஒலி கேட்கவும் சரியாக இருந்தது...

## 6

வியாழக்கிழமை காலையில் மாணிக்கவாசகம் கிளம்பி மறுபடியும் சென்னைக்குப் போனார். போகுமுன் தன் மனைவியிடம், ''இன்னிக்கு சாயந்திரமே நீ கங்கு வீட்டுக்குப் போயிடு மீனாட்சி. நாளைக்கு வரவங்க ஒருவேளை தங்கி சாப்பிட்டாலும் சாப்பிடுவாங்க. அதற்கு வேண்டிய ஏற்பாடு களையெல்லாம் ராஜம்பா கூட இருந்து செய்யலாம்...'' என்றார்.

''அது சரிங்க'' என்று தலையாட்டிய அவள், ''ஆமாம்...சம்பந்தம் செய்யறதுக்கு முன்னால் யாரும் கைய நனைப்பாங்களா...?'' என்கிற சந்தேகத்தை எழுப் பினாள்.

''அது சரி...'' என்று யோசித்த அவர், ''அப்படீன்னா நீ அங்கே போயி தேவையான உதவிங்களை செய்து கொடுத் திட்டு நம்ம வீட்டுக்கு வந்து சமைச்சு வச்சிடு. நாம அந்நியம் தானே...? சம்பந்தியாகப் போறவங்க இல்லையே...அதனால் நம்ம வீட்டுல சாப்பிட்டாலும் சாப்பிடுவாங்க...''

''சரிங்க...'' என்று மறுவார்த்தை இன்றி தலையாட்டி னாள் அந்த அம்மாள்.

மாணிக்கவாசகம் சென்னையில் இறங்கி பஸ் பிடித் கீழ்க்கட்டளை போய்ச் சேர்ந்தபோது பிற்பகலாகி விட்ட இவர் போனபோது மாப்பிள்ளை ஜகன்னாதனும் வீட் இருந்தான். வெள்ளையும், உயரமுமாக லட்சணமுமா



தெரிந்தான். பார்த்த உடனே மாணிக்கவாசகத்திற்குப் பிடித்துப் போயிற்று. ஜனனியைப் பக்கத்தில் நிறுத்தி, அந்த ஜோடிப் பொருத்தத்தில் அதிகம் சந்தோஷப்பட்டார்.

''எப்ப வந்தீங்க...?'' என்று கேட்டபோது ஜகன்னாதன் ''நேற்று ராத்திரி'' என்றான்.

அதற்கப்புறம் வந்த கேள்விகளுக்கு ஒரு வார்த்தை பதிலாக மட்டும் சொன்னான். அளந்து, நிறுத்து பேசுவதாக மாணிக்கவாசகத்திற்குப் பட்டது. ஒரு வேளை கூச்ச சுபாவ மாக இருக்கலாம் என்று விட்டு விட்டு தாயார் பத்மாவதியிடம் கேட்டார்—

''என்னங்க, கிளம்பலாங்களா...?''

''ம்...கிளம்ப வேண்டியதுதான்...'' என்ற பத்மாவதி மகனை ஏறிட்டாள்.

''என்ன ஜக்கு, புறப்படலாமில்லே?''

மகன் மெல்ல தலையசைத்தான். பின், ''ஏம்மா, எப்படிப் போகப்போறோம்...?'' என்று கேட்டான்.

''ரயிலுக்கு டிக்கெட் எடுத்து வந்திருக்கேன்...'' என்று பதில் சொன்னார் மாணிக்கவாசகம்.

ஜகன்னாதன் ''ரயிலா...?'' என்று தயங்க, ''ஏங்க பஸ்ஸுல போகலாம்னு அபிப்பிராயப்படறீங்களா?'' என்று அப்பாவித்தனமாகக் கேட்டார் மாணிக்கவாசகம்.

''ஏங்க, எம்புள்ளையைப் பார்த்தால் பஸ்ஸுல வரவன் மாதிரியா தெரியுது...? இன்னும் கொஞ்சம் போனால் உங்க ஊர்வரை நடக்கக்கூடச் சொல்லுவீங்க போல இருக்கே...'' என்று பத்மாவதி முகத்தைக் கோபமாக வைத்துக்கொண்டு கேட்டதும் மாணிக்கவாசகம் பதறினார்.

''தப்பா ஒன்னும் கேட்கலியே அம்மா, ரயில் வேணா மனால் பஸ்ஸுல தானே போகணும்னு கேட்டேன்...''

''ஏன் காருல போக முடியாதோ?''—அந்த அம்மாளின் குரல் அதே உச்ச ஸ்தாயில் வெளிப்பட்டது.

''காரா...எங்க கிட்ட கார் இல்லையேம்மா...'' என்று தழைந்து போனார் மாணிக்கவாசகம்.

''கார் இல்லைன்னால் என்ன...? எத்தனை டூரிஸ்ட் டாக்ஸிங்க இல்லை...? அதுல ஒன்னை அமர்த்தி கூட்டிட்டுப் போறது...முதல் முதலா உங்க வீட்டுக்கு வறோம். இப்படி பஸ்ஸூம், நடையுமாகவா கூட்டிட்டுப் போவாங்க...?''

'ஊர் வரை டூரிஸிட் டாக்ஸியா!' பகீரென்றது மாணிக்க வாசகத்திற்கு. ரயிலில் போய் அதன் பின் கார் ஏதாவது ஏற்பாடு செய்யலாம் என்றுதான் அவர் நினைத்துக் கொண்டு வந்தார். ஆனால் அந்த அம்மாள் சென்னையிலிருந்தே கார் ஏற்பாடு செய்யச் சொன்னதும் வேறு வழியின்றி ''அப்படின்னா சரி. இதோ வரேன்...''என்று எழுந்து போனார். இங்கிருந்து காரிலேயே போய் திரும்ப ஆயிரத்து ஐநூறு இரண்டாயிரமாவது செலவாகும் என்று கணக்குப் போட்டார். இதற்கு கங்காதரன் என்ன சொல்வானோ என்ற யோசனை வந்தது. நினைத்து பரிதாபமும் ஏற்பட்டது. பாவம் அவன் என்று நினைத்துக் கொண்டார். நல்ல விலைக்குப் போக வேண்டிய நிலம். பணமுடை காரணமாக சுமாரான விலைக்கே போயிருக்கிறது... அதுவும் முழுதாகக் கைக்கு வரவில்லை; தகுதிக்கு மீறியே செய்து கொடுக்கிறான். அதுவும் நல்ல இடம் என்று நாம் வற்புறுத்தியதால்தான். ஏற்கனவே திணறுகிற அவன் கார் செலவு இரண்டாயிரம் என்றால் ஆடிப்போய் விடுவான். அதனால் இதை அவனிடம் தெரியப் படுத்தக் கூடாது. நாமே கொடுத்து விடவேண்டும் என்று முடிவு செய்து டூரிஸ்ட்கம்பெனி ஒன்றில் பேசி அம்பாஸிடர் கார் ஒன்றை ஏற்பாடு செய்து கொண்டு வந்தார்.

கார் வீட்டு வாசலில் வந்து நின்றதும் அந்த அம்மாள், ''ஜகன்னாதா, காருலதானே போறோம். உங்கப்பாவையும் கூட்டிக்குவோம்...'' என்று அதன் பின்னரே கணவரைத் தயாராகச் செய்து உடன் அழைத்துக் கொண்டு வந்தாள்.

சென்னையை விட்டுக் கிளம்பிய போதே மணி மாலை ஐந்தாகியிருந்தது. கிட்டத்தட்ட ஐந்தரை மணி நேரப்



பிரயாணத்தில் ஜகன்னாதனோ, பத்மாவதியோ அல்லது அவள் கணவர் கருணாகரனோ ஒரு வார்த்தை வாய் திறக்க வில்லை. வழியில் விழுப்புரத்தில் சாப்பாட்டிற்கும் அதன் பின் இரண்டு இடங்களில் டீ, காபிக்கும் வண்டி நிறுத்தப்பட்ட போது சாப்பிட்டதற்குக் காசு கொடுக்க வேண்டும் என்கிற உணர்வற்றவர்களாகக் கை கழுவினதும் சடாரென்று வந்து மீண்டும் காரில் ஏறிக்கொண்டு விட்டனர். மரியாதை கருதியோ ஒப்புக்காகவோ காசு தருகிற பாவனையைக் கூட ஏற்படுத்தவில்லை. ஒவ்வொரு இடத்திலும் தன் கைப்பையி லிருந்து காசு கொடுத்து விட்டு வந்த மாணிக்கவாசகம் முதல் முறையாக 'என்ன இப்படி நடந்து கொள்கிறார்களே—?' என்று யோசிக்க ஆரம்பித்தார். சுத்த அல்பமானவர்களாக இருப்பார்கள் போலிருக்கிறதே... என்ற எண்ணம் வந்தது. விசால மனமும், தாரான புத்தியும், பெரும் போக்கும் கொண்ட கங்காதரனுக்கு எந்த விதத்தில் இவர்கள் ஏற்றவர் கள் என்கிற கேள்வி நெருடலாய் நின்று உறுத்த—

இந்த நிலைமையில எதையும் சொல்லக் கூடாது என்ற முடிவில் பேசாமல் இருந்து விட்டார் அவர். ஒருவேளை வெறும் காசு பணத்தில் கெட்டியாக இருப்பதால் மற்ற விஷயங்களில் நல்லவர்களாக இருக்கமாட்டார்கள் என்று சொல்ல முடியாதே... என்ற எண்ணத்தில் தன்னை அடக்கிக் கொண்டு விட்டார்.

ஊர் வந்த போது கிட்டத்தட்ட நடுராத்திரி பனிரெண்டு மணியாகி விட அவர்களை நேராகத் தன் வீட்டிற்கே அழைத்துப் போய் படுக்கச் செய்தார். அதற்கும் ஜகன்னாத னிடமிருந்தும், அந்த அம்மாவிடமிருந்தும் முணுமுணுப்பாக வெளிப்பட்டது.

''என், இந்த ஊர்ல லாட்ஜ் எதுவுமே இல்லையோ?...''

சுள்ளென்று கோபம் வந்தது மாணிக்கவாசகத்திற்கு; ஆனாலும் அடக்கிக் கொண்டு பதில் சொன்னார்.

''எங்க கிராமம் ரொம்ப சின்ன கிராமங்க. நாலைந்து ஓட்டல் உண்டே தவிர லாட்ஜ் எல்லாம் கிடையாது. இங்க வரவங்க யாருமே லாட்ஜுல தங்கமாட்டாங்க. தங்கவும் நாங்க விடமாட்டோங்க... நம்மைத் தேடி வர்றவங்களை லாட்ஜுல தங்க வைக்கிறது மரியாதை ஆகுமா சொல்லுங்க...?'' என்ற பின்னரே அடங்கினர்.

மறுநாள் அதிகாலையில் எழுந்து கங்காதரனின் வீட்டிற்கு ஓடினார் அவர். அவர்கள் வந்து தன் வீட்டில் இறங்கியிருக்கிற விஷயத்தைச் சொன்னார். முகத்தை கலகலப்பாக வைத்துக் கொண்டு ஜனனியைப் பார்த்துச் சீண்டினார்.

''பையன் சும்மா செக்கச்செவேல்னு சினிமா ஆக்டரு மாதிரி இருக்கான் ஜனனி...''

''போங்க பெரியப்பா...'' என்று வெட்கப்பட்டுக் கொண்டு அவள் உள்ளே ஓடுவதை ரசித்தவராகத் திரும்பி கங்காதரனைப் பார்த்தார்.

''என்ன கங்கு, வீட்டுக்கு வரியா... அவங்களை எதிர்கொண்டழைச்சு கூட்டிட்டு வரலாம்...''

''வரே... ன்...'' என்று இழுத்த கங்காதரன், ''அங்கேருந்து நம்ம ஊர்வரை கார்லியா கூட்டிட்டு வந்தே...?'' என்று கேட்டார்.

''பின்ன என்னப்பா... பையன் பெரிய இன்ஜினீயரு... ரயில்லல்லாம் வருவானா... அவனே காருக்கு ஏற்பாடு செய்து என்னையுமில்ல கூட்டியாந்துட்டான்...''

''அவங்களே செலவு பண்ணி வந்திருக்காங்களா...?''

''பின்னே...அவங்கதானே பொண்ணு பார்க்க வறாங்க. நாம காரு வைக்கணும்னு எதிர்பார்ப்பாங்களா...? ஏதோ ரயில், பஸ்ஸுன்னால் நம்ம செலவுல கூட்டிட்டு வரலாம்...''



—துணிந்து பொய் சொன்னார் மாணிக்கவாசகம். அதை நிஜமாக நம்பி கங்காதரனும் மேலே பேசினார்.

''ராத்திரி முழுக்கக் கூட வந்தியே மனுஷங்க எப்படித் தெரியாறாங்க...?''

''ரொம்ப நல்லவங்களாகத்தான் இருக்காங்க. உன் நல்ல மனசுக்கு நல்லதுதான் அமையும். வீணா கவலைப் பட்டிருக்காமல் கிளம்பு. தங்கச்சியை மடமடன்னு ஜனனிக்கு டிரஸ் பண்ணி விடச் சொல்லு. பாவாடை தாவணி வேணாம். அம்மா ஜனனி பட்டுப் புடவையா ஒன்னு எடுத்து கட்டிக்க...'' என்று உள் அறையைப் பார்த்து குரல் கொடுத்தவர், ''ம்ம் கிளம்பு...பெண்ணைப் பார்த்துப் பேசி முடிச்சு அவங்க திரும்பி பட்டணத்துக்குப் போக வேணாம்...?'' என்று கங்காதரனைத் துரிதப் படுத்தி அழைத்துக் கொண்டு போய் வீட்டிலிருந்தவர்களுக்குக் காபி, டிபன் கொடுத்து உபசரித்து குளித்து உடை மாற்றிய பின்னர் வீட்டிற்கு அழைத்து வந்தார்.

கூடத்தில் பாய் போட்டு உட்கார்ந்தி வைத்தார். ஜகன்னாதனுக்கு மட்டும் பெரிய நாற்காலியை நகர்த்திப் போட்டார். கங்காதரனைப் பக்கத்தில் உட்காரச் சொல்லித் தானும் உட்கார்ந்து கொண்டார்.

''தங்கச்சி...சீக்கிரம் ஜனனியை வரச்செல்லும்மா...'' என்று குரல் கொடுத்து விட்டு ஜகன்னாதனிடம் திரும்பிச் சொன்னர்.

''மாப்பிள்ளை, எங்க ஜனனியைப் பார்த்து நீங்க சரின்னு தலையாட்டறதைத் தவிர வேற வழி இருக்காது. எங்க பொண்ணோ, அழகைப் பற்றி நாங்களே பெருமையா சொல்லிக்கக் கூடாது. நீங்களே நல்லா பார்த்துக்குங்க...''

அவர் சொல்லிக் கொண்டிருந்த போதே பளீரென்று மின்னல் வெட்டின மாதிரி ஜனனி தாழம்பூ நிறமும், சிவப்புப் புடவையும், தலை நிறைய மல்லிகைப் பூவுமாக வந்து நின்று தரையில் விழுந்து வணங்கினாள். பின்னர் அம்மாவிற்கு

அருகில் சில வினாடிகள் நின்ற நேர்த்தியில் கூடமே பளிச்சிட்ட உணர்வு தோன்றியது. மாணிக்க வாசகத்திற்கு இந்த அழகிற்கும் குணத்திற்கும் இந்த இடம் தகுதியானதுதானா என்கிற நெருடல் தோன்றியது. இப்போது ஒன்றும் மீறிப் போய்விடவில்லை. வேண்டாம் என்று இவர்களை எழுப்பி அனுப்பிவிட்டால் என்ன...?

அவர் யோசித்துக் கொண்டிருந்த போதே பத்மாவதியம்மாள் மகனைப் பார்த்து கேட்டாள்.

''நல்லா பார்த்துக்க ஜகன்...அப்புறம் என்னைக் கேள்வியா கேட்காதே...பிடிச்சுச்சுன்னால் உடனே சரின்னு சொல்லு...''

''சரிம்மா...'' என்று மகன், தலையாட்டினது மட்டுமல்லாமல் வாய் திறந்தும் சொல்ல—

''அப்ப நீ உள்ளே போம்மா குழந்தே...'' என்று ஜனனியை உள்ளே அனுப்பி விட்டு மாணிக்கவாசகத்தையும், கங்காதரனையும் பார்த்துத் தொடர்ந்தாள்.

''எங்களுக்குப் பொண்ணு பிடிச்சிருக்குங்க. இப்போ உங்களுக்குப் பையன் பிடிச்சிருக்குதான்னு தெரியப்படுத்தினால் மேல் கொண்டு பேசலாம்...''

''எங்க எல்லாருக்கும் திருப்தியாகத்தாங்க இருக்கு...'' என்ற பதில் கங்காதரனிடமிருந்து வர—

''ஒரு நிமிஷம் இருப்பா...நமக்கு திருப்தியா இருந்தால் போறுமா...பொண்ணைக் கேட்கவேணாமா...?'' என்று குறுக்கிட்டார் மாணிக்கவாசகம்.

''அவளுக்கு என்ன தெரியும்? சின்னப் பொண்ணு தானே...'' என்றார் கங்காதரன்.

''ஆனாலும் கட்டிக்கப் போறவ அவ. அவ திருப்திப் படணும்பா...இரு, நான் போய் கேட்டுக்கிட்டு வரேன்...'' என்று எழுந்து உள்ளே போனதும்—



அதுவரை கதவு மூலையில் நின்று கூடத்தில் நடந்ததையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த ஜனனி சடாரென்று திரும்பி உள்ளே ஓட முயல அவளைச் சட்டென்று பிடித்துவிட்டார் மாணிக்கவாசகம். பயத்திலும், வெட்கத்திலும், கையும் களவுமாகப் பிடிப்பட்டுவிட்ட அதிர்ச்சியிலும் அவள் முகம் சிவந்து போக—

''போங்க பெரியப்பா... என்னை ஒன்னும் கேட்க வேணாம்...நான் எதுவும் சொல்ல மாட்டேன்...'' என்று படபடத்தாள் அவள்.

ஆனாலும் அவர் அவளை அவ்வளவு சுலபமாக விடுபவராக இல்லை.

''எதுவும் சொல்ல வேணாம்மா...மாப்பிள்ளை பிடிச்சிருக்கா இல்லையான்னு மட்டும் சொல்லு...நான் போயிடறேன்...''

''ம்ஹூம்...மாட்டேன் போங்க...''

''அப்படின்னா என்னம்மா அர்த்தம்...?''

''என்ன வேணா அர்த்தம் பண்ணிக்குங்க...''

''அங்க போயி அவங்ககிட்ட என்ன சொல்றது...?''

''எதை வேணா சொல்லுங்க...''

''சரி அப்படின்னா ஜனனிக்கு இந்த இடத்துல இஷ்டமில்லையாம். மாப்பிள்ளை நல்லா இல்லையாம். மனசுக்குப் பிடிக்கலையாம்னு சொல்லிடறேன்...''—அவர் வேகமாகக் கூடத்திற்குப் போகத் திரும்பிய பாவனையில்—

''ஐயோ...வேணாம் பெரியப்பா...''என்று பதறினள் அவள்.

''ம்... அப்படி வா வழிக்கு...அப்படின்னா உனக்கும் பிடிச்சிருக்குதில்லே...'' என்று சிரித்துக் கொண்டே கேட்டார் அவர்.

''ம்...''என்று தலைகுனிய அவாது குரல் சற்றே தீவிரமாக வெளிப்பட்டது.

''இதப்பாரு ஜனனி...கல்யாணம்கிறது விளையாட்டு சமாச்சாரமில்லை. இந்த ஒரு நிமிஷத்துக்குப் பிடிக்கிற விஷயமில்லை. கடைசி வரை திடமா, தீர்க்கமா, நிக்கணும், என்ன ஆனாலும் இனி இதுதான் நம்ம இடம்கிற நினைப்பு ஏற்படணும். அவங்க குணத்துக்கும் நடப்புக்கும் விட்டுக் கொடுத்துப் போகணும். எந்த சந்தர்ப்பத்துக்கும் வளைஞ்சு அனுசரிச்சுப் போகணும்...என்ன செய்வியா...?''

''செய்யறேன் பெரியப்பா...''

''இதுவரை அவங்க கூட பழகினதில் தப்பா எதுவும் தெரியலை. கொஞ்சம் பணம் காசுல கருத்தா இருப்பாங்க போலத் தோணுது...''

''அது நல்லதுதானே பெரியப்பா!''

''அட!'' என்று அவர் சடாரென்று திமிருவதற்குள் அவள் உக்கிரான அறைக்குள் ஓடிவிட்டாள். அவள் போன திசையையே பார்த்துக் கொண்டு ஒரு வினாடி ஆச்சரியமும் அதிசயமுமாக நின்றார். பதினாறு வயசுப் பெண், குழந்தை என்று நினைத்துக் கொண்டிருந்த அந்த ஜனனிதானா இவள் என்கிற சந்தேகம் வந்தது. 'அது நல்லதுதானே பெரியப்பாவாமே...?' அந்த அளவிற்கு ஜகன்னாதனின் உருவம் இவளைக் கவர்ந்து விட்டிருக்கிறது. அந்த நிறமும், உயரமும், முன்நெற்றியில் விழும் முடியும், ஆண்மைக் கம்பீரமும் ஈர்த்து விட்டிருக்கிறது. மனதின் அடித்தளத்தில் பதிந்து போயிருக்கிறது. இனி இதை மாற்றுவதில் அர்த்தமில்லை. இவன்தான் மாலையிடப் போகிறவன் என்கிற கற்பனையும், உறுதியும் ஏற்பட்டபின் —இவனைக் கணவன் ஸ்தானத்தில் வைத்துப் பார்த்தபின் வேறு யாரையும் அந்த இடத்தில் நிறுத்த மனசு சம்மதிக்காது. முதல் முதலாகப் பதிந்து போன உருவம் இந்த ஜகன்னாத னது உருவம். இதற்கு மூலகாரணமே நான்தான். அதனால் இக் கல்யாணத்தைக் கடைசிவரை கூட இருந்து நடத்தி வைக்கவேண்டுமே தவிர அடிமனசுக்குள் ஏற்பட்டிருக்கிற நெருடலை வெளிக்காட்டக் கூடாது...



மீண்டும் கூடத்திற்கு வந்து புன்னகையும், மலர்ந்த முகமுமாக ''அப்போ, இரண்டு பக்கமும் எல்லோருக்கும் திருப்திதான். ஒப்புத் தாம்பூலம் இன்றைக்கே மாற்றி முகூர்த்தத்துக்கு நாள் குறிச்சிடலாம். கல்யாணத்துக்கு முந்தின நாள் நிச்சய தாம்பூலம் வச்சுக்கலாம்...'' என்றார் அவர்.

''ஆஹா...அப்படியே செய்திடலாம்...'' என்று கங்காதரனும் ஒப்புக் கொண்டார். ஜகன்னாதனோ, அந்த அம்மாளோ வாய் திறக்கவில்லை. வந்ததிலிருந்து ஜகன்னாதனின் அப்பா கருணாகரன் ஒரு வார்த்தை பேசாததால் அவரிடம் எது கேட்டும் பயனில்லை என்று மாணிக்கவாசகம் அந்த அம்மாளிடமே கேட்டார்.

''என்னம்மா...நீங்க ஒன்னும் சொல்லாமல் பேசாம இருக்கீங்க...?''

அதைக் கேட்டுத் தலையை உயர்த்தின அந்த அம்மாள்—

''ஒப்புத்தாம்பூலம் மாத்தறதில் எங்களுக்கும் எந்த ஆட்சேபனையும் இல்லை...ஆனால் அதுக்கு முன்னாலே...'' என்று இழுத்தாள்.

''என்ன சொல்லுங்கம்மா...அதுக்கு முன்னாலே என்ன செய்யணும்...?''

''சீர் செனத்தியெல்லாம் இன்னும் பேசி முடிக்கல்லி யேன்னு கேட்டேன்...''

''அதெல்லாம்தான் அன்னைக்கே பேசிட்டேனேம்மா...'' என்றார் மாணிக்கவாசகம்.

''அன்னைக்கு உங்க கிட்டதானே பேசினேன். பொண்ணோட அப்பாகிட்ட பேசலையே...''

''அவன் கிட்ட பேசினால் வேற, என் கிட்ட பேசினால் வேற இல்லேம்மா... அன்னைக்கே வந்து அவன் கிட்ட நான் சொல்லிட்டேன். ஐம்பது சவரன் நகை, கைல ஐம்பதினாயிரம் ரூபாய் தாணும்னு. அது தவிர வெள்ளி, பித்தளை, எவர்

சில்வர் பாத்திரம் எல்லாத்துக்கும் அவன் ஒத்துக்கிட்டானே... கைல தரவேண்டிய ஐம்பதினாயிரத்துக்குக் கூட ஏற்பாடு செய்திட்டிருக்கமே...''

''அப்படியா...?'' என்று இழுத்த அந்த அம்மாள் ''அதுல தான் கொஞ்சம் வித்தியாசம் இருக்கும்னு தோணுது...'' என்றாள்.

''என்னம்மா...?'' என்ற கங்காதரனின் குரல் எழும்பு வில்லை. 'இதற்கு மேல் பணம் கேட்டால் என்ன செய்வது...' என்கிற பயம் நெஞ்சைக் கவ்வி குரலை அடைத்துக் கொண்டு விட்டது. மாணிக்க வாசகத்திற்கும் அடிவயிறு ஒரு தரம் புரண்டது. ஆனாலும் சமாளித்துக் கொண்டு மெதுவாகக் கேட்டார்.

''சொல்லுங்க... புதுசா அதுல என்ன மாறுதல்...?''

''வேற ஒன்னுமில்லீங்க... கைல கொடுக்கிற பணத்துல ஒரு இருபத்தைந்து சேர்த்துக் கொடுத்துடுங்க...''

''இருபத்தைஞ்சுன்னால் இருபத்தைந்தாயிரமா...?''— மாணிக்க வாசகத்தின் குரலும் எழும்ப மறுத்தது.

''பின்ன... வெறும் இருபத்தைந்து ரூபாயா கேட்பாங்க பாருங்க! இவரு வேடிக்கை பண்றதை...''—வந்தவன் விளை யாட்டாக்க முயல மாணிக்க வாசகம் கங்காதரனைப் பார்த்தார். கங்காதரனின் முகத்தில் உயிர்க்களை விடை பெற்றுக் கொண்டு விட்டிருப்பது புரிந்தது. அரண்டு போய் உட்கார்ந்து விட்டிருப்பது தெரிய மாணிக்க வாசகமே அவருக்குப் பதிலாகப் பேச்சைத் தொடங்கினார்.

''அது எப்படிங்க முடியும்...? இந்த ஐம்பதினாயிரமே ரொம்ப ரொம்ப கஷ்டப்பட்டு ஊர் நிலத்தை விற்று ஏற்பாடு செய்த பணமுங்க... அதுல கூட இன்னும் பாக்கிப் பணம் கைல வரலிங்க...இன்னொரு இருபத்தையாயிரமானால் எங்க சக்திக்கு மீறின விஷயங்க...''

அந்த அம்மாள் மகனை ஏறிட, மகன் கண்சாடை காட்ட அவன் சற்று இறங்கி வந்தாள்.



''அப்போ ஒன்னு செய்யிங்க. ஐம்பது சவரனை முப்ப தாக்கி இருபத்தைந்து கைல ரொக்கமா சேர்த்துக் கொடுத் துடுங்க...''

மாணிக்க வாசகம் மீண்டும் கங்காதரனைப் பார்க்க கங்கா தரன் பரிதாபமாக விழித்தார். ஒரு வினாடி இந்த சம்பந்தமே வேண்டாம் என்று சொல்லிவிடலாமா என்று கூடத் தோன்றி யது. ஆனால் ஜகன்னாதனின் படிப்பும், முகமும், நிறமும் சொல்ல இடம் தரவில்லை. தன் மகளுக்கு இவனை விடப் பொருத்தமான மாப்பிள்ளை கிடைக்கமாட்டான் என்று தோன்ற—

''இதோ ஒரு நிமிஷங்க...'' என்று மாணிக்கவாசகத்தை அழைத்துக் கொண்டு உள்ளே போனார். 395750

''என்ன மாணிக்கவாசகம் இப்படிப் பேசறாங்க...''? என்று அதிருப்தியாய் கேட்டார். 894.8113

''பேசறாங்களே...!''என்று மாணிக்கவாசகமும் வருத்தத் தோடு சொன்னார்.

''என்ன செய்யறது கங்கு. பிள்ளையைப் பெற்றுப் படிக்க வும் வச்சு, பட்டணத்துலயும் இருக்கிற திமிர்ல கேட்கறாங்க. நம்மால முடியாது. வேணாம் போன்னு உதறி விட்டுடலாம். ஒரு நிமிஷம் கூட ஆகாது. ஆனால் உம் பொண்ணு மனசுல அந்தப் பையன் படமா பதிஞ்சுப் போயிருக்கானே... 'ஏம்மா பணம் காசுல கண்ணாயிருப்பாங்க போல இருக்கேம்மான்னு கேட்டேன்னால், 'அது நல்லது தானே பெரியப்பா'ன்னு... பதில் சொல்லுது. அந்த அளவுக்கு மனசு போயிருக்கு. நாமளே கூட்டிட்டு வந்து காமிச்சு, இவன்தான் வீட்டுக் காரன்ற நினைப்பையும் உண்டாக்கி இப்போ வேணாம்னு சொன்னால் அதும் பிஞ்சு மனசு பாழ்பட்டுப் போயிருமேன்னு பார்க்கறேன். முதல் முதலா வந்த வரன்—''

''அப்போ சரி மாணிக்கம். பொண்ணோட வாழ்க்கைக்கு முன்னால இந்த இருபத்தஞ்சாயிரம் எந்த மூலைக்கு...? அதோட திருப்தியும், சந்தோஷமும் முக்கியம். அவங்கதான்

7 JAN

இருபது சவரனைக் குறைச்சுக்கறாங்களே... ராஜம்பாவோடு சங்கிலியைப் போடாமல் விற்று பணமாக்கி ரூபாயாக கொடுத்துடுவோம். போ.. போய் சரின்னு ஒப்புக்க. அப்படியே நம்ப ஐயரை வரச் சொல்லி, முகூர்த்த தேதி குறிச்சிடு. தாம் பூலம் மாத்த ஏற்பாடு பண்ணு... போ...''

அடுத்த அரை மணி நேரத்தில் பரபரவென்று தாம்பூலம் மாற்றிக் கொள்ளப்பட்டது. இரு பக்க வசதி பார்த்து மறு மாதம் பத்தாம் தேதி கல்யாணம் நிச்சயிக்கப் பட்டது. இந்த கிராமத்தில்தான் கல்யாணம் என்றதற்கும் அந்த அம்மாள் சம்மதித்து ஆச்சரியப்படுத்த முதல் இருபத்தையாயிரத்தை அன்றே கொடுத்த கங்காதரன் மீதி ஐம்பதினாயிரத்தை கல்யாணத்தன்று காலை கொடுப்பதாக ஒப்புக் கொள்ள—

இரு பக்கமும் குறைகள் எதுவுமின்றி ஒப்புத் தாம்பூல நிகழ்ச்சி சந்தோஷமாக முடிவுபெற ஜகன்னாதனும், அவன் பெற்றோரும் மாணிக்கவாசகத்தின் வீட்டில் பகல் சாப் பாட்டை முடித்துக் கொண்டு சென்னைக்குக் கிளம்பி னார்கள்...

## 7

தெருவை அடைத்துப் பந்தல் போட்டிருந்தது. புஸ்''புஸ்''வென்று திரும்பின இடமெல்லாம் பெட்ரோ மாக்ஸ் நின்றிருந்தது. பந்தல் காலைச் சுற்றிச் சுற்றி சிறுவர்களும் சிறுமியுமாக விளையாடிக் கொண்டிருந்தனர். கைவண்டியில் வாழை இலைக் கட்டுகளும், தார்தாராக வாழைக் காய்களும் வந்து இறங்கின. கல்யாண புரத்தி லிருந்து முகூர்த்தப் பைக்குத் தேங்காய்கள் கொண்டு கொட்டப் பட்டன. மாணிக்கவாசகமும், கங்காதரனும் நிற்க நேர மின்றி ஓடினார்கள். நொடிக்கு ஒரு தரம் தெருக்கோடிவரை போய்ப் பார்த்தனர். இன்னமும் பிள்ளை வீட்டுக்காரர்கள் வரவில்லை. அன்று காலையே வந்துவிடுவதாகச் சொன்ன வர்கள் பகல் ஒரு மணி ஆகியும் வராததால் கங்காதரன்



பதறிக் கொண்டிருந்தார். மாணிக்கவாசகத்தைத் தனியாக அழைத்துப் போய்க் கேட்டார்.

''என்ன மாணிக்கம், இன்னும் மாப்பிள்ளை வீட்டுக்காரங் களைக் காணோம்...?''

''வருவாங்க. வராமலா போயிடுவாங்க. நீ ஏன் இப்படிப் பதற்றே...?''

''என்ன நீ...? சாயந்திரம் ஆறு மணிக்குள்ளாற மாப் பிள்ளை அழைக்கணும்னு ராஜம்பா பறக்குது...''

''ஆறு மணிக்குதானே...? அதுக்குள்ளாற வந்துடு வாங்க. இப்ப மணி ஒன்னுதானே ஆகுது...?''

''நீ பட்டணம் போய் காரு ஏற்பாடு பண்ணிக் கொடுத் தியே, அப்போ எப்ப வரதா சொன்னாங்க...?''

''நான் போய் எத்தினி பேரு வரப் போறுங்கன்னு கேட் டேன் கங்கு... ஒரு நூறு பேருதான் வருவோம்னு சொன் னாங்க. மாப்பிளையோட ஆபீசுக்காரங்க யாரும் இந்தக் கிராமத்தைத் தேடி வரமாட்டாங்கன்னாங்க. கல்யாணமான கையோட பெங்களூர் கூட்டிட்டுப் போயி ஓட்டல்ல ரிசப்ஷன் வைக்கப் போறோம்னாங்க. அது அவங்க பாடுன்னு நான் வரப்போற நூறு பேருக்கு பஸ் ஒன்னு ஏற்பாடு பண்ணி அட் வான்ஸ் கொடுத்து சொல்லிட்டு வந்தேன். காலைல பத்து மணிக்கெல்லாம் இருப்போம்னாங்க... ஒரு வேளை வண்டி ஏதாவது கோளாறு பண்ணிருச்சோ என்னவோ, பார்க் கலாம்...''

அவர் சொல்லி முடிக்கவில்லை. யாரோ ஒரு பையன் ஓடி வந்து மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வந்தாச்சு என்று கத்த கங்காதரனும் மாணிக்கவாசகமும் எதிர் கொண்டழைக்க ஓடினார்கள். நூறு பேரை எதிர்பார்த்துப் போனவர்களின் எதிரில் பத்துப் பேரே நின்றனர். அதுவும் மாணிக்கவாசகம் ஏற்பாடு செய்திருந்த பஸ்ஸில் வரவில்லை. சின்ன வேட

டோர் வாஸில் வந்திருந்தனர். வந்திருந்தவர்களும் சரியா ஆட்களாகப் படாததால் மாணிக்கவாசகம் ஜகன்னாதன டமே கேட்டார்.

''என்னங்க மாப்பிள்ளை... மீதிப்பேர் எல்லா வரலை...?''

ஜகன்னாதனை முந்திக் கொண்டு அவனது அம்மா பதி சொன்னாள்.

''சொந்தக்காரங்க முக்கால்வாசிப் பேருக்கு மே வரலைங்க. இவனைத் தங்க பொண்ணுங்களில் ஒருத்திக்கு கட்டித் தரலைன்னு கோபம். கல்யாணம் நிச்சயம் ஆனதி ருந்து ஒரே சண்டை. 'எப்படி நடக்கும் இந்தக் கல்யாண பார்த்துடறோம்'னு உறுமிக்கிட்டு இருந்தாங்க. கடைசியி நான் தான் எங்கே கல்யாணத்தை நிறுத்திடப் போறா களோன்னு விட்டுட்டு வந்திட்டேன். பொறாமைபிடிச் ஜனங்க. ஒருத்தன் நல்லா வாழ்ந்தா பொறுக்கமாட்ட னுங்க. அதனாலதான் கல்யாணம் நடக்கிற இடம்கூடத் தெ யக் கூடாதுன்னு பத்திரிகை கூடக் கொடுக்கலை. பத்து பேருக்கு பஸ் எதுக்குன்னு விட்டுவிட்டு வேன் ஏற்பாடு பன் ணிக்கிட்டு வந்துட்டோம்...'' மாணிக்கவாசகத்திற்கு மீன் டும் நெருடிற்று. ஆனால் பேசாமல் இருந்தார். கங்காதரன் அந்தம்மா சொல்றதைப் பாராட்டியவராக—

''நல்ல காரியம் செய்தீங்க. வாங்கம்மா, உள்ள போவம் முதல்ல சாப்பிட்டு கொஞ்சம் ரெஸ்ட் எடுங்க. நாலு மணிக் காபி, டிபனுக்கு அப்புறம் மாப்பிள்ளை அழைப்பை வச்சு கலாம். முதல் நிச்சயதாம்பூலம் மாத்தற போது கை கொடுக்க வேண்டிய மீதிப்பணம் ஐம்பதினாயிரத்தையு கொடுத்துடறேன்...'' என்றார்.

''ஆகட்டுங்க. நிச்சயதாம்பூலத்துல வேணாம். இதை எதுக்கு நாலுபேர் அறியதரணும்? அதுக்கு முன்னால தனியா நானும், எம் மகனும் வரோம். அப்போ கொடுத்துடுங்க...''



''ஓ... எப்ப கொடுத்தாலும் எங்களுக்கு ஒன்னுதான்...'' என்ற கங்காதரன் பின்னால் வந்து கொண்டிருந்த மாணிக்க வாசகத்திடம், ''என்ன மாணிக்கம்'' என்று கேட்க அவர் உள்ளுக்குள் ஓடிய சந்தேகங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு—

''அது சரி...'' என்று தலையாட்டினார். அத்துடன் பேச்சு நின்றது.

அவர்களை அழைத்துப் போய் சாப்பிடச் செய்து, தாம் பூலம் கொடுத்து உபசரித்த கங்காதரன் ஜகன்னாதனைப் பார்த்துச் சொன்னார்.

''மணி இப்போ மூணரை ஆயிடுச்சு மாப்பிள்ளை. நீங்க கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துக்கிட்டால் ஐந்து மணிக்கு காபி டிபன் முடிஞ்சு மாப்பிள்ளை அழைப்புக்குப் புறப்பட சரி யாக இருக்கும். வாங்க உங்க இடத்துக்குப் போகலாம்.''

அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த பக்கத்து வீட்டில் விட்டுத் திரும்பின கங்காதரன் மாணிக்கவாசகத்துடன் தன் அறைக்குள் நுழைந்தார்.

''மாப்பிள்ளை அழைப்புக்கு முன்னால மாப்பிள்ளையும், அந்தம்மாவும் பணத்துக்கு வருவாங்க மாணிக்கம். அதுக்குள்ள நாம எண்ணி ஒரு பைலபோட்டு கட்டி வச்சிடலாம்...'' என்றார்.

''கட்டி வைக்கலாம். ஆனால் கொடுக்கிற பணத்தை பந்தல்ல நாலு பேர் அறியத் தர்றது நல்லது இல்லே...?'' என்று ஆலோசனை வழங்கினார் மாணிக்கவாசகம். ''தரலாம் தான்...'' என்று இழுத்தார் கங்காதரன். ஆனால் அந்தம்மா யாருக்கும் தெரிய வேணாம்னு தனியா கேட்கறாங்க...''

''அதான் அப்படி ரகசியமாத் தரணுமான்னு நான் யோசிக்கிறேன்...''

அதைக் கேட்ட பின் கங்காதரனும் யோசித்தார். பின்னர் மெதுவாக சொன்னார். ''இதுல ரகசியம் என்ன இருக்கு

மாணிக்கம்? பணம் கொடுக்கிற விவரம் உனக்குத் தெரியும், எனக்குத் தெரியும். வேணும்னால் பெரிய மாமாகிட்டேயும் மூத்தவர்கிட்டேயும் சொல்லலாம். அவங்க பக்கத்துல அந்தம்மாவும், மாப்பிள்ளையும்தான் முக்கியமானவங்களா தெரியறாங்க. மாப்பிள்ளையோட அப்பா வாய திறக்க மாட்டேங்கறாரு. கூட வந்திருக்கிறவங்க யாரு, என்ன உறவுன்னு தெரியலே... அந்தம்மாவும் சொல்லலலை. நாமா எப்படி கேட்கிறதுன்னு விட்டுட்டேன். கூட வந்திருக்கிறவங்களைப் பார்த்தால் நம்ம ஜனம் மாதிரியே இல்லே... சரி, நமக்கென்ன. மாப்பிள்ளை நல்லவராத் தெரியறாரு... அந்தம்மா கொஞ்சம் பணத்துல கண்ணா இருக்கறாங்களே தவிர மற்றபடி நல்லவங்கதான்னு விட்டுட்டேன். பணம் ஐம்பதினாயிரம் தர்றதா பேச்சு. அதை அவங்க விருப்பப்படி தனியாவே கொடுத்துடலாமே மாணிக்கம். நீயும், நானும் போறாதா...? இதை ஏன் அனாவஸ்யப் பிரச்சினையாக்கணும் சொல்லு...?''

அவர் சொன்னது சரி என்று படவே மாணிக்க வாசகமும் மறுத்து ஒரு பேச்சும் பேசவில்லை.

''அப்படியே செய்துருவோம்'' என்றார்.

பின்னர் அறைக்கதவை மூடித் தாளிட்டு நூறு ரூபாய் நோட்டுக்களாக எண்ணி ஐம்பதாயிரத்திற்கு ரப்பர் வளையம் போட்டு காகிதப் பையினுள் சுற்றி துணிப்பையில் கட்டி வைத்தார். ''இந்தா மாணிக்கம். இதை நீயே அவங்ககிட்டே கொடு...''

''நீதான் தரணும்'' என்று மறுத்தார் மாணிக்கவாசகம்.

''ம்ஹூம். நீ தேடிக்கிட்டு வந்த மாப்பிள்ளை. நீ முன்ன தின்னு நடத்தி வைக்கிற கல்யாணம். அதனால இதையும் நீதான் தரணும், நீ தந்தால் என்ன நான் தந்தால் என்ன...? பொண்ணு நல்லபடி, சந்தோஷமா இருந்திச்சுன்னால் அது போதும் நமக்கு...''



அன்று மாலை நாலரை மணி இருக்கும். பத்மாவதியும், ஜகன்னாதனும் கங்காதரனைத் தேடிக் கொண்டு வந்தனர்.

''மாப்பிள்ளை அழைப்புக்கு முன்னால் பணத்தை வாங்கிட்டுப் போகலாம்னு வந்திருக்கோம்'' என்றனர்.

கங்காதரன் அவர்களை அறையினுள் உட்கார வைத்துவிட்டு மாணிக்கவாசகத்தைக் கூப்பிட்டார்.

''அவங்க பணத்துக்காக வந்திருக்காங்க...'' என்றார்.

மாணிக்கவாசகம் பணப்பையை எடுத்து ஜகன்னாதனிடம் கொடுத்துவிட்டு பத்மாவதியம்மாளைப் பார்த்துச் சொன்னார்.

''பணமோ, காசோ பெரிசில்லை அம்மா. எங்க பொண்ணு உங்க வீட்டில சந்தோஷமா, சௌக்கியமா இருக்கணும். அதுக்காகதாங்க நிலம், நீரை விற்று கடனோ, உடனோ வாங்கி எல்லாம் செய்யறது...''

''அதுக்கென்ன... சந்தோஷமாத்தான் இருப்பா... அந்தக் கவலையெல்லாம் உங்களுக்கு வேணவே வேணாம். நீங்க முகூர்த்த வேலையைப் பாருங்க. பணம் சரியா இருக்குமில்ல...?''

''வேணுமின்னா எண்ணிப் பார்த்துக்குங்க...''

''வேணாம் வேணாம்...'' என்ற அந்த அம்மாள், ''இதோ அரை மணி நேரத்துல தம்பி மாப்பிள்ளை அழைப்புக்குத் தயாராயிடும்...நீங்க போயி ஏற்பாடு பண்ணுங்க...'' என்றாள்.

அடுத்த முக்கால் மணி நேரத்திற்கெல்லாம் மாப்பிள்ளை அழைப்பு நடந்து நிச்சயதாம்பூலம் மாற்றப்பட்டு மறுநாள் அதிகாலையில் முகூர்த்த வேலைகள் துவங்கப் பெற்று ஏழரை ஒன்பதிற்குள் ஜகன்னாதன் ஜனனியின் கழுத்தில் மூன்று முடிச்சுகள் போட்டபோது கங்காதரனின் கண்களும் மாணிக்கவாசகத்தின் கண்களும் ஏராளமாய் கலங்கி சிவந்து கிடந்தன...

அன்றிரவு சடங்குகள் முடிந்ததும் மறுநாள் காலையில் வந்திருந்த வேனிலேயே உடன் வந்த அத்தனை பேரையும் அனுப்பி வைத்த பத்மாவதி மாணிக்கவாசகத்திடம் கேட்டாள்.

''ஏங்க ஜனனியை நாங்களே கூட்டிட்டுப் போகலாம்னு இருக்கோம். அதுல உங்களுக்கு ஆட்சேபணை எதுவுமில்லையே...இல்லே, நீங்களா கொண்டாந்து விடணும்னு நினைச்சுட்டிருக்கீங்களா...?''

மாணிக்கவாசகம் அதற்குப் பதில் சொல்லாமல் கங்காதரனைப் பார்த்தார். கங்காதரன் மனைவியின் முகத்தை ஏறிட முதல் முறையாக ராஜம்பாள் வாய் திறந்தாள்.

''ஆட்சேபணை என்ன இருக்கு சம்பந்தியம்மா...நீங்க உங்க இஷ்டப்பட்ட தாராளமாக கூட்டிட்டுப் போகலாம். இனிமேல் அவ உங்க வீட்டுப் பிள்ளை. ஆனால் சம்பிரதாயப் படி பெத்தவங்க கூட வந்து கொண்டு விடறதுதான் முறை. அந்த முறைக்கு நானும் அவரும் பட்டணம் வரை வந்து மறுநாளே திரும்பிடறோம். அதுக்கப்புறம் பெங்களூர் அனுப்பறது உங்க பொறுப்பு...''

''நீங்க வர்றது பற்றி எனக்கு ரொம்ப சந்தோஷம்மா... இங்கேயிருந்து போன ராத்திரியே பெங்களூர் கிளம்பிடணும்னு அவன் சொல்றான். அங்கே ஆபீஸ்காரங்க, சிநேகிதங்களுக்கெல்லாம் விருந்து வைக்கணுமாம்...''

''ஆஹா...அப்படியே கிளம்பட்டும். ஆனால் பெங்களூருக்கு அவளை மட்டும் தனியா அனுப்பி வச்சுடாமல் நீங்களும் கூடபோய் கொஞ்ச நாளாவது இருக்கணும் சம்பந்தியம்மா... கிராமத்துல வளர்ந்த பொண்ணு; இன்னும் ஒரு நாள் கூட அடுப்படிக்குள்ள நுழைஞ்சதில்லே...திடீர்னு பட்டணம், பெங்களூர்னால் அவளுக்கு ஒன்னும் புரியாது...குழந்தை பிரமிச்சுப் போயிடுவா...''



''நீங்க ஏன் கவலைப்படறீங்க...நானும், எங்க வீட்டுக்காரரும் கூடவே போறதாகத்தான் இருக்கோம். அப்புறமா மெட்றாஸ் வீட்டை காலி பண்ணிட்டு பெங்களூர்ல அவன் கூடறே இருக்கிற உத்தேசம்தான்.

அதைக் கேட்ட பின்புதான் ராஜம்பாளுக்கு நிம்மதி வந்தது. தன் பெண் முன்பின் தெரியாத ஊரில் தனியாகக் குடித்தனம் செய்யப் போவதில்லை. துணைக்கு மாமனாரும், மாமியாரும் கூடவே இருக்கப் போகிறார்கள் என்கிற திருப்தி ஏற்பட மெல்ல புன்னகைத்தாள்.

''அப்பாடி...இதைக் கேட்டப்புறம்தாம்மா எங்களுக்கு திருப்தியா இருக்கு. எங்கே அவளைத் தனியா விட்டுடுவீங்களோன்னு கவலைப்பட்டுட்டிருந்தோம். இனிமேல பயமில்லை...'' என்று வாய் விட்டுச் சிரித்தாள். அதன் பின் மகளின் சாமான்களைப் பெட்டி பெட்டியாக அடுக்கினாள். நகைகளை ஜனனியைப் போட்டுக் கொள்ளச் செய்து மற்ற வெள்ளி, எவர் சில்வர் சாமான்களை பத்மாவதியிடம் ஒப்படைத்தாள்.

''இனி இதற்கு மட்டுமில்லாமல் எங்க பொண்ணுக்கும் நீங்கதாம்மா பொறுப்பு'' என்றாள்.

அன்று மாலை முதல் காரில் ஜகன்னாதன், ஜனனி அவனது பெற்றோர்களும், அடுத்ததில் ராஜம்பாள், கங்காதரனுடன் மாணிக்கவாசகமும் புறப்பட்டுப்போனார்கள். ராத்திரி பதினோரு மணிக்கு மேல் கீழக் கட்டளையை அடைந்து படுத்துத் தூங்கி மறு நாள் பொழுது விடிந்ததும் கங்காதரன் மனைவியையும், மாணிக்க வாசகத்தையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டு விட்டார்.

''ஜாக்கிரதையா இரும்மா. இனிமே அத்தையும், மாமாவும் தான் உனக்கு அம்மா அப்பா. அவங்க சொல்ற மாதிரி நட...மரியாதைக் குறைவா ஒரு பேச்சு பேசாத... வீட்டுக்காரர் மனசு கோணாம இரு...அடிக்கடி லெட்டர்

போடு...பெங்களூர் போன கையோட தந்தி ஒன்று அடிச்சுடு. என்ன. வரட்டுமா...?''

விசும்பலும், கேவலுமாக பதில் வர ராஜம்பாளுக்குத் தொண்டையை அடைத்தது. மகளை கொண்டு விட்டு அழுத படி திரும்பக் கூடாது என்கிற காரணத்தால் கண்ணீரை வழியவிடாமல் கட்டுப் படுத்திக் கொண்டாள்.

''வரேம்மா.. பார்த்துக்குங்க...இனி நீங்கதான் அவளுக்கு எல்லாம்...'' என்றவள் அதற்கு மேல் தாங்க இயலாதவளாக சரேலென்று வெளியில் வந்து விட்டாள். பின்னாலேயே கங்காதரனும், மாணிக்க வாசகமும் சொல்லிக் கொண்டு வெளியில் வந்தார்கள். தெருக் கோடி தாண்டி டாக்ஸியில் ஏறி உட்கார்ந்ததும் அதற்கு மேல் கட்டுப்படுத்த இயலாதவர்களாக கங்காதரன் மேல் துண்டை வாயில் அடக்கியும், ராஜம்பாள் புடவைத் தலைப்பால் இறுக்கிக் கொண்டும் வாய்விட்டு அழத்துவங்க—

மாணிக்க வாசகம் கோபித்துக் கொண்டார்.

''என்ன கங்கு இது...? பட்டணமும், பெங்களூரும் ஒரு அடியில் தானே இருக்கு. அதுக்குப் போயி இப்படியா அழுவாங்க. நினைச்சால் கிளம்பிப் போய் பொண்ணைப் பார்க்கற தூரம் தானே... இருக்கு? இப்படி அழலாமா? நீ அழுதால் தங்கச்சியும் அழுவுது பாரு... அதுக்கு தைரியம் சொல்றதை விட்டுட்டு...என்னப்பா நீ... கண்ணைத் துடைச்சிக்க...ம்... டாக்ஸி டிரைவர் சிரிக்கறுரு பாரு...தங்கச்சி! முகத்தை துடைம்மா...''

அதற்குப் பின்னர் மெல்ல மெல்ல அழுகை குறைந்து விசும்பலாக வடிந்து மெல்ல மெல்ல முற்றிலும் ஓய்ந்து போயிற்று...

# 8

இவர்கள் ஊர் வந்து சேர்ந்த மறுநாளே பெங்களூரிலிருந்து தந்தி வந்தது. 'பத்திரமாக ஊர் வந்து சேர்ந்தேன். மீதி கடிதத்தில்' என்ற ஆங்கில எழுத்துக்களில் ஜகன்னாதன் தான் கொடுத்திருந்தான். அதற்கு நான்கு நாட்களுக்குப் பின்னர் ஜனனி நாலைந்து பக்கக் கடிதம் எழுதியிருந்தாள். அங்கு சந்தோஷமாக இருப்பதைத் தெரியப்படுத்தியிருந்தாள். அத்தை மிகுந்த அன்பாக நடத்துவதையும், கணவன் கண் இமையில் வைத்துத் தாங்குவதையும் சொல்லியிருந்தாள்.

அம்மா, அப்பா, நீங்கள் எந்தக் கவலையும் படவேண்டாம், இவர்கள் மிக நன்றாக வைத்துக் கொள்கிறார்கள். நாளை நானும், இவரும் மட்டும் தனியாக ஊட்டிக்குப் போகிறோம். நான்கு நாட்கள் தங்கி விட்டுத் திரும்புகிறோம். பெங்களூர் முழுதும் சுற்றிப் பார்த்தாகி விட்டது. இங்கு தோட்டமும், வீடுகளும், அழகாக இருக்கின்றன. நம் ஊரை விடக் குளிர் அதிகம். நீ அப்பா, அண்ணன்கள் எல்லோரும் வந்து என்னோடு தங்க வேண்டும். ஊரைச் சுற்றி காண்பிக்கிறேன். வரும்போது மாணிக்கப் பெரியப்பா, பெரியம்மா, சிவா அண்ணாவையும் அழைத்து வரவும். பெரியப்பாவிற்குத் தனியாக லெட்டர் போடுகிறேன்.

நாளை காரில் கிளம்பி மைசூரில் தங்கிப் பார்த்துவிட்டு அங்கிருந்தே ஊட்டி போகிறோம். நாலே நாளில் திரும்பி வந்து விடுவேன். வந்ததும் கடிதம் எழுதுகிறேன். நீங்கள் புறப்பட்டு வாருங்கள். ஒரு வாரம் என்னுடன் தங்கிப் போகலாம். அண்ணன்களிடம் சொல்லி கடிதம் எழுதச் சொல்லவும்.

இப்படிக்கு,
ஜனனி

அன்று முழுதும் அடிக்கடி அந்தக் கடிதத்தை எடுத்துப் படித்துப் பார்த்தாள் ராஜம்பாள். படிக்கிற போதெல்லாம் கங்காதரனும் கூட வந்து நின்று கொண்டார்.

''லெட்டரைக் கொடு, மாணிக்கத்துக்குப் படிச்சுக் காட்டிட்டு வரேன்...'' என்று கடிதத்தை வாங்கிக் கொண்டு மாணிக்கவாசகத்திடம் போனார்.

அங்கு போனதும் மாணிக்க வாசகம் ஜனனி தனக்கு அன்பும், நன்றியும் ததும்ப எழுதியிருந்த கடிதத்தை எடுத்துக் கொடுத்துப் படிக்கச் செய்து பின் குரல் தழுதழுக்கச் சொன்னார்.

''நான் கூட நடுவில சந்தேகப்பட்டுப் போனேன்டா கங்கு...அந்தம்மா பணம் பணம்னு அலையறாங்களேன்னு தோணிச்சு. இந்த சம்பந்தம் தகுதியற்ற இடமோன்னு நினைச்சு வேதனை ஏற்பட்டது. அந்தப் பொண்ணு வேற; பையன் மேல ஆசைப்பட்டுடிச்சேன்னு கவலை வேற வந்தது. இத்தனையும் உன்கிட்டே கூடச் சொல்லாமல் பேசாமல் இருந்தேன். ஆண்டவன் மேல பாரத்தைப் போட்டுட்டு கல்யாண வேலைகளைக் கவனிச்சேன். ஆனால் ஆண்டவன் நம்மைக் கைவிடலே, உன் நல்ல மனசுக்கு ஒரு குறையும் வராது. ஜனனி நல்ல பொண்ணு. கள்ளம் கபடம் அறியாதவ. இப்போ அவளே எப்படி லெட்டர் எழுதியிருக்கா பாரு...சந்தோஷமா இருக்கா. அவங்க நல்லா வச்சுக்கறாங்க. வேற என்னடா வேணும்...? இதுக்குத் தானே கல்யாணமே செய்து கொடுத்தே. இனிமேல் நிம்மதியா சாப்பிட்டு நல்லாத் தூங்கு போ...''

கேட்கக் கேட்க கங்காதரனுக்கு மனசு லேசாகி சொல்ல இயலாத அமைதியும், சாந்தியும் ஏற்பட்டது. நெஞ்சுக்குள் எல்லையற்ற நிம்மதி படர்ந்தது. புன்சிரிப்பில் அத்தனையும் வெளிப்படுத்தி மாணிக்கவாசகத்தைப் பார்த்தார்.

''அவ ஊட்டியிலிருந்து வந்தப்புறம் நாமெல்லாம் ஒரு தரம் பெங்களூர் போயிட்டி வரலாமா...?''



குழந்தையாய் வந்த அந்தக் கேள்வியில் மாணிக்க வாசகரும் சிரித்துக் கொண்டார். தானும் தன் பெண்களைக் கல்யாணம் செய்து கொடுத்தனுப்பி விட்டு இப்படித்தானே அலைந்தோம் என்று நினைத்துக் கொண்டார்.

''ஆகட்டும்...அதுக்கு இப்ப என்ன அவசரம். அவ ஊட்டியிலிருந்து திரும்பி வந்து லெட்டர் போடட்டும். அப்புறம் அதைப் பற்றி யோசிக்கலாம்...''என்று சொல்லி கங்காதரனை அனுப்பிவிட்டு உள்ளே வந்தார் மாணிக்க வாசகம்.

## 9

**ஊ**ட்டியிலிருந்து திரும்ப வந்து ஜனனி கடிதம் எழுதுவாள், கிளம்பி பெங்களூர் போய் அவளைப் பார்த்து விட்டு வரலாம் என்று காத்திருந்தவர்களுக்குக் கடிதத்திற்குப் பதிலாகத் தந்தி வந்தது. அன்று காலை 9.10 மணிக்கு பெங்களூரில் தந்தி கொடுக்கப்பட்டிருந்தது. இதையும் ஜகன்னாதனே கொடுத்திருந்தான்.

'ஜனனி இறந்து விட்டாள்.

உடனே வரவும்.'

தந்தியின் வாசகம் கேட்டு ராஜாம்பாள் மயங்கிக் கீழே விழுந்தாள். ஜனனியின் அண்ணன்கள் இருவரும் அவளைத் தூக்கிக் கட்டிலில் கிடத்தி முதலுதவி செய்து கொண்டிருந்த போது கதறியவாறு அந்தத் தந்தியைக் கையில் எடுத்துக் கொண்டு மாணிக்கவாசகத்தைத் தேடி ஓடினார் கங்காதரன்.

வீட்டு வாசலில் நின்றிருந்த மாணிக்கவாசகத்திடம் பேச்சு எழும்பாமல் குமுறிக் குமுறி அழ...

பதறிப்போன அவர், ''என்னடா கங்கு...என்ன விஷயம்...?'' என்று அவரது தோளைப்பற்றி கேட்டதும் ஒன்றும் சொல்லாமல் தந்தியை மட்டும் நீட்டினார்.

வாங்கிப் படித்த மாணிக்கவாசகத்தின் அடிவயிறு புரண்டது. நெஞ்சை அடைத்துக் கொண்டது. வாய் குழறிற்று.

''என்னடா...இது...?'' என்ற கேள்வியில் உயிரின் துடிப்பு தெரிந்தது.

அந்தச் சின்னக் கேள்வியில் உடைந்து போன கங்காதரன் மாணிக்கவாசகத்தின் மார்பில் சரிந்து கதறினார்.

''என் கொழந்தை செத்துப் போயிட்டாளாமேடா... கல்யாணம் செய்து கொண்டு போய்விட்டு பத்து நாள்கூட ஆகலையேடா. அதுக்குள்ள செத்துப் போயிட்டாளாமே... சாகிறதுக்கா பாவி நான் கல்யாணம் பண்ணினேன்...? என்கிட்ட இருந்திருந்தால் ஒரு வேளை என் குழந்தை உசிரோட இருந்திருப்பாளோ...? என்னால் இதை நம்ப முடியலையே மாணிக்கம்...''

''என்னாலயும் நம்ப முடியலையடா கங்கு...ஊட்டிக்குப் போறேன்; திரும்பி வந்து லெட்டர் போடறேன்னு எழுதியிருந்தாளேடா குழந்தை... இப்போ அவ செத்துப் போயிட்டான்னு தந்தி வந்தால் எப்படியடா நம்ப முடியும்? கிளம்புடா...உடனே நாம் பெங்களூர் போய் பார்ப்போம்...''

கூடத்தில் அத்தனையும் கேட்டு தூணோடு தூணாக ஸ்தம்பித்து நின்றிருந்த மீனாட்சியும் சிவாவும் மெல்ல வாயைத் திறந்தார்கள்.

''எங்க, இதுல ஏதோ மர்மம் இருக்கிற மாதிரி தோணுதுங்க...''

''ஆமாம்பா...எழுபத்தையாயிரம் வரதட்சிணை வாங்கி கல்யாணம் செய்துகிட்டுப்போன பத்து நாளுக்குள் உங்க பொண்ணு இறந்திட்டான்னு தந்தி வந்தால் என்ன அர்த்தம்...? நம்ம தங்கச்சிக்கு சாகிற வயசாப்பா...இல்லே ஏதாவது நோவு நொடி இருந்திச்சா...? கிளியை வளர்த்துப் பூனை கையில் கொடுத்த மாதிரியில்லே ஆகிப்போச்சு. நானும்



உங்க கூட வரேம்பா... உண்மை என்னன்னு கண்டு பிடிச்சு சும்மா விடக்கூடாதப்பா.'' துக்கமும், ஆக்ரோஷமுமாகப் பொருமினான் சிவா.

''அண்ணே...தந்தியைப் பார்த்தீங்களாண்ணே...எம் பொண்ணு செத்துப் போயிட்டாளாம். பத்து நாளுக்கு முன்னால பந்தல்காலுக்கு நட்ட வாழை மரம் அப்படியே இருக்குது. மாவிலைத் தோரணம் அப்படியே இருக்குது... ஆனால் அவ போயிட்டாளாமே...இது நிஜமா இருக்குமாண்ணே...இதுக்குத்தான் ஒன்னை பெத்து கண்ணாட்டம் வளர்த்தனா அண்ணே...படிச்சிட்டிருந்த பொண்ணுக்குக் கல்யாணம் பண்ணி வச்சனா...? பாவி நானே அவளுக்கு எமனாக வந்துட்டனே அண்ணே...''

என்று கதறினவள் ஒரு விநாடி அழுவதை நிறுத்தி அவரை ஏறிட்டுக் கேட்டாள்.

''ஏண்ணே...இது நிஜமா இருக்குமா இல்லே பொய்யா ஆள் மாறி வந்திருக்குமா?

''அதான் தங்கச்சி நான், கங்கு, சிவா மூணு பேரும் இப்பவே புறப்பட்டுப் பெங்களூர் போறோம். நேர்ல எல்லா விவரங்களையும் தெரிஞ்சுக்கிட்டு வரலாம்னு கிளம்பறோம்...''

''நானும் வரண்ணே...எம் பொண்ணோட உடம்பையாவது பார்க்கறேண்ணே...'' என்று மீண்டும் அழத் தொடங்கினாள் ராஜம்பாள்.

''நீ வேணாம் தங்கச்சி. உன்னால் தாங்க முடியாது...'' என்று சொல்லிப் பார்த்தார் மாணிக்கவாசகம். கேட்கவில்லை ராஜம்பாள் 'நான் வரத்தான் வருவேன்' என்று அடம் பிடித்து அவர்களுடன் கிளம்பி விட்டாள்.

அவர்களுடன் பெங்களூரை அடைந்து ஜகன்னாதனின் வீட்டிற்குப் போனபோது ஜனனியின் உடல் கூட அங்கில்லை. அன்று காலை பத்து மணிக்கே தகனத்தை முடித்துவிட்டதாகத் தெரிவித்தனர். அதைக் கேட்டதும் மாணிக்கவாசகமும், சிவாவும், கொதித்துப் போனார்கள். கங்காதரனும், ராஜம்பாளும் மேற்கொண்டு எதையும் விசாரிக்கும் நிலையில் இல்லாததால் மாணிக்கவாசகமும் சிவாவும் ஜகன்னாதனிடமும், அவன் தாய் பத்மாவதியிடமும் கேள்வி கேட்டனர்.

''எப்படி செத்துப் போனா எங்க பொண்ணு...?''

அவர்களின் எல்லாக் கேள்விகளுக்கும் இப்போது ஜகன்னாதனே பதில் சொன்னான்.

''அதான் மாரடைப்பில் இறந்து போனாள்னு சொன்னேனே...''

''பதினாறு வயசுப் பொண்ணுக்கு மாரடைப்பு எப்படி வரும்...பத்து நாள் முன்னால கல்யாணம் முடிஞ்சு நாங்க கொண்டு விட்டபோது கூட நல்லா இருந்தாளே...எங்களுக்கு ஊட்டி போறதா லெட்டர் போட்டிருந்தாளே...''

''இங்க வந்தப்புறம் கூட நல்லாத்தான் இருந்தாள். ஊட்டியில்கூட ஒண்ணுமில்ல. திரும்பி வந்த ராத்திரிதான் மார்வலிக்குன்னா...டாக்டர்கிட்டே கூட்டிட்டுப் போனோம். வழியில் உயிர் பிரிஞ்சிடுச்சு...''

''எந்த டாக்டர்கிட்டே கூட்டிட்டுப் போனீங்க...?''

''டாக்டர் பட்... இங்கதான் டவுன் ரோடுல இருக்கார்...''

''அட்ரஸ் கொடுங்க... நாங்க போய் டாக்டரைக் கேட்கறோம்.''



''டாக்டரை எப்படி கேட்பீங்க? அதான் டாக்டர் வீட்டுக்குப் போறதுக்குள்ளாற உயிர் பிரிஞ்சுடுச்சுன்னு சொல்றேனே...''

அந்த பதிலில் அவர்களின் சந்தேகம் அதிகமாயிற்று. ஜனனிக்கு இயற்கை மரணம் நேர்ந்திருக்குமென்று தோன்றவில்லை. பணத்திற்காகக் கலியாணம் செய்துகொண்டு அவளைக் கொன்று விட்டிருக்கிறார்கள் என்று பட்டது. அதை உள்ளுக்குள் ஊர்ஜிதப்படுத்திக் கொண்டு கொதித்துப் போனார்கள். 'அடப்பாவிகளா...' என்று துடித்தார் மாணிக்கவாசகம். 'எப்படிப்பட்ட குழந்தை...' என்று மனசுக்குள் குமுறினார். தானே அவளைக் கொன்று விட்ட உணர்வு ஏற்பட்டதும் 'சும்மா விடக்கூடாது இவர்களை...!' என்கிற ஆவேசம் வந்தது.

''வா சிவா. அக்கம் பக்கத்துல விசாரிக்கலாம்...'' என்றார்.

மாடி வீட்டுக்காரர்கள், பக்கத்து வீடு, எதிர் வீடு என்று விசாரித்த போது அவர்களுக்கும் ஒன்றும் தெரிந்திருக்கவில்லை.

''எங்களுக்கு இறந்தசெய்தியே உடலை எரிக்கக் கொண்டு போனபோதுதான் தெரிந்தது...'' என்றனர். கொண்டு போன போது முழு உடலும் துணியால் மூடப்பட்டிருந்ததாம். சிதைவைத்தது ஜகன்னாதன்தானாம். அப்போது புடவை, ஜாக்கெட் எதையும் உருவாமல் அப்படியே வைத்து விட்டு வந்தானாம்...

அதற்கு மேல் ஜனனியின் சாவு பற்றின எந்த விஷயத்தையும் தெரிந்து கொள்ள முடியவில்லை. கங்காதரனையும், ராஜம்பாளையும் அழைத்துக் கொண்டு இடுகாடு வரை போய் வந்தார். அதற்கு மேல் அங்கு இருக்கப் பிடிக்காதவர்களாகப் புறப்பட்ட போது மாணிக்கவாசகம் விடாமல் கேட்டார்.

''தாங்க வர்றதுக்குள்ள நீங்க ஏன் தகனத்தை முடிச்சீங்க...? வந்து உடம்பையாவது பார்த்திருப்போமில்லையா...?''

''இந்த மாதிரி ஆன அதிர்ச்சியில் எனக்கு ஒன்னும் புரியலை. அக்கம் பக்கக் குடித்தனக்காரங்க பிணம் ராத்தங்கக் கூடாதுன்னு சொல்லிட்டாங்க...'' என்று ஏதோ பதில் சொன்னான் ஜகன்னாதன்.

''சரி...எங்க பொண்ணு உங்க வீட்டுக்கு வந்து பத்து நாள் குடித்தனம் பண்ணி சாகணும்னு விதி எழுதி இருந்திருக்கு. அவ போயிட்டா. இனிமேல் அவளோட துணி, மணி, நகை நட்டு எல்லாம் உங்களுக்கு எதுக்கு? கொடுத்துடுங்க. எடுத்திட்டுப் போறோம்...''

அதற்காக காத்திருந்த மாதிரி அந்த அம்மாள் இரண்டு டிரங்குப் பெட்டிகளை—ஜனனி ஊரிலிருந்து புறப்பட்ட போது கொண்டு வந்த அதே இரு பெட்டிகளைக் கொண்டு வைத்து விட்டுச் சொன்னாள்.

''இதுல அவளோட துணியெல்லாம் இருக்கும்...''

''வெள்ளி, எவர்சில்வர் பாத்திரம், நகைகள்...?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே... உங்க பொண்ணே தான் அதையெல்லாம் விற்று கடனடைச்சாள்...

''சரி...உங்க கடனை அடைக்கவே எங்கேயோ மாயவரம் பக்கத்து கிராமத்திலிருந்து பெங்ளூர் வரை வந்தா போளிருக்கு... ரொக்கமா எழுபத்தைந்தாயிரம் பணம்...?''

''அது கடனடைக்கன்னு சொல்லித்தானே வாங்கினது. கல்யாணத்துக்கு மறு நாளே பட்டணத்துலேயே பைசா பாக்கி இல்லாமல் கொடுத்துத் தீர்த்தாச்சு...''



''அடிப் பாவி... நல்லா இருப்பீங்களா...? உங்க கடனை அடைக்கக் கல்யாணம் பண்ணிக்கிட்டு வந்து எங்கக் குழந்தையை அநியாயமா கொன்னுட்டீங்களே...'' என்று அதற்கு மேல் தாங்க முடியாமல் மாணிக்கவாசகம் கதறின போது பாய்ந்து ஓடிவந்து கத்தினான் ஜகன்னாதன்.

''ஏன்யா... நோயாளிப் பொண்ணை தலையில் கட்டிட்டு பழியை எங்க மேலயா போடற...? இதய நோய்க்காரிக்கெல்லாம் கல்யாணம் ஒரு கேடா...? அதை மறைச்சு வச்சு கல்யாணம் செய்ததுமில்லாமல் எங்களையா கொலைகாரங்கன்னு திட்டறே...?'' என்று கூசாமல் பழியை அவர் மீது திருப்பி கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ளி கதவை அடித்து சாத்தி மூடிக் கொண்டான்.

திரும்பி ரயிலில் வந்து கொண்டிருந்த கங்காதரன்—அதுவரை ஒரு வார்த்தை பேசாதவர் இருட்டை வெறித்துக் கொண்டிருந்தவர் திரும்பி மாணிக்கவாசகத்தைப் பார்த்தார்.

''ஏன் மாணிக்கம்... எதுக்காக என் மகளுக்கு இப்படி நடக்கணும்? ஏன் நடக்கணும்...? எப்படி நடந்துச்சு...? ஒரே பொண்ணுன்னு எப்படி வளர்த்தேன். இப்போ பாழாப் போன பணத்தாசைக்குப் பலிகொடுத்துட்டேனே... எப்படிக் கொன்னாங்களோ என் மகளை? கழுத்தை நெரிச்சாங்களோ, பேப்பர்ல வர்ற மாதிரி மண்ணெண்ணெய் ஊற்றி எரிச்சாங்களோ, இல்லை விஷம் கொடுத்தாங்களோ... என்னமாத் துடிச்சதோ அந்த உசிரு... இந்த மாதிரி பாவிங்களுக்கு சட்டத்துல வழியில்லையா...? பணத்துக்காக கலயாணம் செய்துக்கிட்டு பத்தே நாள்ல அஞ்சாம கொல்றவங்களுக்கு தண்டனை ஒன்னுமே கிடைக்காதா... என் பொண்ணுக்கு நேர்ந்த கதி மற்ற எந்தப் பொண்ணுக்கும் நேராமத் தடுக்க முடியாதா...? சொல்லு மாணிக்கம்... ஏன் இப்படியெல்லாம் நடக்குது எப்படி நடக்குது...?''

அவரது கதறலைக் கேட்டு மற்ற பயணிகள் அனுதாபத்தோடு திரும்பிப் பார்க்க மாணிக்கவாசகம் பதில் சொல்லுகிற வகையற்றுப் பேசாமல் இருந்த போது—

ஓடும் ரயிலின் ஆட்டத்தினூடே ஒரு நம்பிக்கையில் டில்லியில் இருந்த சட்ட உதவிக் கமிட்டிக்குக் கடிதம் எழுதத் தொடங்கினான் சிவா...

முற்றும்

# அவளுக்கு அமுதென்று பேர்

1

"அம்மு......"

"அமுதா........."

"அம்மா அமுதா..."

அந்த மூன்றாவது குரலுக்கும் பதில் வரவில்லை. இத்தனைக்கும் வடிவாம்பாளுக்குச் சின்னக் குரலில்லை. சின்னக் குரலாக இருந்தால் அந்த வீட்டில் சமாளிக்க முடியாது. முதற் கட்டும், கீழண்டை வாயிலும், மேலண்டை வாயிலுமாக கோட்டை மாதிரி பெரிய வீடு. கிராமத்திலேயே இரண்டு தளவீடு அது ஒன்றுதான். கும்பகோணத்திலிருந்தும், பட்டணத்திலிருந்தும் ஆட்களை வரவழைத்து கிட்டத்தட்ட ஆறு மாதங்களுக்கு மேல் தங்கவைத்து, தனியாக சமையலுக்கு ஏற்பாடு செய்து பார்த்துப் பார்த்து கட்டியிருந்தார் பண்ணையார் பூவராகன். வீட்டில் குறையில்லாத மாதிரியே வந்தவர்களுக்கும குறை ஒன்றுமில்லாதமல் தாராளமாகக் கொடுத்தும் அனுப்பினார். கண்ணுக்குத் தெரியாத அளவ்ல் மச்சுக்களும் சுவரில் ஒடுங்கும் கள்ள அறைகளும் பூவராகன் ஒருவருக்குத்தான் அத்துப்படி. மனைவி வடிவாம்பாளுக்குக் கூட சில அறைகள் தெரியாது. பூமிக்கு அடியில் கூட அறை ஒன்று உண்டு என்று ஊர் ஜனங்கள் பேசிக் கொள்வார்கள்.

அப்படிப்பட்ட பெரிய வீட்டில் சமையற்கட்டிலிருந்து வடிவாம்பாள் கீழண்டை வாசலில் வந்து நிற்கிற மாட்டுக் காரனுக்குக் குரல் கொடுப்பாள். மேலண்டை வாசலின் கணக்குப்பிள்ளைக்குப் பதில் சொல்வாள். நடுக்கட்டில் நின்று மரக்காலுக்கும், படிக்கும் சப்தமிடுகிற படியாட்களை சமாளிப்பாள். ஒரே நேரத்தில் வரும் பலதரப்பட்ட ஆட் களின் தேவைகளுக்குக் குரல் சின்னதாக இருந்தால் முடியாது. சமையலறையிலிருந்து கல்யாணக் கூடத்திற்கும், வாசலுக்கும், நடுக்கட்டிற்கும், பின் கட்டிற்கும் ஓடினால் ஒரே நாளில் கால்கள் இற்றுப் போகும். இடுப்பு பிடித்துக் கொள்ளும். இறுகக் கட்டின உடம்பிற்கே அந்தக் கதி என்றால வடிவாம்பாளின் ஸ்தூல சரீரத்திற்கு நடை நிச்சயம் சாத்தியமான காரியமல்ல. அதனால் அவள் பெருங் குரல் எழுப்பித்தான் ஆக வேண்டும். எப்போதோ பண்ணை வீட்டிற்கு மருமகளாக வந்த புதிதில் அவள் குரல் மெலிதாய், இனிமையானதாக இருந்திருக்கும். இப்போது கத்திக் கத்தி குரல் அவளது உடம்பைப் போலவே பருத்துப் போயிருந்தது.

அந்தக் குரலால் மூன்று முறை கூப்பிட்டும் பதில்வராமற் போகவே தயிர் கடைவதை நிறுத்தி திரண்டிருந்த வெண் ணெயை உருட்டி பக்கத்து சின்னப் பாத்திரத்தில் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்த குள்ள முக்காலியில் கையை ஊன்றிக் கொண்டு எழுந்தாள்.

''எங்க போயிடுச்சு இது- ?'' என்று வெண்ணையைக் கொடுப்பதற்காக மகளைத் தேடிக்கொண்டு வாசற் பக்கம் வந்தாள்.

ரெவின்யு இன்ஸ்பெக்டர், பஞ்சாயத்து போர்டு தலைவர், கணக்கப் பிள்ளை, முனுசீப் என்று வாசற்கூடம் ஆண்களும் அரசாங்க அதிகாரிகளாலும் நிறைந்திருக்க ''ஆமா, பொழுது விடிஞ்சா இந்தக் கூட்டத்திற்கு ஒண்ணும் குறைச் சலில்லே...இப்படிக் கூடிக் கூடி பேசிக்கிட்டே இருக்கிறதாலே தான் அவரால குடும்ப விஷயம் எதையும் கவனிக்க



முடியாமப் போவுது...'' என்று முணுமுணுத்துக் கொண்டே உள்ளே வந்தவள் நெல் மூட்டையைப் போட்டு விட்டுத் திரும்பிக் கொண்டிருந்த படியாளை நிறுத்திக் கேட்டாள்:

''ஏண்டா ஏழுமலை, பாப்பாவைப் பார்த்தியா...?''

''எந்தப் பாப்பாம்மா...?''

''ஏண்டா நாலைஞ்சு பாப்பாவா இருக்குது...? எந்தப் பாப்பான்னு திருப்பிக் கேட்கற...? இருக்கிறதே ஒண்ணு தானேடா...''

''நம்ம பாப்பாங்களா...''

''பின்னே... வேற யாரை நான் தேடப்போறேன்...?''

உடனே பதில் சொல்லாமல் தயங்கினான் அவன். லேசாய் தலையைச் சொறிய வடிவாம்பாள் அதட்டிக் கேட்டாள்.

''என்னடா தயங்கற... என்ன விஷயம்...?''

''ஒண்ணுமிலேம்மா... பாப்பா மெத்தையில குதிருக்குப் பின்னால மூலைல ஒக்கார்ந்துட்டு அழுதுகிட்டிருந்திச்சு, எம்மா அழுவுறன்னு கேட்டதுக்கு பதில் சொல்லலே... இன்னும் அதிகமா கேவிக்கிட்டு நான் இங்கே இருக்கிற விஷயத்தை யாருக்கும் சொல்லாதே ஏழுமலைன்னிச்சு...''

''அழுது கிட்டிருக்காளா ...! '' —வடிவாம்பாள் பதறிப் போனாள். இளவயதுப் பெண்-அதிலும் அழகான பெண்- பாவாடை தாவணியில், ஊட்டி வளர்த்த உடம்பில், பதினைந்து வயதிற்குள் பதினேழு வயதுச் செழுமையில் தக தகவென்று பூஜை அறை குத்து விளக்காக இருப்பவள் தனியாக யாருக்கும் தெரியாமல் மூலையில் உட்கார்ந்து அழ வேண்டுமென்றால்...

என்ன காரணமாக இருக்கும்...?

அந்த ஒரு வினாடிக்குள் வடிவாம்பாளின் மனசு பரபரத் தது. எது எதையோ எண்ணிக் கலங்கிப் போயிற்று.

''ஏண்டா மெத்தைல எந்தப் பக்கம் பார்த்தே...?''

''தென்னண்டை பக்கம் பெரிய குதிரு இருக்குதில்ல.., அதுக்குப் பின்னால உட்கார்ந்திட்டிருக்கு பாப்பா...''

''சரி நீ போ...'' என்றவள் படியேறி மாடிக்குப் போனாள். தெற்குப் பக்கமிருந்த அந்தப் பெரிய அறையின் மூலையிலிருந்த குதிரின் பின்புறம் எட்டிப் பார்த்தபோது அமுதா சுவரோரம் சரிந்து முழங்காலைக் கட்டி அதில் முகத்தைப் புதைத்துக் கொண்டிருப்பது தெரிந்தது. உடம்பு லேசாய்க் குலுங்க விசும்பல் சத்தம் மட்டும் ஈனமாகக் கேட்டது. அந்த அறை இருட்டிலும், நாட்கணக்கில் பெருக்கப் படாமல் நெல்லும், பயிரும் கொட்டிக்கிடந்த தூசியிலும் களஞ்சியத்தின் மூலையில் ஒடுங்கி உட்கார்ந்து அழும் மகளின் தோற்றம் வடிவாம்பாளின் நெஞ்சைக் கலங்க வைத்தது. இவ்வாறு யாருக்கும் தெரியாமல் மூலையில் ஒடுங்கி உட்கார்ந்து அழும்படி என்ன நேர்ந்தது இந்தப் பெண்ணிற்கு என்ற கலவரம் ஏற்பட்டது. மெல்ல மகளின் அருகில் போய் தோளில் கைவைத்தாள். அந்த ஸ்பரிசத்தில் திடுக்கிட்டுத் தலையை உயர்த்திய அமுதா வடிவாம்பாளைக் கண்டதும் இன்னமும் அதிகம் அழத் தொடங்க அந்த அம்மாள் துடித்துப்போய் கேட்டாள்.

''எம்மா அழுவற...''

அமுதாவின் கேவல் அதிகமாயிற்றே தவிர பதில் வரவில்லை.

''அம்மாடி... எதுக்கு இப்படித் தனியா வந்து மூலைல உட்கார்ந்து அழுவறேன்னு சொல்லு? காரணம் தெரியாமல் நீ அழறதைப் பார்த்தால் நெஞ்சு நடுங்குது. எது எதையோ நினைச்சு வயிறு புரளுது...''

அதைக்கேட்ட அமுதா சட்டென்று அழுகையை நிறுத்தி தலையை உயர்த்தி அம்மாவைக் கோபத்தோடு பார்த்தாள்.



''ஆமா... இப்ப வந்து காரணம் கேளு... நேற்று சாயந்திரம் நீயும் தானே அப்பாகூட சேர்ந்து பாட்டுப் பாடின...?''

அந்த அம்மாள் ஒன்றும் புரியாமல் விழித்தாள்.

''அப்பா கூட சேர்ந்து நான் பாட்டு பாடினேனா...? இது என்னடி கூத்து... என் குரல் லட்சணத்திற்குப் பாட்டு வேற கேக்குதாக்கும்...''

அம்மாவின் அறியாமையில் அத்தனை அழுகைக்கிடையிலேயும் மகளுக்குச் சிரிப்பு வந்தது.

''ஐயோ...'' என்று லேசாகத் தலையில் அடித்துக் கொண்டாள்.

''பாட்டுன்னா நெஜப் பாட்டு இல்லேம்மா நேற்று சாயந்திரம் என்ன நடந்துச்சுன்னு யோசித்துப் பாரு புரியும்...''

''என்ன நடந்துச்சு...?''

''ஆமா... என்னையே திருப்பிக் கேளு''... என்ற அமுதா மீண்டும் சுள்ளென்று கோபப்பட்டாள்.

''தூங்கறவங்கன்னா எழுப்பலாம். தூங்கற மாதிரி நடிக்கிறவர்களை யாரு எழுப்பறது...?''

''நிஜமா மறந்து போச்சுடி...உங்கிட்ட பொய்யா சொல்லப்போறேன்...''

''நேற்று சாயந்திரம் அப்பா பண்ணையிலிருந்து திரும்பி வந்தப்புறம் நடந்த பேச்சு ஞாபகமில்லே...?''

''ஓ...அதுவா...'' என்று தனக்கேற்பட்ட விடுதலை உணர்வில் சட்டென்று சந்தோஷப் பெருமூச்சு விட்டாள் வடிவாம்பாள்.

''என்ன அவ்வளவு அலட்சியமா சொல்றேம்மா...?''

''பின்னே...அலட்சியமா சொல்லாம அகப்படைக்குள்ளே வச்சா சொல்லுவாங்க...? ஏன் அமுது நீ படிக்கணும்னு ஆசைப்பட்டே...நாங்க உன் ஆசைக்குக் குறுக்க நிக்கக் கூடாதுன்னு உடனே ஸ்கூல்ல சேர்த்தோம். இதுக்கு முன்னால் பண்ணை குடும்பத்துலேருந்து யாராச்சும் பள்ளிக் கூட வாசலை மிதிச்சிருக்காங்களான்னு கேட்டுப் பாரு. வீட்டுக்கு வாத்தியாருங்க வந்து கற்றுத் தருவாங்களே தவிர ஒரு பொம்பளைப் பிள்ளை படிதாண்டினதில்லை. ஆறு வயசுல ஒன்னைப் பள்ளிக்கூடம் அனுப்பிச்ச போதே எல்லாம் ஆச்சரியமாய் பேசினாங்க. எல்லா வாயும் உங்க அப்பாரு வாய்க்குப் பயந்து பூட்டுப் போட்டுக்கிடுச்சு. அப்புறமா நீ பெரியவளானதும் அத்தினி பேரும் உன்னைப் பள்ளிக்கூடத்தை விட்டு நிறுத்தணும்னுங்க. உங்க அத்தையும் மாமாவும் கூட நிறுத்தத்தான் சொன்னாங்க. ஆனால் நீ அழுத அழுகையைப் பார்த்து ராஜாதான் அப்பா கிட்டப் பேசி அவரை சரி பண்ணி உன்னை ஸ்கூலுக்குப் போக வச்சுது. இப்போ பத்தாவது பரீட்சை எழுதி பாஸ் பண்ணிப்பிட்டு அதுக்கு மேலேயும் படிக்கணும்னு அடம் பிடிச்சால் எப்படி...? யாரு ஒத்துப்பாங்க சொல்லு...?''

''எம்மா ஒத்துக்க மாட்டாங்க...?'' என்ற போது குரல் கரகரத்து அமுதாவின் கண்களில் குபீரென்று நீர் கட்டிக் கொண்டு நின்றது.

''எத்தினி பேரு படிக்கறாங்க...?''

''நம்ம கிராமத்திலேருந்து ஆம்பளைப் பிள்ளைங்க தான் ஊருவிட்டு ஊருபோய் படிப்பாங்க. பொம்பளைப்பிள்ளையான நீ பக்கத்து கிராமத்துக்குப் போய் படிக்கப் போறேன்னு சொன்னியானா அதுக்கு யாரு சம்மதிப்பாங்க...?''

''யாரு சம்மதிக்கணும்...? நீயும், அப்பாவும் சம்மதிச்சா போறாதா...?''

''அது எப்படி போறும்? ஏண்டி முதல்ல அப்பா சம்மதிக்க மாட்டாரு. உங்கப்பா சம்மதிச்சாகூட அத்தையும் மாமாவும் சம்மதிக்கவே மாட்டாங்க. எல்லாத்துக்கும் மேல ராஜா என்ன சொல்லுவானோ...?''



''எம்மா...ராஜா மட்டும் நிதம் ரெயில்ல போய் மாயவரம் காலேஜ்ல படிக்கலே...?''

''அது ஆம்பிளை, படிக்குது. அதுங்கூடப் போட்டி போட முடியுமா...?''

''போட்டியில்லேம்மா. படிக்கணும்னு எனக்கு ஆசையா இருக்குது...''

''அதான் பத்தாவது பாஸ் பண்ணி இருக்கியே... போதாது...''

''ம்ஹூம்...பிளஸ்-2 படிக்கணும்...''

''அது என்ன டுவோ... எதுவானாலும் உங்கப்பாவும், அத்தை மாமா, ராஜாவும் சம்மதிச்சாத்தான் முடியும்...''

''அப்பா சம்மதிக்கணும் சரி. அத்தை, மாமா, ராஜாவையெல்லாம் எம்மா இழுக்கறே...? இப்போ நான் ராஜாவைக் கல்யாணமே செய்துக் கிட்டிருக்கேனா என்ன...?''

''நல்லா இருக்கு உன் பேச்சு...'' என்று சீறினாள் வடிவாம்பாள்.

''கல்யாணம்னு நடந்தால்தானா...அதுவும் ராஜா படிப்பை முடிச்சுடுச்சுனா உடனே நடந்துடும். நீ பொறக்கறதுக்கு முன்னாலேயே நிச்சயமான கல்யாணம் இது. பொண்ணு பொறந்தால் ராஜாவுக்குன்னு தீர்மானிச்ச விஷயம். இப்ப வந்து கல்யாணமா நடந்துடுச்சுன்னு கேட்கறே... இதப்பாரு. இந்த மாதிரியெல்லாம் பேசினால் எனக்கு மட்டுமில்லே. உங்கப்பாவுக்கும் கெட்ட கோபம் வரும்...''

அம்மாவின் அந்தக் கோபத்தை எதிர்பார்க்காத அமுதா சட்டென்று அடங்கிப் போனாள். அந்த வழியில் பேச்சைக்

கொண்டு போனால் நிச்சயம் தன் ஆசைக்கு முற்றுப் புள்ளி தான் விழும் என்பதைப் புரிந்து கொண்டு நிதானமாக ஆரம்பித்தாள்.

''இல்லேம்மா... அப்படி நான் கேட்கலே. நீ தப்பாப் புரிஞ்சுக்கிட்டு கோபப்படறே...எப்படியும் அத்தான் படிப்பை முடிக்க ரெண்டு வருஷம் இருக்கே அதுக்குள்ளே நானும் ப்ளஸ் 2 மட்டும் படிச்சு முடிச்சுடறேன்னுதான் கேட்டேன்...''

''அது சரிடி...'' என்று சமாதானப்பட்ட வடிவாம்பாள் தொடர்ந்தாள்.

''இது ஏதோ பெரிய படிப்புன்னு சொல்றே...ராஜாவை விட பெரிய படிப்புன்னால் எப்படி—''

''ஐயோ... இது ஒண்ணும் பெரிய படிப்பில்லேம்மா. ராஜா காலேஜ்ல படிக்கறாரு... இது ஸ்கூல் படிப்பும்மா. இதை முடிச்சால் தான் காலேஜிலேயே சேரமுடியும்...''

''சரி... ஆனால் இந்தப் படிப்பு நம்ம ஊர்ல இல்லேன்னு சொல்றியே... பக்கத்து கிராமத்துக்கு போகணும்னியே...ஊர் விட்டு ஊர் யாரால தினமும் போகமுடியும்...?''

''ஏம்மா... ஊர் விட்டு ஊருன்னு சொன்னால் எங்கோ ஐம்பது மைல், நூறு மைல் தள்ளியா போகணும், இதோ அஞ்சாவது மைலில் அடுத்த கிராமம். 'அங்க பள்ளிக்கூடம். தினமும் அப்பா கார்ல போற போது கொண்டுபோய் விட்டாலும் சரி, இல்லைன்னால் இருக்கவே இருக்குது வில் வண்டி, முனுசாமியைக் காலைல கொண்டுபோய் விட்டு சாயந்திரம் அழைச்சிட்டு வரச் சொல்றது...''

அதைக் கேட்டு சிறிது யோசித்தாள் வடிவாம்பாள். மகளின் பேச்சில் ஓரளவு நியாயம் இருப்பது புலப்பட்டது. ராஜா என்னவோ படிப்பை முடித்த பின்னர்தான் கல்யாணம் என்பதைத் தீர்மானமாகச் சொல்லி விட்டான். அவனது படிப்பு முடிய இன்னும் இரண்டு வருடங்கள் இருப்பதாக அமுதா



சொல்கிறாள். அந்த இரண்டு வருடங்களும் வீட்டில் உட்கார்ந்திருப்பது என்பது அமுதாவைப் போன்ற துறுதுறுவென்ற புத்திசாலித்தனமான பெண்ணிற்கும் கஷ்டமான காரியம் தான், அதிலும் அது எந்த பொழுதுபோக்கு வசதிகளுமற்ற மிகச் சாதாரணமான குக்கிராமம். நான்கு பெட்டிக்கடைகளைத் தவிர வேறு எதுவும் கிடையாது. ஒரு சினிமா கொட்டகை கூட இல்லை. அந்த மாதிரி இடத்தில், ஒரு வேலையுமில்லாமல் அவ்வளவு பெரிய வீட்டில், பேச்சுத் துணைக்குக் கூடப்பிறந்தவர்களோ, சினேகிதிகளோ அற்று ஒரு இளம் பெண்ணை வீட்டிலேயே வைத்திருப்பது அப்பெண்ணிற்கு இன்னமும் சிரமமான விஷயம்.

கிராமத்தில் இவளோடு பழகவும், சரி சமமாகப் பேசவும் யாரும் முன்வரமாட்டார்கள். பண்ணை வீட்டுப் பெண் என்கிற அதஸ்து வித்தியாசம் தடுத்து நிறுத்திவிடும். இவள் பழக நினைத்து நெருங்கினால் கூட அவர்கள் தூரத்தள்ளி நிறுத்தி விடுவார்கள். வீட்டிலேயே அடைந்து கிடப்பது அமுதாவின் சுபாவத்திற்கு ஒத்து வராத விஷயம்.

ஆனால் அதற்காக ஐந்து மைல் தள்ளியிருக்கிற கிராமத்துப் பள்ளிக் கூடத்திற்கு, ஆணோடு பெண் சேர்ந்து படிக்கிற இடத்திற்கு அனுப்ப நிச்சயம் மனம் இடம் கொடுக்கவில்லை. தன் பெண்ணைப் பற்றின திடமான நம்பிக்கை இருந்தாலும் அது தேவையற்றதாகப்பட்டது. சங்கடங்களை வலுவில் வரவழைத்துக் கொள்கிற விஷயமாகத் தோன்றியது. அதிலும் அமுதாவின் அதீத அழகு இன்னமும் பயத்தைத் தோற்றுவிக்க இது விஷயமாகத் தன் கணவரே முடிவெடுக்கட்டும் என்ற தீர்மானத்தில் அழுத்தமான குரலில் சொன்னாள்.

''இதப்பாரு அம்மு... உம்பாடு, உங்க அப்பா பாடு. அதுக்கு மேல ராஜா பாடு? அவங்க ஒப்புக்கிட்டு உன்னை அனுப்பினாங்கன்னால் தடுக்கிறதுக்கு நான் யாரு? அதனால இதை நீ உங்க அப்பாகிட்டப் பேசி முடிவு பண்ணிக்க. இப்போ கீழ தாசில்தாரும், மணியக்காரரும், ரெவின்யு

இன்ஸ்பெக்டருமா ஒரே கூட்டமா இருக்குது. சாயந்திரம் கூட்டம் அடங்கி அப்பா தனியா இருக்கிறப்போ திரும்பக் கேட்டுப் பாரு... என்ன...? அதை விட்டுட்டு இப்படி மூலைல உட்கார்ந்து அழுவறது நல்லா இல்லே... ஆள்காரங்க பார்த்தா என்ன நினைப்பாங்க. நெல் கொட்ட வர்ற படியாளுங்க என்ன நினைப்பாங்க...? நீ படிப்புக்காகத் தான் இப்படி குலுங்கி குலுங்கி அழறேன்னால் நம்புவாங்களா? எழுந்திருச்சு கீழே இறங்கி வந்து முகம் கழுவி பவிச்சுனு பொட்டு வச்சுகிட்டு எதையாவது படி, சாயந்திரமா அப்பாகிட்ட பேசிக்கலாம்...''

அந்த பதிலுக்குப் பின்னர் அமுதாவின் முகம் சற்று பளிச்சிட்டது. அழுகை நின்று போயிற்று. ஒரு நம்பிக்கை ஏற்பட அம்மாவின் கையைப்பற்றி எழுந்து கொண்டாள். தாவணித் தலைப்பால் முகத்தைத் துடைத்துவிட்டுக் கொண்டு சொன்னாள்.

''சாயந்திரம் அப்பாகிட்டே பேசறபோது நீயும்கூட இருக்கணும், என் பக்கம் பரிஞ்சு பேசணும்...''

''நான் வேணுமின்னா கூட வந்து நிக்கறேன். ஆனால் பேசமாட்டேன். அவரு சொல்றதை மீறி ஒரு வார்த்தை பேசி நீ பார்த்திருக்கியா...? அப்பா பாடு மக பாடு. அந்த வம்பு எனக்கு வேணாம். அந்த தைரியமெல்லாம் எங்கப்பா எனக்குக் கற்றுத் தரலை...''

''ஏம்மா...குழந்தை ஆசைப்படறா படிக்கட்டுமேன்னு ஒரு வார்த்தை சொல்லமாட்டியா...?

''வாணாண்டியம்மா... 'அது எனக்குத் தெரியும். நீ உள்ளப்போ'ன்னு உங்கப்பா ஒரு முறை முறைச்சார்னால் எனக்கு நாடி ஒடுங்கிப் போயிடும். வேணுமுன்னா தூணோடு தூணா நான் ஒரு ஓரமா நிக்கறேன்...''

அதற்கு ஒப்புக் கொண்ட மகள் ''சரி. அப்பாவே உன் கிட்ட நீ என்ன நினைக்கறே வடிவுன்னு அபிப்பிராயம் கேட்டார்னால்...?''



''ஆமா...என் அபிப்பிராயம் கேட்டுத் தான் இந்த வீட்டுல எல்லாம் நடக்குது பாரு...''

''ஒரு வேளை இந்த விஷயத்துல உன்னைக் கேட்டாரானால் நீ என் பக்கம் பேசணும், என்ன...?''

''உங்கப்பா கேட்கமாட்டாரு. அதனால என் பேச்சு ஒரு பொருட்டா... சரி வா, கீழ போவோம். இத்தினி நேரம் என்னைக் காணலியேன்னு ரகளை பட்டுப் போயிருக்கும். இந்தா வெண்ணை உருட்டிக் கொண்டாந்தேன் தின்னு...''

வெண்ணெய்க் கிண்ணத்தை மகளிடம் கொடுத்துவிட்டு முன்னால் படியிறங்கும் மகளின் அழகைப் பின்னாலிருந்து இரகசியமாக ரசித்தவாறு மெல்லத் தானும் உடன் வந்தாள் வடிவாம்பாள்.

## 2

**கூ**ட்டம் கூட்டமாய் நாரைகள் நீலப் பின்னணியை வெள்ளையாய் கிழித்துக் கொண்டு வீடு திரும்பத் தொடங்கின. வீச் வீச்சென்று பறவைகளின் சத்தம். மேயப் போன மாடுகள் திரும்பி வந்து கொண்டிருந்தன. குளத்திலிருந்து நீர்மொண்டு தலேயில் ஒன்றும், இடுப்பில் ஒன்றுமாகக் குடங்களுடன் குடியானப் பெண்கள் ஒற்றையடிப் பாதை வழியாக அவசர நடையில் குடிசைக்குப் போய்க்கொண்டிருந்தனர். அவர்களில் சிலர் பிள்ளையார் கோவில் வாசலில் கற்பூரம் ஏற்றி வேண்டிக் கொண்டிருந்த அமுதாவைப் பார்த்து நடையை நிறுத்திக் கேட்டனர்.

''ஏன் சின்னம்மா...பிள்ளையாருகிட்ட என்ன வேண்டிக் கிட்டிருக்கீங்க...? அத்தானுக்கும் எனக்கும் சீக்கிரம் கல்யாணம் பண்ணிவையின்னா...?''

''சீ...போங்க...!'' என்று திரும்பிய அமுதாவின் முகம் சிவந்தது. கன்னங்கள் மாலைச் சூரியனின் இதமான வெளிச்

சம் பட்டு மின்னின. பளபளவென்று மெருகேறிய முகத்திற்கு
கருகரு வென்று அலையோடிய கூந்தல் அழகாய் வரம்பிட்டி
ருந்தது. துறுதுறு வென்ற பார்வை, நீளமும், அகலமுமாய்
நல்ல கண்கள். செதுக்கினாற் போன்ற மூக்கு, மெலிதாய்
இயற்கையான சிவப்பில் உதடுகள். குமிழிட்ட முகவாய்.
திட்டமான உயரம். மழுமழுவென்று தொட்டால் கன்னிப்
போகுமோ என்ற பயத்தை ஏற்படுத்தும் கைகளும், பாதங்க
ளுமாக மிகமிக அழகாய் தன் நிறத்திற்குப் பொருந்துகிற
மாதிரி சந்தன நிறப் பட்டுப்பாவாடையும், கையோரத்தில்
சரிகைக் கரையிட்டதால் மட்டுமே அவள் ஜாக்கெட் அணிந்
திருப்பதையுப் பிரித்துக் காட்டும் அதே சந்தன வண்ண
ரவிக்கையும், கறுப்பு ஜார்ஜெட் தாவணியுமாக நின்றிருந்த
வள் சடாரென்று திரும்பினாள். அந்தக் குடியானவப் பெண்
கள் மீது சுள்ளென்று கோபம் ஏற்படக் கேட்டாள்.

''கல்யாணத்திற்குத் தான் சாமிகிட்டே வேண்டிப்பாங்
களா...? வேற எதுக்கும் வேண்டிக்க மாட்டாங்களா...?''

வந்தவளில் சற்று வயதானவள் தைரியமாகப் பேசத்
தொடங்கினாள்.

''உன் வயசுல வேற எதுக்கு வேண்டிக்கப் போறாங்க
குழந்தே, நானும் சின்னவளா இருந்து பெரியவளானவ
தானே...?''

''ஆனால் என் வயசுல - நீ படிக்கலையே பாட்டி. நான்
படிப்புக்காகத் தான் வேண்டிக்கிட்டேன். மேலே படிக்க வை
புள்ளையாரப்பா. அப்பா மனசு மாறி என்னை ஸ்கூல்ல
சேர்க்கணுமேன்னு வேண்டிக்கிட்டு நின்னப்போ நீங்க
வந்தீங்க...''

''மேலே படிக்கப் போறியா...?'' என்று கண்ணகலப்
பார்த்தாள் அந்தக் கிழவி.

''இதுக்கு மேல எதுக்கு கண்ணு படிப்பு...? உங்கத்
தான் காத்துக்கிட்டிருகில்லே...?''



''அவரா ஒண்ணும் எனக்காகக் காத்துகிட்டு இல்லே,
படிச்சுக்கிட்டுத்தானே இருக்காரு...அவரு படிப்பு முடியற
வரை நானும் படிக்கறேன்னுதான் சொல்றேன்...''

''அதுக்கு பண்ணையாரு ஒப்புக்குவாரா குழந்தை...?''

''அதுக்குத்தான் ஆயா பிள்ளையாரை வேண்டிக்கறேன்.
108 தேங்காய் உடைச்சு கொழக்கட்டைப் போடறேன். 108
தோப்புக்கரணம் போடறேன். அப்பா சரி சொல்லணும்னு
வேண்டிக்கிட்டிருக்கேன். நீயும் வேண்டிக்கோ ஆயா......
இப்போ நேரா வீட்டுக்குப் போய் அப்பா கிட்டே பேசப்
போறேன். அப்பா படிக்க வைக்க சம்மதிக்கணும் ஆயா...''

வயதான அந்தக் கிழவி அனுபவத்தின் காரணமாகத்
தன் வெற்றிலைக் காவி படிந்த பற்களைக் காட்டிச் சிரித்தாள்.

''ஆமாம் குழந்தே...மேலே படிக்க இப்படி ஆசைப்
படறியே...படிச்சு என்ன செய்யப்போறே...?''

அந்தக் கேள்விக்கு பதில் சொல்லத் தெரியாமல் அமுதா
மௌனித்திருக்க கிழவி மௌனமாய் புன்னகைத்து.

''இன்னும் ரெண்டு வருஷப் படிப்புன்னு சொல்றே...
ரெண்டு வருஷத்துக்கு அப்புறம் இதே கல்யாணம்தான்.
அதுவும் இந்த அத்தானைத்தான் கட்டிக்கப் போறே...
எங்களை மாதிரி பிள்ளை பெறப்போறே...குடும்பம் நடத்தப்
போறே...நாங்கள்ளாம் அடுப்படியில சமைச்சா, நீ சமையற்
காரர் சமைக்கிறதை மேற்பார்வை பார்க்கப் போறே...
அவ்வளவு தானே கொழந்தே...''

''இருந்தாலும் படிக்கணும் ஆயா...ப்ளஸ்-2 மட்டு
மாவது படிக்கணும்...என் குழந்தைகளுக்குப் படிப்பு சொல்லித்
தர என் படிப்பு உதவுமில்லே...''

''சரி கொழந்தே...பண்ணையாரு கண்டிப்பானவரு...
ஒரு பேச்சு பேசினாலும் சரியா பேசுவாரு...கறாரா இருக்கும்.
அவரு உன்னை இந்த அளவுக்குப் படிக்க அனுப்பனதே

எங்களுக்கெல்லாம் ஆச்சரியமான விஷயம்தான். இவ்வளவு படிக்க வச்சமே இன்னும் இரண்டு வருஷந்தானேன்னு மனசு இறங்கி அனுப்பினாலும் அனுப்பலாம். நாங்க அத்தினி பேரும் சாமிகிட்டே வேண்டிக்கறோம். நீ போ குழந்தை... போய் அப்பாரு கிட்டே பேசு...விளக்கு வைக்கிற நேர மாச்சு...இனி இங்க இருக்காதே...''

''சரி ஆயா...நல்லா வேண்டிக்க ஆயா...'' என்று கேட்டுக்கொண்ட அமுதா மீண்டும் ஒரு முறை பிள்ளை யாரைப் பார்த்து தன் கோரிக்கையை முறையிட்டு விட்டு கன்னத்தில் போட்டுக்கொண்டு ''வரேன் ஆயா...'' என்று ஓட்டமாக நடக்க அந்த கிழவி தன் கூட வந்தவர்களைப் பார்த்து முணுமுணுப்பாகச் சொன்னாள்.

''அய்யமாரு வூட்டுப் பொண்ணுங்களை மாதிரி செக்கச்செவேல்னு இது எத்தினி அழகா இருக்குது... இன்னிக்கெல்லாம் பார்த்துக்கிட்டே நிக்கலாம் போல... ஆனா அந்த ராஜாத்தம்பி அட்டைக்கரி...கருப்பானாலும் களையா இருக்கும். அதனாலதான் பண்ணையாரு கருப்பை லட்சியம் பண்ணாமல் முடிச்சுப் போட்டிருக்காரு. ஆனா லும் பக்கத்துல நின்னா எள்ளும் பச்சரிசியும்தான், இந்தப் பொண்ணு அழகுக்கு அத்தினிதோது இல்லே அந்தப்பையன். ஆனாலும் பணம் பணத்தோடத்தானே சேரும். அதுலயும் அத்தைப் புள்ளை, முறைப் பையன், விட்டுருவாங்களா... ஆண்டவன் எப்படியெல்லாம் முடிச்சு போடறான்பாரு'' என்றவாறு கிழவி முன்னால் நடக்க, மற்றவர்கள் பின் தொடர இருட்டு வலுவான திரையாக இறங்கிக் கொண்டி ருந்தது.

இரவு சாப்பாட்டிற்குப் பின் சாவதானமாகப் பூவராகன் வாசல் கூடத்தின் திண்டில் சரிந்திருக்க வடிவாம்பாள் எதிரில் அவரது காலடியில் உட்கார்ந்து வெற்றிலை மடித்துக் கொடுத்துக் கொண்டிருந்த போது தயங்கித் தயங்கி வந்து



நின்றாள், அமுதா. அவள் சற்றுத் தள்ளி நிற்பதைக் கவனித்த பூவராகன் உற்சாகமான குரலில் மனைவியிடம் கேட்டார்.

''என்ன நம்ம அமுது சத்தம் போடாம பூனை மாதிரி வந்து ஒடுங்கி நிற்குது...என்ன விஷயம் வடிவு—?''

அந்த அம்மாள் திரும்பி மகளைப் பார்க்க, மகள் 'நீ ஆரம்பி அம்மா' என்று செய்கையால் கெஞ்ச பூவராகனே மீண்டும் பேசினார்.

''என்ன மக என்னவோ கண் ஜாடை காட்டுது...நீ தலையாட்டறே...என்ன விஷயம்...?''

வடிவாம்பாளுக்கு விஷயத்தைச் சொல்ல பயமாக இருக்கவே...

''அதான் அவளே வந்து நிக்கறாளே... நீங்களே கேளுங்க'' என்று மெல்லப் பேச்சிலிருந்து நழுவிக் கொள்ள அவர் நேராக மகளைப் பார்த்தார்.

''என்ன அமுது... உங்கம்மா ரொம்ப பிகு பண்ணிக்குது. அதனால நீயே விஷயத்தைச் சொல்லு...'' என்றார் தன் உருவத்திற்குக் கொஞ்சமும் பொருத்தமில்லாத மென்மையான குரலில். மகளின் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் உள்ளுக்குள் உருகிப் போவார் அவர். எத்தனை கண்டிப்பானவரோ, கோபக்காரரோ, முரடர் என்று பெயர் எடுத்திருந்தாரோ அத்தனையும் மகளின் தோற்றத்திற்கு முன்னால தோற்றுப் போய் வெறும் அன்பும், பாசமும, அதனால் ஏற்படும் நெகிழ்வு மாக நிற்கிற நிஜம் அவர் ஒருவருக்கு மட்டுமே தெரியும்.

மகளிடம் தனக்குள்ள இந்த பலவீனம் வேறு யாருக்கும் தெரிந்துவிடக்கூடாது என்பதில் அதிகக் கவனமாக இருந்த தன் காரணமாக நெகிழும் மனதை இறுகக் கட்டிப் போட்டு அதே கண்டிப்பான வார்த்தைகளால் தான் பேசுவார். குரல் மென்மையாக மாறினாலும் வார்த்தைகள் சரிக் கட்டிவிடும். அப்போதும் சந்தனத்தை அரைத்துக் குழைத்துச் செய்த

விக்கிரகமாக வந்து நின்ற மகளின் தோற்றம் சந்தோஷத்தையும், அலாதிப் பெருமையையும் ஏற்படுத்தினாலும் அவர் பேச்சில் எதையும் வெளிப்படுத்தாமல் இறுக்கமாகவே இருந்தார்.

''ம்... வந்து... வந்துப்பா...'' என்று குரல் எழும்பாமல் மகள் தயங்குவது சங்கடத்தை ஏற்படுத்த,

''வா... இப்படி வந்து பக்கத்துல உட்கார்ந்து பயப்படாமல் நிதானமா சொல்லு...'' என்று நகர்ந்து அருகில் இடம் ஒதுக்கி அவளை உட்காரச் செய்து ''இப்போ சொல்லு...'' என்றார்.

''வந்து...ஒண்ணுமில்லேப்பா...''

''நான் ப்ளஸ் 2 மட்டும் படிச்சுடறேம்பா...''

''அவ்வளவு தானா விஷயம்'' என்று சலிப்புற்ற பூவராகன்.

''ஏம்மா, நேற்றிக்குத்தான் இதைப் பற்றிப் பேசினோமே, நான் தான் வேணாம்னு சொல்லிட்டேனே...'' என்று மகளின் முகத்தை ஏறிட சக்தியற்று தரையைப் பார்த்தார்.

மீண்டும் அதே பதிலைக் கேட்க அவளுக்குக் குபீரென்று அழுகை வந்தது.

''அதான் திருப்பிக்கேட்கலாம்னு வந்தேன். படிக்கணும்னு ரொம்ப ஆசையா இருக்கு. ரெண்டே வருஷ படிப்பு தான். இதை முடிச்சிட்டால் அதுக்கு மேல நான் போஸ்ட்டல்லே பி. ஏ. எழுதிக்குவேன். பத்தாவதோட நின்னால் அந்த வசதி இல்லே... அதனாலதாம்ப்பா கேட்கறேன். ரெண்டே வருஷம் படிச்சுடறேம்பா...

''ஏம்மா... ரெண்டு வருஷம் என்ன உனக்கு விளையாட்டா இருக்குதா... கல்யாணம் செய்யணும்னு நாங்க நினைக்கிறோம்; நீ என்னடான்னால் மேலே படிக்கறேன்ற...?''



''கல்யாணம் செய்துக்கறேம்ப்பா... எப்படியும் அத்தான் படிப்பு முடியறதுக்கும் ரெண்டு வருஷம் ஆகுமில்ல. அதுவரை வீட்டுல நான் சும்மாத்தானே இருக்கணும். அதுக்குப் பதிலா ஸ்கூலுக்குப் போயிட்டு வரனேப்பா...''

''அப்படித்தான் முந்தியும் கேட்டே... அப்பா ஸ்கூல் இங்கேயே இருந்திச்சு. உங்க மாமாவெல்லாம் வேணாம்னு சொன்னப்போகூட நானாக உன் ஆசையைக் கெடுக்கக்கூடாதுன்னு அனுப்பினேன். இப்போ பக்கத்து கிராமம் வரை போய்ப் படிக்கணும்னு சொல்றியே... அதான் சங்கடமா இருக்குது. வேணாம்னு சொல்றேன்...''

''பக்கத்து கிராமம் என்ன நூறு மைலா இருக்குது. இதோ அஞ்சே மைல் தானேப்பா. நீங்களேகூட உங்கக் கார்ல கொண்டுபோய் விட்டுடலாம். இல்லாட்டி போனா முனுசாமி வண்டி கட்டினால் அரைமணி நேரத்துல ஸ்கூல் வாசல்... நான் படிக்கறேம்ப்பா...''

கண்களை அடிக்கடி துடைத்து விட்டுக் கொண்டு அவள் கெஞ்சக் கெஞ்ச அவர் பிடிவாதமும் தளர்ந்து கொண்டே வந்தது.

அதை வெளிப்படுத்தாமல் குரலையும் இறுக விடாமல் நிதானமாகவே கேட்டார்.

''ஏம்மா அந்தப் பள்ளிக்கூடம் ஆம்பிள்ளைகளும் சேர்ந்து படிக்கிறதுன்னு சொல்லலே...?''

''அதனால என்னப்பா...? என் மேல உங்களுக்கு நம்பிக்கை இருக்குதில்லே...?''

''என்னம்மா நீ...?'' என்று சலித்துக் கொண்டார் அவர் ''உன் மேல நம்பிக்கை இல்லாமலா இந்தக் கேள்வியைக் கேட்டேன்னு நினைச்சே... நம்பிக்கை மற்ற பசங்ககிட்டே இல்லாமதான் கேட்டேன்...''

''ஏம்ப்பா... உங்க பொண்ணுன்னு தெரிஞ்சதும் யாரும் கிட்ட வந்து பேசக் கூட பயப்படமாட்டாங்களா...''

''அது சரி...'' என்ற அவர் சிறிது நேரம் தீவிர யோசனையில் ஆழ்ந்தார். பின்னர் மனைவியைப் பார்த்து ''நீ என்ன சொல்ற வடிவு...?'' என்றார்.

''நான் சொல்ல என்ன இருக்குது? அப்பாவும் மகளும் பேசி மட்டும் முடிவு செய்து விட முடியுமா என்ன...? இதுக்கு ராஜா ஒப்புதல் தரணுமில்ல...? கட்டிக்கப் போறவனைக் கேட்கணுமில்ல? ஆம்பிளைகளோட ஒண்ணாச் சேர்ந்து படிக்கணுமின்னா அது என்ன சொல்லுமோ அதுக்கு மனசு ஒப்புமோ ஒப்பாதோ...?''

வடிவாம்பாள் சொல்லி முடிப்பதற்குள் அமுதா அவசரமும் படபடப்புமாகக் குறுக்கிட்டாள்.

''ஏம்மா அவரு காலேஜிலே கூடத்தான் பொம்பளைங்க சேர்ந்து படிக்கறாங்க. இவரோட கிளாஸ்லயே எட்டுப் பொம்பளைங்களாம்...?''

''அது சரிடி... ஆம்பிளைங்களுக்குத்தான் தனி நியாயமாச்சே... அவங்க படிச்சா ஒத்துக்குவாங்க, பொம்பளை படிச்சா தப்பு சொல்லுவாங்க...''

''ஐயோ அம்மா... அந்த எட்டுப் பேரும் பொம்பளைங்க தானே... ஆம்பிளைங்க கூட படிக்கலியா...?''

சட்டென்று அந்த உண்மை பிடிபட்டாலும் வடிவாம்பாள் ஒப்புக்கொள்ள மறுத்தாள்.

''அவங்க எப்படிப் போனால் நமக்கென்ன...? ராஜாவைக் கேட்கணும். அவன் சம்மதிச்சு உங்கப்பாவும் சரி சொன்னாருன்னால் நீ படி. நான் வேணாம்னு சொல்லலை.''

''அது தான் சரிம்மா. இந்த சனி ஞாயிறு லீவுக்கு ராஜா வருவானில்ல...அவனையும் கேட்கலாம். அவன் அபிப்பிராயப் படி செய்யலாம். அது தான் உனக்கு, எனக்கு, எல்லோருக்குமே நல்லது...'' என்று அந்தப் பேச்சைக் கத்தரித்த பூவராகன்,



''அம்மாவும் பொண்ணும் போய் சாப்பிடுங்க. இப்போ மணியக்காரரு வருவாரு. அவருகிட்டே பேசி அனுப்பிவிட்டு நானும் படுக்கறேன்...'' என்றார்.

உள்ளே வந்த அமுதா அம்மாவிடம் பேசவில்லை. தன் பக்கம் சார்ந்து நிற்பதாகச் சொன்ன அம்மா சட்டென்று ராஜாவைக் கேட்க வேண்டுமென்று முட்டுக்கட்டை போட்ட கோபத்தில் முகத்தை 'உம்'மென்று வைத்துக்கொண்டு சாப்பிடுவதாகப் பெயர் பண்ண-அவளது கோபத்தைப் புரிந்து கொண்ட வடிவாம்பாள் நிதானமாகச் சொன்னாள்.

''இதப் பாரு அமுது... படிப்புத் தான் உனக்குப் பெரிய விஷயமாய்ப் படுது. ஆனால் எனக்கு உன் வாழ்க்கை தான் பெரிய விஷயம். படிப்பு இல்லாட்டி போனால்கூட வாழலாம், ஆனால் வாழ்க்கை சிக்கல் பட்டுச்சுன்னால் நரகம் தான். அதுவும் பொம்பளை ஜென்மம் எடுத்துட்டால் ஒவ்வொரு அடியையும் ஜாக்கிரதையா எடுத்து வைக்கணும். அழகான பொண்ணுன்னால் ஜாக்கிரதையாக இருக்கணும்.

''எந்த காரணம் கொண்டும் ராஜாவோட மனசுகோணக் கூடாது. ஏற்கனவே அவனுக்குள்ளதான் ரொம்ப கருப்புன்னு ஒரு தாழ்வு மனப்பான்மை இருக்குது. என் மாமி அமுதாவோட நிறத்துக்கும் அழகுக்கும் என்னை எப்படி தேர்ந்தெடுத்தீங்கன்னு...? என் கிட்ட நேரிடையாகவே கேட்டிருக்கான். கல்யாணத்தன்னிக்குப் பந்தல்ல நானும் அவளும் பக்கத்துல நின்னால் வெங்கலச் சிலையையும், கருங்கல் சிலையையும், ஒண்ணா நிற்க வச்ச மாதிரி இருக்கும்னு சொல்லியிருக்கான்.

''இதையெல்லாம் சிரிச்சுக்கிட்டே சொன்னால் கூட அடி மனசுக்குள்ள ஒரு வருத்தம் ஓடறதைப் புரிஞ்சுக்க முடியுது. அப்படி இருக்கிறப்போ அவனைக் கேட்காம இந்தக் காரியத்துல இறங்கக் கூடாது.

''கல்யாணம்கிறது என்னன்னு நினைக்கறே...? வெறும் புருஷன் பொண்டாட்டி உறவு மட்டுமில்லே, அழகான ரசம் பூசின கண்ணாடி ஒரு சின்னக் கீறல் விழுந்தால்கூட போறும்.

அழகே கெட்டுடும். உன்னோட வாழ்க்கையில் கீறல் மட்டுமில்ல, வெறும் தூசிகூடப் படியக்கூடாதுன்னுதான் நான் போர்த்திப் போர்த்திக் காபந்து பண்ணிக் காப்பாத்தறேன்.

''அதனால நீ கோவிச்சுக்கிட்டாலும் சரின்னுதான் ராஜாவை கேட்கணும்னு சொல்லிட்டேன். அவனுக்குத்தான் நீன்னு முடிச்சு போட்டு வச்சாச்சு. அப்படி ஒரு முடிச்சு போடாட்டி போனாலும் அப்பா எம்பொண்ணு படிக்க ஆசைப்பட்டுது நாங்களும் படிக்க வச்சோம். ஆம்பிளைங்க ஸ்கூல்ல தான் படிச்சது; ஆனால் இதை நெருப்பா வளந்திருக்கோம்னு சொல்லி சம்பந்தம் பேசலாம். அது சுலபம். ஆனால் இது தொட்டில்ல பேசி முடிச்சுட்ட சம்பந்தம்...அவனுக்குத்தான் நீ-உனக்குத்தான் அவன்றது எப்பவோ முடிவாகிப்போன விஷயம். அதனுல் இன்னும் ஜாக்கிரதையா இருக்க வேண்டியதிருக்கு...

''அவனோட மனசு கோணக்கூடாதுன்னு பார்க்க வேண்டி இருக்கு...

''இப்போ உனக்கு நான் சொல்றது பிடிக்காட்டிபோனால் கூட பின்னால புரிஞ்சுக்குவ...நம்ம அம்மா நமக்கு எத்தினி நல்லது செய்தான்னு சந்தோஷப்பட்டுக்குவ...'' அப்படியே நீ புரிஞ்சுக்காட்டி போனாலும் பரவாயில்லே. என் கடமையை விட பாசம் என்னே செய்யத் தூண்டிச்சு. செய்திட்டேன். இன்னிக்கு வியாழக்கிழமைதானே...?

''இன்னும் ஒரே நாள் பொறுத்துக்க. நாளை ராத்திரி இந்நேரத்துக்கு ராஜா இங்கே இருப்பான். அவன் கிட்டேயும் கலந்து பேசிடலாம். அதுவரை காலை மாதிரி குதிருக்குப் பின்னுல உட்கார்ந்துக்கிட்டு அழுதுக்கிட்டு கிடக்காமல் நல்லா சிரிச்சு சந்தோஷமா வளைய வா. சாப்பிட்டு நிம்மதியா படுத்துத்தூங்கு... நல்லதே நடக்கும்னு நினைச்சுக்க...

''இல்லைன்னால் நடக்கிறதே நல்லதுன்னு எடுத்துக்க... நாங்க எல்லாம் அப்படித்தான் சந்தோஷமா இருக்கோம்கிறதைத் தெரிஞ்சுக்க...''



ஒரு வார்த்தை பேசாமல் தலையைத் தொங்கப் போட்டபடி மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்த அமுதா கை கழுவிவிட்டுப் படுத்துக்கொண்டவள் ராஜா வர இன்னும் எத்தனை நேரம் இருக்கிறது என்பதை நிமிஷங்களில் எண்ணலானாள்...

வெள்ளிக்கிழமை மாலை எப்போதும்போல் பூவராகன் ஸ்டேசன்வரை போய் ராஜாவைக் காரில் அழைத்துக்கொண்டு திரும்பினார். வருகிற வழியில் விசாரிப்புகளுக்குப் பின்னர் நிலமும், நீரும், பயிரும், படியாட்கள் பிரச்சினைகளுமே பேச்சிற்குத் துணை வந்ததே தவிர பூவராகன் அமுதாவின் படிப்பு பற்றின பேச்சை எடுக்கவில்லை. வீட்டிலும் ''வா தம்பி...'' என்று முகம் முழுதும் மலர்ச்சியாக வரவேற்ற வடிவாம்பாள் காபியும் டிபனும் தந்து உபசரித்ததோடு சரி.

''போ தம்பி...பிரயாணக்களைப்பு இருக்கும். மாடியில் போய் கொஞ்ச நேரம் படுத்துக்க...மாமா சாப்பிட வர்ற போது கூப்பிடறேன். இறங்கிவந்து சாப்பிடலாம்'' என்றாள்.

''ஐயோ...இத்தனை தோசை காபிக்கு அப்புறம் சாப்பிட வேறு கூப்பிட்டால் முடியாது. மாமி...இனிமேல் சாப்பாடு நாளைப் பகலுக்குத்தான்...அதனால் மாமாவை சாப்பிடச் சொல்லுங்க...நான் போய் ரெஸ்ட் எடுத்துக்கறேன்'' என்றவன் நிலையடியில் தயங்கி நிற்க வடிவாம்பாள் அவன் எதற்குத் தயங்குகிறான் என்பதைப் புரிந்துகொண்டும் வேண்டுமென்றே ''என்ன தம்பி...?'' என்று கேட்டாள்.

''வந்து...எங்க மாமி அமுதாவைக் காணோம்—?''

வடிவாம்பாள் உதட்டில் சந்தோஷப் புன்னகை எட்டிப் பார்க்க தன் மலர்ச்சியைக் காட்டிக்கொள்ளாமல் சாதாரணமாகச் சொல்கிறாற் போல் சொன்னாள்.

''அது எங்கப் போகும் தம்பி? போக இடம் தான் ஏது...? எப்பவாச்சும் கழனிக்கும் மிஷின் கொட்டாய்க்கும்

போகும். இல்லாட்டி போனால் பிள்ளையார்க் கோவிலைச் சுற்றி விட்டு வரும். அதுவும் விளக்கு வைக்கிற நேரத்திற்கு முன்னாலேதான். இந்த நேரத்துக்கெல்லாம் எங்க போகும்? இங்கத்தான் மாடியில இருக்கும். இல்லாட்டி போனால் கீழண்டை வாசல் மேலண்டை வாசல் எங்கயாச்சும் உட்கார்ந்து புஸ்தகம் படிச்சிட்டிருக்கும் போய்ப் பாரேன்...''

தன் கேள்விக்கு அவ்வளவு நீளப் பதிலை எதிர்பார்க்காத ராஜா விட்டால் போதும் என்று விடுவிடுவென்று மாடிக்குப் போய் அமுதாவின் அறைக்குள் எட்டிப்பார்த்தான். கட்டிலில் படுத்து அவள் நிச்சிந்தையாய் தூங்குவது தெரிய இந்த நேரத்தில் இப்படித் தூங்குகிறாளே...! என்று நினைத்துக் கொண்டான். இன்று வெள்ளிக்கிழமை. தான் வருவோம் என்பது தெரிந்தும் தனக்காகக் காத்திராமல் அவள் தூங்கி விட்டது மனதில் உறுத்தலாக நிற்க சத்தப்படுத்தாமல் கதவை மூடிக் கொண்டு கீழே இறங்கி வடிவாம்பாளிடம் வந்து கேட்டான்.

''என்ன மாமி...அமுதாவிற்கு உடம்பு சரியில்லையா என்ன...? இந்த நேரத்திற்குத் தூங்கறாளே.?''

''தூங்குகிறாளா...?'' என்ற வடிவாம்பாள் சட்டென்று நிலைமையை சமாளித்தாள்.

''ரெண்டு மூணு நாளா நல்ல காய்ச்சல். நேற்றிக்குத் தான் ஜுரம் விட்டது. இன்னிக்கு குளிச்சு ஒருவாய் சாப்பிட்டு வீட்டுக்குள்ளாறவே அலைஞ்சிட்டிருந்தா...அது முடியலே போல இருக்கு...களைச்சுப்போய் தூங்கிட்டிருபா...இரு நான் வந்து எழுப்பறேன்.''

''ஐயயோ...வேணாம் மாமி...பாவம் தூங்கட்டும். எழுப்ப வேணாம். நான்தான் இரண்டுநாள் இருக்கப் போறேனே நாளைக் காலைல பேசிக்கறேன்...''

''அ...வ...கூட உன்கிட்ட ஏதோ பேசணும்னு சொல் விட்டிருந்தா...'' என்று மெல்ல இழுத்துக் கோடி காட்டினாள் வடிவாம்பாள்.



''என்ன மாமி...?'' என்றான் அவன் ஆர்வமாக.

''என்னன்னு சொல்லலேப்பா...உன் கிட்ட பேச வேண்டியதை என்கிட்ட சொல்லுவாளாப்பா?''

''போங்க மாமி...'' என்ற போது கறுப்பு முகமானாலும் களையான அந்த முகத்தில் படிந்த வெட்கம் கவர்ச்சியாய்த் தெரிய,

''சரி, நான்போய் படுக்கறேன் மாமி. காலைல பார்க்கறேன்...''என்று வழக்கமாகத் தான் படுக்கும் அறைக்குப் போய் உடைமாற்றிப் படுக்கையில் விழுந்தான் அவன்.

மிஷின் கொட்டாயின் தண்ணீர் இறைக்கும் இயந்திரம் அதிக சத்தத்துடன் ஓடிக் கொண்டிருந்தது. குளம் மாதிரிப் பக்கத்திலிருந்த மிகப் பெரிய கிணற்றின் தண்ணீரை வாங்கி ராட்சத இரும்புக் குழாய் வழியாக மறு பக்கம் தடதடவென்று அருவியாகக் கொட்டிக்கொண்டிருந்தது. கொட்டின இடம் நீச்சல் குளமாக மாறிக் கிடக்க வாய்க்கால் வழியாகப் பயிருக்குப் பாய்ச்சப்படும் அந்தத் தண்ணீரில் மிதந்து கொண்டிருந்தான் ராஜா. இடுப்பில் கட்டிய டர்கிஷ் துவாலையோடு அருவியாகக் கொட்டிய நீரில் நனைந்து கொண்டிருந்தான். வெகு தூரத்தில் நடவு நடுபவர்களைத் தவிர யாருமற்ற தைரியத்தில் மிகச் சுதந்திரமாகக் குளிக்க ஆரம்பித்தான். அன்று காலை எழுந்த உடன் அமுதாவைப் பார்த்துப் பேசிய சந்தோஷத்தோடு குளிர்ந்த நீரின் இதமும் சேர்ந்து இன்னமும் சந்தோஷத்தை ஏற்படுத்தியது. இத்தனைக்கும் அமுதா அதிகம் பேசவில்லை.

''எப்போ வந்தீங்க...?'' என்று கேட்டாள்.

''நேற்று ராத்திரி எழு மணி இருக்கும். மேலே வந்து பார்த்தேன். நீ அசந்து தூங்கிட்டிருந்தே... எழுப்ப வேணாம்னு நானும் தூங்கப் போயிட்டேன்...'' என்றான் இவன். அவளைப் பார்த்த மாத்திரத்தில் உள்ளுக்குள் ஒரு நிறைவு ஏற்படுவதை உணர்ந்தான். மனதிற்குள் சொல்ல

இயலாத ஒரு விசித்திர உணர்வு பொங்கிப் பொங்கி வந்தது. இன்னதென்று விவரிக்க முடியாத குதூகலத்துடன் அவன் அவளை மிகமிக மென்மையாகப் பார்த்துக்கொண்டு நிற்க அவள் தயங்கித் தயங்கிச் சொன்னாள்.

''நான் உங்க கிட்டே கொஞ்சம் தனியாகப் பேசணும்னு இருக்கேன்...''

''காத்துக்கிட்டிருக்கேன்...'' என்றான் இவன். ''இப்போ காபிகுடிச்சுட்டு மிஷின் கொட்டாய்க்குக் குளிக்கப் போறேன். தனியாப் பேசணும்னு சொன்னியே அமுதா, உன்னால அங்க வர முடியுமா...? அம்மா அனுப்புவாங் களா...?''

''பெரிய கிணற்றடி கொட்டாய்தானே—? அம்மா கிட்டே சொல்லிட்டே வரேன். அனுப்புவாங்கன்னுதான் நினைக் கிறேன். பக்கத்துல நடவுவேற நடக்குது. அதையும் பார்த்திட்டு வரேன்னு சொன்னால் சரின்னுதான் சொல்லு வாங்க.''

''அப்போ நான் போறேன். நீ வந்திடு...'' என்று சொல்லிவிட்டு வந்திருந்தான்.

அதனால் அமுதா வருவதற்குள் குளித்து அழகாய் உடை உடுத்து காத்திருக்கத் தீர்மானித்துத்தான் நீரில் இறங் கினான். ஆனால் தண்ணீரின் சில்லுப்பும், காலையின வெயிலின் இதமான சூடும், லேசாய் வீசின. காற்றின் சிலு சிலுப்பும் அத்தனை சீக்கிரமாகத் தண்ணீரை விட்டு எழுந்து வர விடவில்லை. உள்ளுக்குள் மனசு அமுதாவின் வருகைக் காகப் பரபரத்தாலும் உடம்பு, 'இன்னும் கொஞ்ச நேரம், ஐந்து நிமிஷம்...' என்று கெஞ்ச அவன் அந்தச் சின்ன நீர்த்தேக்கத்தில் நீந்திக் கொண்டிருக்க,

அவனுக்குப் பின்னால் மிஷின் கொட்டாய் பக்கத்தில் வந்து நின்ற அமுதா சிறு பிள்ளையாக அவன் தண்ணீரில் அளைவதை வியப்புடன் பார்த்தபடி நின்றிருந்தாள்.



இழைத்து வார்னிஷ் போட்டு பளபளக்க வைத்த தேக்கு மரமாக அவன் உடம்பு மின்னுகிற அழகை கவனித்தாள். கறுப்பு உடம்பிற்குக்கூட இப்படிப்பட்ட அழகும், கவர்ச்சியும் ஏற்பட முடியுமா என்ற ஆச்சரியம் தோன்றியது. முதல் முறையாக அவன் அவளை ஈர்க்கத் தொடங்கினான். பலகை பலகையாக மார்பும், திரண்டு தேக வலிமையைக் காட்டிய புஜங்களும், அந்த உயரமும், அளவான பருமனும் அவள் கண்ணில் பட்டு மனதைத் தொட்டன. முகம்கூட நல்ல லட்சணமாக இருப்பதைக் கவனித்தாள். கூர்மையான மூக்கும், தீட்சண்யமான கண்களும், எப்போதும் சிரித்துக் கொண்டிருக்கும் மெல்லிய உதடுகளும், வரிசையாய் வெள்ளை வெளேரென்று பளிச்சிடும் பற்களும், கம்பீரமான பேச்சும், கண்ணியமான தோற்றமும்...

நிறம் ஒன்றைத் தவிர வேறு என்ன குறை இவருக்கு...? எதில் குறை...?

நிறுத்து நிறுத்துப் பார்த்தால் இவருக்குமுன் தன் அழகு ஒன்றுமேயில்லை...என்று கூடத் தோன்றியது. தன் அழகு அதீதமாகத் தெரிவது சந்தனத்தை இழைத்துப்பூசின மாதிரி இருக்கிற இந்தப் பொன் நிறுத்தால்தான். மற்றபடி இவரின் மூக்கின் தீர்மை தனக்கில்லை. பற்கள் அரும்பரும்பாக அத்தனை வரிசையில்லை...இது ஏன் இவருக்குத் தெரியாமற் போயிற்று...? ஏன் இந்த...

''நீ எப்ப வந்தே அமுதா...?''

நீரிலிருந்து அவசர அவசரமாக எழுந்து வெளியில் வந்த வன் அவளெதிரில் ஈரத்துவாலையுடன் நிற்க வெட்கப்பட்டு ''இதோ வந்திடறேன்...'' என்று கொட்டகையின் மறு பக்கம் போய் அவசர அவசரமாக உடம்பைத் துடைத்து சலவை வேட்டியும், வெள்ளை முழுக்கைச் சட்டையுமாக சிரித்தபடி அவளருகில் வந்தான்.

''வந்து ரொம்ப நேரமாயிடுச்சா அமுதா...? உன்னைக் கவனிக்காம நான் பாட்டு தண்ணியிலே ஏதோ இருக்குமே அந்த மாதிரி இருந்துட்டேன்...''

''தண்ணில என்ன இருக்கும்? தாமரைப் பூவும், அல்லிப் பூவும் இருக்கும். அந்த மாதிரின்னு சொன்னீங்களா...?'' என்றாள் அவள் சாமர்த்தியமாக.

அந்த புத்திசாதுரியத்தில் அவன் குளிர்ந்து போனாலும் சட்டென்று மறுத்தான்: ''ம்ஹூம், நீ தண்ணியில் இருந்திருந்தா நான் அவை இரண்டையும் சொல்லியிருப்பேன். இருந்தது நான்தானே... என்னை மாதிரி கன்னங்கரேல்னு கொம்பும், நாலுகாலும், வாலுமாக எது இருக்கும்...? அதைச் சொன்னேன்...''

அவன் புன்சிரிப்பு மாறாமல்தான் சொன்னான். ஆனால் அவளுக்குள் அது சுரீரென்று தைத்தது. சட்டென்று நின்று நிமிர்ந்து அவனை ஒரு கோபத்துடன் பார்த்தாள்.

''இதப்பாருங்க... எதுக்காக நீங்களே உங்களை இப்படித் தாழ்த்திப் பேசிக்கறீங்கன்னு தெரியலை. கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிற வரைப் பற்றி அந்தப் பொண்ணுகிட்ட வேற யாராவது குறைவாப் பேசினாலே அவளால் தாங்கிக்க முடியாது. அப்படி இருக்கிற போது நீங்களே பேசினால் என்ன செய்யறது...? இனிமேல் நீங்களே கூட உங்களை அப்படிப் பேசிக்கிற உரிமை கிடையாது. ஏன் தெரியுமா... இனிமேல் நீங்க உங்களுக்கு சொந்தமில்லே... எனக்கு சொந்தமான எதையும் யாரும் குறைச்சோ, தாழ்வாகவோப் பேசவோ நான் விடவே மாட்டேன்...''

ஒரு வினாடி அதிர்ச்சியிலும், சந்தோஷத்தாலும் தாக்கப்பட்டவனாக அப்படியே நின்றான் அவன். அவளது பேச்சு ஏற்படுத்திய பாதிப்பு அதிகமானதாக இருந்தது. சட்டென்று வார்த்தைகள் வராமல் தடுமாறி பின்னர் எது சொல்லவும் தோன்றாமல் சடாரென்று அவளது இரு கைகளையும் பற்றிக் கொண்டு கேட்டான்.

''அமு...தா... நெஜமாத்தான் சொல்றியா...? இத்தனைப் பேச்சும் உன் மனசுலேருந்துதானே வருது...?''



அவனது ஸ்பரிசத்தால் ஏற்பட்ட சிரிப்புடன் அவளும் உணர்ச்சி வசப்பட்டவளாகச் சொன்னாள்.

'' மனசுலேருந்து மட்டுமில்லே, நெஞ்சுக்கு அடியிலேருந்து வருது... ஆமாம், உங்களுக்கு ஏன் இத்தனை சந்தேகம் ஏற்பட்டது...?''

''இப்போ மட்டுமில்ல அமுதா... எப்பவுமே எனக்குள்ள எல்லோரும் சேர்ந்து என்னை உன் தலையில கட்டறாங்களோன்னு தோணும். மனசுக்குப் பிடிக்காட்டிப் போனாலும் மறுத்துச் சொல்ல முடியாமல் நீ என்னை ஏற்றுக்கிட்டியோன்ற சந்தேகம் வரும்...''

''ஏன் அப்படி ஒரு சந்தேகம் வந்துச்சுன்னுதான் கேட்கறேன்...?''

''ஏன்னு கேட்டா... உன் அழகு, என் நிறம் ரெண்டும் தான் காரணம்...''

''நிறத்துலதான் எல்லாம் இருக்குன்னு நீங்க நினைச்ச தப்பான எண்ணம் தான் காரணம். பாரதியார் கவிதைகள் படிச்சதில்லே போலிருக்கு நீங்க...''

''என்ன அப்பிடி கேட்டுட்டே. பாரதியார் கவிதைப் போட்டியில் முதற் பரிசு வாங்கினவன் நான்...''

''அப்படியிருந்துமா இந்த மாதிரி ஒரு நினைப்பு மனசுல எழுந்துச்சு. 'காக்கைச் சிறகினிலே நந்தலாலா' தெரிஞ்சுமா இப்படி ஒரு அபிப்பிராயம் உருவாச்சு...?''

''அது...அது வந்து... சரி தப்புத்தான். உனக்கு அப்படி ஒரு குறை இருக்குமோ என்கிற எண்ணத்துல எனக்குள் ஏற்பட்ட குறை இது...''

''இனிமேலும் இந்தக் குறை ஒட்டிக்கிட்டு இருக்குமா...?''

''எப்படி இருக்கும்...? நீதான் பெருக்கித் துடைச்சு பளிச்சுன்னு விளக்கேற்றி வச்சிட்டியே...''

''சரி...நடவு நடறவங்க வேலை முடிச்சு வந்து பார்க்கிறதுக்குள்ள கையை விட்டுடலாமில்லியா?''

''ஓ...ஸாரி...'' என்று மனமில்லாமல் தன் கையைப் பிரித்துக் கொண்டான். ''உன் கையா நான் பிடிச்சுக்கிட்டிருந்தது...''

''பின்னே என்னன்னு நினைச்சீங்க...?''

''ஏதோ பூமாலைன்னு நினைச்சேன்...''

''என்ன, இன்னிக்குப் பேச்செல்லாம் அட்டகாசமா வருது...?''

''முதல்தரமா உன்கூட வெளியே வந்து மனசு விட்டுப் பேசற சந்தோஷம்; வராமல் என்ன செய்யும்...''

''சரி...சீக்கிரமா வீட்டுக்குப் போகாட்டி, அம்மா நூறாளை அனுப்பிடுவாங்க...''

''பாத்தியா...முக்கியமா ஏதோ பேசணும்னு வந்திட்டு நேரமாயிடுச்சுன்னு பயந்தால் எப்படி...? என்ன விஷயம் அமுதா...?''

''இப்படி நின்னுகிட்டே பேசமுடியாது; அதோ அந்த நாவல் மரத்தடி நிழல்ல உட்கார்ந்து பேசலாமா...?''

''இன்னி முழுசும் கூட உன்னோட அங்கு உட்கார்ந்து பேசத் தயார். இன்னிக்கு மட்டுமில்ல, இந்த ஜென்மம் முழுக்கும் தயார்...''

அமுதா பெருமையும், சந்தோஷமுமாகச் சிரித்துக் கொண்டாள்.

''சொல்ல வேண்டிய விஷயத்துக்கு நான் அவ்வளவு நேரம் எடுத்துக்க மாட்டேன். ஒரு பத்து நிமிஷம் இருந்தாலே போதும். வாங்க, நாவல் மரத்தடிக்குப் போவோம்.''

நடந்து போன போது அவன் மேலே ஒன்றும் பேசவில்லை. மரத்தடி நிழலில் உட்கார்ந்த பின்பும் இரண்டு



மூன்று நிமிடங்கள் மௌனமாகவே இருந்தான். கீழே கிடந்த குச்சி ஒன்றை எடுத்து இறுகிக் கிடந்த மண் தரையில் ஆங்கிலத்தில் அமுதா என்று எழுதினான். பின்னர் தன் முழுப் பெயரான ராஜசேகரனைச் சேர்த்து எழுதி அழகு பார்த்து பின் சடாரென்று நினைவிற்கு வந்தவனாக எழுதியதை அழித்து விட்டு நிமிர்ந்து அவளைப் பார்த்துக் கேட்டான்.

''என்ன அமுதா ஏதோ பேசணும்னு கூட்டிட்டு வந்து அமைதியா உட்கார்ந்திட்டிருக்கே...? என்ன சொல்லு...?''

''சொல்லத்தான் வார்த்தைகளை தேடிட்டிருக்கேன், எப்படிச் சொன்னால் சரியாக இருக்கும்னு யோசிக்கிறேன்...''

''வந்து...வந்து...''

''ப்சு...'' என்று அடித்துக் கொண்டான் அவன். ''இப்படி இருந்தால் என் மேல உனக்கு நம்பிக்கையில்லேன்னு அர்த்தம்...''

''அப்படியில்லை...அந்த நம்பிக்கை என் மேல் இருக்கணுமேன்னுதான் கவலைப்படறேன்...''

''என்ன பேசற அமுதா நீ...?'' என்று அடிபட்ட பாவனையில் அவளைப் பார்த்தான்.

''நம்பிக்கை இல்லாமலா உன்னை மனைவியா ஏற்றுக்கக் காத்துக்கிட்டிருக்கேன்...ம்...?''

''இப்போது இருக்கும். அந்த நம்பிக்கை பொண்டாட்டியாகப் போறவ ஆம்பிளைங்களும் படிக்கிற ஒரு பள்ளிக் கூடத்துல சேர்ந்து படித்தாலும் இருக்குமா...?''

அதைக் கேட்டு மென்மையாகப் புன்னகை செய்தான் அவன், அவளை ஒரு குழந்தையைப் பார்க்கிற மாதிரி பார்த்தான்.

''ஏன் அமுதா...என் கூட என் வகுப்பில் படிக்கிற பெண்களைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிறவனெல்லாம் அவங்களை நம்பிக்கையில்லாம பார்த்தால் அத்தனைப் பெண்களின் வாழ்க்கையும் என்ன ஆகும் தெரியுமா...? ஆண்

களோடு சேர்ந்து படிக்கிற காரணத்தினாலேயே அந்தப் பெண் கெட்டவளாகி விடுவாளா அமுதா...அதற்காக அவளை சந்தேகப்படுகிற ஆண் எத்தனைக் கேவல புத்தியுள்ளவனாக இருப்பான்...?''

சட்டென்று அவளது முகம் பளிச்சிட்டு குழல் விளக்கை ஏற்றின மாதிரி பிரகாசித்தது. நெஞ்சும் மனமும் தாங்க முடியாத சந்தோஷத்தில் விம்ம தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள இயலாதவளாக ''ராஜா...'' என்று உதடு நடுங்கக் கூப்பிட்டு தரையில் கிடந்த அவனது கரத்தைப் பற்றிக் கொண்டு விட்டாள். அதற்கு மேல் பேச வராமல் அவன் தடுமாற தன் கரத்தைப் பற்றியிருந்த அவளது கை நடுங்குவதை உணர்ந்த ராஜா இத்தனை உணர்ச்சி வசப்படுவதற்குக் காரணம் புரியாதவனாக அவள் கையை அழுத்தி ஆதரவாக இறுக்கிய படி கேட்டான்.

''எதுக்கு இப்படி நடுங்குது உன் கை...? இந்த அளவு நடுங்கும் படி நான் என்ன சொல்லிட்டேன்...?''

''வேற என்ன சொல்லணும்...? இந்த ஒரு பேச்சு போறாதா எனக்கு...? படிக்கக் கூட வேணாம். அப்படியே செத்துப் போயிடலாம்னு தோணுது...''

''சீ!'' என்று அதட்டிய ராஜா, ''என்ன நேரத்துல என்ன சொல்லணும் என்கிற விவஸ்தை கிடையாது...?'' என்று கடிந்து கொண்டான்.

''நிஜமாத்தான் சொல்றேன். இந்த ஒரு நிமிஷத்துல எனக்கு உங்க கூட வாழ்ந்து முடிச்ச திருப்தி ஏற்பட்டிடுச்சு...''

''பைத்தியம்...'' என்று அவளது உள்ளங்கையை எடுத்து தன் உதட்டில் அழுந்தப் பதித்து முத்தமிட்டான்.

''ரொம்ப உணர்ச்சி வசப்பட்டுப் போயிருக்கே நீ அமுதா... இவ்வளவு உருகிப் போக என்ன காரணம்னு தெரியலே... நீ பேசின பேச்சுலேருந்து என்னால் எதையோ ஊகிக்க முடிஞ்சாலும், முடியாத் தெரியலே... எதுவானாலும், உனக்கு நான் துணையா நிப்பேன் அமுதா. உன்னை நான் நேசிக்கறேன்னால் இந்த உடம்பை மட்டுமில்லே, உடம்போட, சேர்ந்த ஆத்மாவையும் சேர்த்தே நேசிக்கிறேன். அதனால நீ தைரியமாப் பேசு அமுதா; எதுவானாலும் என்கிட்ட சொல்லு. உனக்கு நான் இருக்கேன்னு நினைச்சுக்க. இப்போ இந்த இடத்துல உன் பக்கத்துல உட்கார்ந்திட்டிருக்கிறதால் இதைச் சொல்லலே... உன்னோட அழகின் மயக்கத்துல பேசல. எப்போதும் எந்த சந்தர்ப்பத்துலேயும் எந்தவிதமான நிலைமையிலேயும் உன்னோட நியாயமான எந்த ஆசைக்கும், எண்ணத்திற்கும் நான் குறுக்க நிற்காதது மட்டுமில்ல. கூடத் துணையா இருந்து நிறைவேற்றியும் வைப்பேன். இதை சத்தியமான வார்த்தையாக நீ எடுத்துக்கலாம் அமுதா...''



''போறும்...போறும்...'' என்று அவன் உதட்டைத் தன் விரல்களால் பொத்தின அமுதா, ''இதுக்கு மேல நீங்க ஒரு பேச்சு பேசினால் கூட நான் அழுதுடுவேன், என்னை அழ வைக்கணுமின்னா நீங்க பேசுங்க...''

''உன்னை எப்பவும் சந்தோஷமாகவே பார்க்கணும். உன் கண்ணுல தண்ணியே வரக் கூடாதுன்னு நினைக்கிற நானா உன்னை அழ வைப்பேன்...? சரி நான் பேசலை; நீயே பேசு. சொல்ல வந்த விஷயத்தை விவரமா சொல்லு...''

அமுதா அதன்பின் எல்லாவற்றையும் ஒன்றுவிடாமற் சொன்னாள். தான் படிக்க ஆசைப்பட்டது, அப்பா அம்மாவிடம் கெஞ்சினது, ஆண்களும் சேர்ந்து படிக்கிற பள்ளிக்கூடமானதால் அவர்கள் மறுத்தது, பின் ராஜா சம்மதித்தால் தங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றது... என்று நேற்றிரவு அம்மாவிற்கும், தனக்கும் நடந்த பேச்சுவரை சொல்லி முடித்தாள்.

''எப்படியும் உங்க படிப்பு முடிய ரெண்டு வருஷமாகும் இல்லீங்களா...?

''அதுக்கப்புறம்தானே கல்யாணம். அதுவரை நான் வீட்டுல சும்மா இருக்கிறதுக்கு படிக்கக்கூடாதுங்களா...? தினமும் முனுசாமி வில்வண்டி கட்டி கூட்டிட்டுப்போயி சாயந்திரம் கூட்டிட்டு வரமாட்டானா? இல்லாட்டி அப்பா கொண்டு போயி விடக் கூடாதா...? சொல்லுங்க...?''

அதைக் கேட்ட பின்னர் மனமாரச் சிரித்தான் அவன். ''பைத்தியம்...பைத்தியம்...'' என்று மெல்ல கைவிரல்களை வருடிக் கொடுத்தான்.

''நான் கொஞ்ச முன்னால சொல்லலை...?'' உன்னோட நியாயமான எந்த ஆசையையும் நிறைவேற்றி வைப்பேன்னு... இப்போ உனக்குப் படிக்கணும். அவ்வளவுதானே...?

''ஆமா...ம்'' என்று கண்கலங்க அவள் தலையாட்டினாள்.

''ஸ்கூல் பக்கத்து கிராமத்துல இருக்கு; ஆண்களோடு சேர்ந்து படிக்கணும்னு மறுக்கறாங்க...''

''பக்கத்துக்கிராமம் என்ன, ஆசைப்பட்டால் பட்டணத்துக்கேகூட உன்னை அனுப்பிப் படிக்க வைப்பேன். பெண்களோடு சேர்ந்து நான்படிக்கிறப்போ நீஆண்களோடு சேர்ந்து படிக்கக் கூடாதா என்ன...? அப்போ ஏண்டா பொம்பிளைகளோடு சேர்ந்து படிக்கணும்னு என்னைத் தடுக்காதவங்க இப்போ உன்னை மட்டும் ஏன் தடுக்கணும்...? இதெல்லாம் பெண்களை அடிமைப்படுத்திப் பழக்கப்பட்டவங்களோட வியாக்கியானம். இதைப்பற்றியெல்லாம் நீ கவலைப்படாதே அமுதா. எழுந்து கண்ணைத் துடைச்சுக்கிட்டு என்னைப் பார்த்து சந்தோஷமா ஒருதரம் சிரிச்சிட்டு வீட்டுக்குப்போ. 'நீ ப்ளஸ்-2 பாஸ் பண்ணினாத்தான் நான் கலயாணம் பண்ணிக்கப்போறேன்'னு மாமாகிட்டேயும் மாமி கிட்டேயும் அடிச்சு சொல்லிடறேன். சொல்றதோடு மட்டுமில்லாமல் உன்னைப் பள்ளிக் கூடத்துல சேர்த்து விட்டப்புறம் தான் நான் ஊருக்குப் போகப்போறேன். இப்போ விட்டுக்கு வந்து நானே



மாமாகிட்டேயும் மாமிகிட்டேயும் பேசறேன். எங்கே எழுந்து கண்ணைத் துடைச்சுக்கிட்டு சிரி பார்க்கலாம்...''

அவள் எழுந்து சட்டென்று குனிந்து அவனே எதிர் பாராத வகையில் அவனது பாதத்தைத் தொட்டு கண்களில் ஒற்றிக்கொண்டு ஒரே ஓட்டமாக ஓட, அவள் ஓடுகிற அழகை ரசித்தவனாக சிறிது நேரம் அப்படியே உட்கார்ந்து விட்டு பின்னர் பூவராகனிடமும், வடிவம்பாளிடமும் பேச வேண்டிய விஷயம், விதம் இரண்டையும் முடிவு பண்ணிக் கொண்டவனாக மெல்ல எழுந்து வீட்டை நோக்கி நடந்தான்...

## 4

பகல் சாப்பாட்டின் போது மெல்ல பேச்சுக் கொடுத்தான் ராஜா. நெய் ஊற்றக் குனிந்த அமுதாவிற்குக் கண் காட்டி அவளை அந்த அறையை விட்டுப் போகச் செய்த பின்னர் தொடர்ந்தான். மிக இயல்பாக விஷயத்திற்கு நேரிடையாக வந்தான்.

''மாமா, மாமி... உங்க ரெண்டு பேர் கிட்டேயும் பேசணும்னுதான் அமுதாவைப் போகச் சொன்னேன். காலைல அமுதா விவரமா என்கிட்ட எல்லாம் சொன்னா. நீங்க ரெண்டு பேரும் நான் சரின்னு சொன்னா அவளைப் படிக்க வைக்கறேன்னீங்களாம்.''

''அப்படியில்லேப்பா...'' என்று இடையில் குறுக்கிட்ட வடிவாம்பாளைக் கையமர்த்தி நிறுத்தினான்.

''இருங்க மாமி, முதல்ல நான் பேசிடறேன். அப்புறமா நீங்க எது சொல்லணுமோ சொல்லுங்க...'' என்றவன் மேலே தொடர்ந்தான்.

''என் சம்மதத்தோடத்தான் நீங்க அவளைப் படிக்க வைக்கணும்னு நினைச்சது தப்பில்லே இதற்கு நான் மனபூர்வமா சம்மதிக்கறேன். அமுதா படிச்சு விஷயம் தெரிஞ்சவளா

இருக்கறதில் எனக்கு ஏற்படக் கூடிய சந்தோஷம் கொஞ்சமில்ல...ஆனால் மாமா, இதுல எனக்கு ஒரு சின்ன வருத்தம்'' என்று நிறுத்த பூவராகன் சாதத்தைப் பிசைவதை விட்டு சட்டென்று தலையை உயர்த்தி அவனைப் பார்த்துச் சொன்னார்.

''தெரியும். ஆம்பிளைப் பசங்க படிக்கற ஸ்கூல்ல இதை அனுப்பிப் படிக்க வைக்க வேண்டியிருக்கே என்ற வருத்தம் தானே...''

அதைக் கேட்டு அவன் கால் வினாடி அவர் முகத்தையே பார்த்துப் பின்னே ஒரு சின்னப்பெருமூச்சோடு ஆரம்பித்தான். பேசத் தொடர்ந்த போது உதட்டோரம் மெல்லிய புன்னகை எட்டிப் பார்த்து இவ்வளவு தானா நீ...என்று கேட்கிற மாதிரி இருந்தது. அல்லது நான் அவ்வளவு தான் என்று தப்பாக எடை போட்டு விட்டாயா...? என்று குற்றம் சாட்டுகிற பாவனையும் தென்பட்டது. அவனது அந்தப் பார்வைக்கும் சிரிப்பிற்கும் அர்த்தம் புரியாமல் பூவராகன் தடுமாறிக் கொண்டிருந்தபோது அவனே விளக்கம் சொல்ல முற்பட்டான்.

''இல்லே மாமா...இப்படி நீங்க பேசறது தான் வருத்தமா இருக்கு. அதுவும் உங்க கிட்டேயிருந்து நான் இப்படிப் பட்ட எண்ணத்தை எதிர் பார்க்கலே...மாமி உலகம் தெரியாதவங்க... வீட்டை விட்டு நகராதவங்க. இன்னமும் அந்தக் குறுகிய வட்டத்துக்குள்ளேயே சுற்றிச் சுற்றி வர்றவங்க... அதனால் அவங்க கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறவனைத் தவிர வேற்று ஆணோடு பேசறதுகூடத் தப்புன்னு நினைப்பாங்க. ஆணும், பெண்ணும் சேர்ந்து படிக்கிற எண்ணத்தைக் கூடத் தாங்கிக்க முடியாமல் தவிப்பாங்க...அவங்க நிலைமையில் அது சகஜம். ஆனால் நீங்க அப்படியில்லையே மாமா...உங்க உலகம் குறுகினதில்லையே...இந்த கிராமத்துக்குள்ளேயே அடங்கினவரில்லையே... கோர்ட்டு, கேஸுன்னு மாயவரம் போறீங்க, தஞ்சாவூர் போறீங்க, கும்பகோணம் போறீங்க என்... மெட்றாசுக்கு எத்தனை தரம் போயிட்டு வரலை... அங்க ஆணும் பெண்ணும் சகஜமா



பேசிப் பழகறதைப் பார்க்கலே? ஒண்ணா படிக்கிறது தெரியலை...?

''அப்படி இருந்தும் ஆம்பிளைப் பசங்க படிக்கிற ஸ்கூல்னு அமுதாவை அனுப்பத் தயங்கலாமா? அப்படியே அதுதான் உங்கத் தயக்கம்னாலும் கூட அதை வாய் விட்டுச் சொல்லலாமா மாமா...? அப்படிச் சொல்றது உங்க பொண்ணு மேல உங்களுக்கே நம்பிக்கையில்லேன்னு ஆயிப் போகாதா...? அது அவளை அவமதிக்கிற மாதிரி இருக்காது...?''

ஓங்கி முகத்தில் அறைபட்ட உணர்வில் பூவராகன் அவனது கேள்வியில் குறுகிப் போனார்.

ஆனாலும் அந்த நேரத் தற்காப்பு உணர்ச்சியில் எதையோ சொல்ல ஆரம்பித்தார்.

''நான் அப்படிச் சொன்னது என் பொண்ணு மேல எனக்கு நம்பிக்கை இல்லாததால் இல்லே ராஜா... உனக்குத் தெரியும், அமுதா மேல் நான் வச்சிருக்கிற பிரியமும் பாசமும் நம்ம பொண்ணு எப்படிப்பட்டதுன்னு நமக்குத் தெரியாமற் போகுமா...? ஆனால் நாலு ஆண் பிள்ளைகளுக்கு நடுவில் படிக்கணும்னால் அவங்க எப்படிப்பட்டவங்களோன்ற சந்தேகம் தோன்றது இயற்கை, தானே...? எல்லார் பார்வையும் எப்பவும் ஒண்ணா இருக்காதில்ல...?''

அவரது பேச்சிற்குப் பின்னரும் ராஜாவின் உதட்டோரச் சிரிப்பு மறையவில்லை.

நிதானம் தவறாமல் அதே பாவனையில் அவரைப் பார்த்தான்.

''சரி இருக்கட்டும்; நாலு பேர் பார்வை நாலு விதமாத்தான் இருக்கும்கிறதை ஒப்புக்கறேன். ஆனால் அதனால் பாதிக்கப்படமாட்டோம் என்கிற திடமான நம்பிக்கை இருக்கிற பட்சத்தில் என்ன மாமா பயம்...?

''நான் பெண்களோடு சேர்ந்து படிக்கற காலேஜில சேர்ந்தப்ப என் இந்தப் பேச்சு எழும்பல...? நாலு பெண்களோடு பழகற வாய்ப்பு இருக்கறதால் நம்ம ராஜா மனசு தடுமாறிட்டால் என்ன செய்யறது என்கிற நினைப்பு—ஏன் ஏற்படலை சொல்லுங்க மாமா?''

''அது... அது... வந்து...''

''அது வந்து என்ன மாமா...? உங்களால் சொல்ல முடியாது... காரணம். காலம் காலமா நமக்குள்ள ஊறிப் போயிருக்கிற அந்த 'ஆண்' என்கிற எண்ணம். நான் என்ன செய்தாலும், எத்தனை தவறிப்போனாலும் 'அவனுக்கென்ன ஆம்பிளை' என்கிற சமூகம் கொடுத்திருக்கிற அங்கீகரிப்பு. ஆண் எதையும் செய்துவிட்டுத் தப்பித்துக் கொள்ள முடியும் என்கிற நிலைமை. அதனால் நான் சேர்ந்தப்போ அதை உங்களால் சாதாரணமாக எடுத்துக்க முடிந்தது... இல்லையா மாமா...?''

''அதில்லே ராஜா... உன்னைப்பற்றி எனக்குத் தெரியும். நீ எந்தத் தப்பு வழிக்கும் போக மாட்டேன்னு திடமான நம்பிக்கை—''

''அந்தத் திடமான நம்பிக்கை உங்க பொண்ணுமேல இல்லை... இல்லையா மாமா...?''

''ரா...ஜா...''

''கோபப்படாதீங்க. சில சமயம் நமக்குள்ள மறைஞ்சு கிடக்கிற சில உணர்வுகள் நமக்கே பிடிபடறதில்லை என்பது தான் நிஜம். அந்தத் திடமும் நம்பிக்கையும் இருந்திருந்தால் அவ படிக்க ஆசைப்பட்ட உடனே 'சரிம்மா நீ மேலே படிக்கலாம். எதற்கும் ராஜா கிட்டே ஒரு வார்த்தை சொல்விடறேன்'னு என் கிட்ட ஒரு சாதாரணச் செய்தியா இல்லே சொல்லியிருப்பீங்க... இப்படி இதை, ஒரு பெரிய பிரச்சினையாக்கி பொறுப்பை என்மேல் போட்டு தட்டிக் கழிச்சு நீங்க சுலபமா விலகிக்கிட்டிருக்க மாட்டீங்கதானே...?''



''நான் பொறுப்பை உன் மேல போட்டுட்டு விலகிக்கிட்டிருக்கேனா... என்ன சொல்ற, ராஜா நீ... பேசறத்துக்கு முன்னால யோசிச்சு நிதானமாப் பேசப்பா...''

''யோசிக்காமல் நான் பேசற வழக்கமே இல்லை மாமா... ராஜா சம்மதிச்சா ஸ்கூல்ல சேர்க்கறேன்னு சொன்னால் என்ன அர்த்தமாம்...? சேர்ந்த பின்னால எது நடந்தாலும் நாங்க வேணாம்னு சொன்னோம், நீதானேப்பா சேர்த்தேன்னு என் மேல் அத்தனை பொறுப்பையும் சுமத்தற எண்ணமில்லாமல் இதற்கு வேற என்ன காரணமிருக்க முடியும்?... பெற்று வளர்த்த நீங்க அப்படி சுலபமா ஒதுங்கிக்க நினைச்சாலும் நான் ஒதுங்கிக்கிறதா இல்லே... அமுதா மேல எந்த அளவு அன்பு வச்சிருக்கேனோ அதே அளவு நம்பிக்கையும் எனக்கிருக்கு. அதனால் இந்தப் படிப்பு விஷயத்தைப் பொறுத்த வரை நானே முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கறேன். ஒரு வாரம் காலேஜிக்கு லீவு போட்டுட்டு வந்து நானே அவளை ப்ளஸ்-2வில் சேர்க்கறேன்.

''அதையும் உங்க அனுமதியோடச் செய்யறேன் மாமா. நீங்க தப்பா நினைச்சுக்கக் கூடாது. என்னடா இவன் தானே சேர்க்கறேன்னு சொல்றானேன்னு கோபப்படக் கூடாது. ஸ்கூல்ல சேர்க்கிற பொறுப்பு என்னுடையதாகவும், கொண்டு போய் விட்டுக் கூட்டிக்கிட்டு வர்ற பொறுப்பு உங்களுடையதாகவும் இருக்கட்டும். முனுசாமியையோ ஏழுமலையையோ வண்டி கட்டி கூட்டிட்டு போய் விட்டு சாயந்திரம் மூணு மணிக்கு அழைச்சுட்டு வர அனுப்பினால் சரியாக இருக்கும். இதற்காக இரண்டு வேளையும் உங்களால் போய் வந்திட்டிருக்க முடியாது. உங்களுக்கிருக்கிற வேலைகளுக்கும், வீட்டுல வந்து குழுமுகிற ஆட்களுக்கிடையிலேயும் அது சாத்தியப்படாத காரியம்னு என்னால புரிஞ்சுக்க முடியுது. வீணாக இதை ஒரு பிரச்சினையாக்கி நாமும் கஷ்டப்பட்டு, அவளையும் கஷ்டப்படுத்தாமல் இருக்கணும்னால் இப்படி ஏற்பாடு செய்யறது தான் நல்லது, இதுதான் சுலபமான வழியும் கூட. அவ நீங்க நினைக்கிற மாதிரி அப்படி ஒண்ணும்

பயந்தாங்குளிப் பொண்ணு இல்லே... ஓரளவு தைரியமானவதான். இதோ ஐந்து மைல் தொலைவில், வழி நெடுக வீடுகள் இருக்கிற பக்கத்து கிராமத்துக்குப் போய் வர துணை தேவை என்கிற அவசியமில்லை. வில் வண்டியும், முனுசாமியும் போதும் என்பது என் அபிப்பிராயம். அதுக்கு மேல் உங்க இஷ்டமும், சௌகரியமும் எப்படி இருக்குதோ அதும்படி செய்யலாம். நான் பேச நினைத்த அத்தனையும் பேசி முடிச்சாச்சு. இதுல தப்பா எதாவது சொல்லியிருந்தால் மன்னிச்சுடுங்க. இனிமேல் நீங்க என்ன சொல்லணுமோ சொல்லுங்க...''

அந்த நீண்ட நியாயமான பேச்சிற்குப் பின்னர் தான் சொல்வதற்கு ஒன்றுமே இல்லை என்கிறாற்போல் சிறிது நேரம் கண் மூடி மௌனித்திருந்தார் பூவராகன். அவரது மௌனம் சங்கடத்தை ஏற்படுத்த அவன் உள்ளுக்குள் வருத்தப் பட்டான். அதிகம் பேசிவிட்டோமோ என்கிற வருத்தம் தோன்ற மெல்ல பக்கத்தில் உட்கார்ந்திருந்த பூவராகனின் தொடையைத் தொட்டு ''என்ன மாமா, கோபமா...?'' என்ற போது திடுக்கிட்டு கண்களைத் திறந்த அவர் புன்னகையோடு அவனை ஏறிட்டார்.

''கோபமா... எனக்கா...?'' என்று கேட்டவர் ஒரு சின்ன பெருமூச்சுடன் சொன்னார்.

''இத்தனைக்கப்புறம் சொல்ல எனக்கு ஒரே வார்த்தையைத் தவிர வேற இல்லை... அதைத் தவிர எது சொன்னாலும் சரியாக இருக்காது...?''

''என்ன மாமா ?''

''நீ ரொம்பப் பெரிய மனுஷன்பா. நான் நினைத்ததை விட ரொம்ப ரொம்பப் பெரிய மனுஷன்... உன் கூடப் பேசற தகுதி கூட எனக்கு இல்லையோன்னு தோணுது...''

''மாமா...''

''அமுதா மட்டுமில்லே... நீ இந்த வீட்டு மாப்பிள்ளையா வர நாங்களும் ரொம்பக் கொடுத்து வச்சிருக்கோம்...''



''என்ன மாமா நீங்க... எது எதுவோ பேசறீங்க...?''

''எது எதுவோ பேசலை... எது நிஜமோ அதைத்தான் பேசறேன்...''

அவன் ஒன்றும் சொல்லாமல் இருக்க அவரே அந்தப் பேச்சை முடித்து வைத்தார்.

''நீ சொன்ன மாதிரி அவளை ஸ்கூல்ல சேர்த்திட்டுப்போ நான் முனுசாமியை வண்டிக் கட்டச் சொல்லி அனுப்பி கூட்டிட்டு வரச் செய்யறேன், என்ன...?''

சாப்பிடாமலே காய்ந்துபோன கையைக் கழுவ அவர் எழுந்ததும் அவனும் கூடவே எழுந்து போனான்.

அடுத்த பத்தாவது நாள் அவன் அவளை பள்ளிக்கூடத்தில் சேர்த்து விடை பெற்றுக் கிளம்ப அமுதா வில் வண்டியில் முனுசாமியின் துணையுடன் தினமும் பள்ளிக்குப் போகத் தொடங்கினாள்.

## 5

பள்ளிக் கூடத்தின் வெளிவாசற் கதவருகிலேயே தனியாய்த் தவித்தபடி நின்றிருந்தான் பாஸ்கரன். மணியடிக்கச் சில நிமிடங்கள்தான் இருந்தன.

இன்னமும் அந்த இரட்டை மாட்டு வில் வண்டியைக் காணாதது அவனுக்குள் ஒரு வெறுமையை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. தினமும் சரியாக ஒன்பது மணிக்கெல்லாம் சலங்கை சப்தமும், மணிச் சப்தமுமாக ஏதோ நாட்டியக்காரி ஒருத்தி உள்ளே நுழைகிற மாதிரி நுழையும் அந்த வில் வண்டி இன்று ஒன்பது இருபதாகியும் வரவில்லை. 'ஒரு வேளை இன்று அமுதா பள்ளிக்கே வரமாட்டாளோ...?' என்ற சந்தேகம் வேறு அவனை நிலை கொள்ளாமற் தவிக்கச் செய்தது.

'அப்படி இன்று அவன் வராது போனால் என்ன செய்யலாம்...?' என்று யோசித்தான். வகுப்பில் படிக்கிற பையன்கள் யாசிடமிருந்தாவது சைக்கிள் வாங்கி பக்கத்துக் கிராமத்தில் இருக்கிற அவளது வீட்டிற்கே போய்ப் பார்த்துவிட்டு வந்து விடலாமா...? அப்படிச் செய்தால் அவளது அப்பா என்ன சொல்வாரோ...? ரொம்பக் கோபக்காரர், கண்டிப்பானவர் என்கிறார்களே. அவர் 'ஏண்டா என் பெண்ணைத் தேடி வந்தாய்' என்று கேட்டால் என்ன பதிலைச் சொல்ல முடியும்?

கையில் எதாவது நோட்டுப் புஸ்தகத்தைக் கொண்டு போய் இதைக் கொடுக்க வந்தேன்னு சொன்னால்... நம்புவாரா...? நம்பாமல் அடியாட்களை வைத்துக் கட்டிப் போட்டு உதைத்தாரானால்...? செய்தாலும் செய்வார், அவர் தான் பண்ணையாராயிற்றே...

சட்டென்று தமிழ்த் திரைப்படக் காட்சி மாதிரி அவனுக்குள் கற்பனை ஒன்று விரிந்தது.

பண்ணையார் அவனைப் புளியமரத்தில் கட்டிப் போட்டு ஆட்களை விட்டு அடிக்கச் சொல்கிறார். பி. எஸ். வீரப்பாவாக வில்லன் சிரிப்பு சிரித்தபடி சொல்கிறார்.

''ஏண்டா, பஞ்சைப் பயல் நீ... உங்கப்பன் வாரத்துக்கு நிலம் எடுத்து பயிரிட்டு சாப்பாட்டுக்கு அரிசி வாங்காமல் காலம் தள்றான். சம்பாதிக்கணும்னே படிக்க வந்த உனக்கு இந்த வயசுல பண்ணையார் பொண் வேணுமா...? அவ்வளவு பேராசையாடா உனக்கு...? எவ்வளவு தைரியமா வீட்டுக்குள் நுழைஞ்சிருக்கே...? யாரைக் கேட்டு வந்தே...?''

வார்த்தைக்கு வார்த்தை அடியாட்களின் சாட்டை சுழன்று அவனது உடலில் வரிவரியாகக் கோடுகள் இழுக்க வீட்டிற்குள்ளிருந்து 'அப்பா...' என்று கதறியபடி அந்தக்கால சரோஜாதேவி மாதிரி ஓடிவருகிறாள் அமுதா. அவனுக்கு முன் இரு கைகளையும் விரித்து நின்று



''அவரை அடிக்காதீங்கப்பா... அதுக்குப் பதிலா என்னை அடியுங்க..?''

''எம்மா ஏதோ ஒரு பஞ்சப் பயலுக்காக நீ என் பரிஞ்சுட்டு வரே... அவனுக்காக நீ என் அடி வாங்கணும்...? அவனுக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்...?'' என்று மீசையை முறுக்கியபடி உறுமுகிறார் அவர்.

''இருங்கப்பா... அவருக்கும் எனக்கும் சம்பந்தம் இருக்கிறதால் தான் அவர் இந்த வீட்டுக்குள் நுழைந்தார். நான் இப்போ ஓடி வந்து கெஞ்சறேன்...'' அமுதாவின் கண்ணீர் சந்தனக் கிண்ணம் போன்ற கன்னங்கள் கரைந்து விடுமோ என்ற பயத்தில் ''அப்படி என்ன சம்பந்தம்னுதான் கேட்கறேன்...'' என்கிற இடிக் குரலினால் ஏற்பட்ட பயம் ஒன்றுமில்லை என்றாக்கி விடுகிறது.

''அவர்... அவர்... என்னை... நான் அவரை... அவர் என் காதலர் அப்பா...''

சட்டென்று உடம்பை நிஜமாகவே சிலிர்த்து விட்டுக் கொண்டான் பாஸ்கர். அப்படி ஒரு வார்த்தை அமுதாவிடமிருந்து வருமா என்ற எண்ணத்தில் அடிவயிற்றிலிருந்து ஆழமான பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது. அவள் தன்னைப் பற்றி என்ன நினைக்கிறாள் என்பதே தெரியவில்லையே என்று வேதனைப்பட்டான்.

அவனும் எந்தெந்த வகையிலோ அவளது மனதை அறிய முயற்சித்துப் பார்த்துவிட்டான். பள்ளிக்கூட வாசலிலேயே தவம் கிடந்த பல்லக்கிலிருந்து இளவரசி இறங்குகிற மாதிரி அவள் வண்டியிலிருந்து இறங்கின உடனே ஒரு ஓரமாக மரத்தடியில் அவளுக்கென்றே காத்துக் கொண்டு நின்றிருக்கும் அவன் ஓடிப்போய் ''குட்மார்னிங் அமுதா...'' என்று குழைவான்.

உடன் படிக்கிற மற்ற மாணவர்களுக்குச் சொல்கிற அதே விகிதாசாரத்தில் மிகச் சாதாரணமாக பதில் குட்மார்

ளிங் சொல்லிவிட்டு மேலே நடப்பாள். வகுப்பில் புத்தகங்களை வைத்து விட்டு பெண்களோடு கலந்துகொள்ள தவிக்கும் அவளது அவசரம் வெளிப்படையாகத் தெரியும். அதைப் புரிந்து கொண்டும் பாஸ்கரன் அவளோடு சேர்ந்து நடப்பதில் ஏற்படும் அலாதிப் பெருமையுடன் வகுப்புவரை போவான். அவர்கள் இருவரும் அப்படி ஒன்றாகச் சேர்ந்து வருவதை யாரும் வித்தியாசமாக எடுத்துக் கொள்ளமாட்டார்கள். காரணம் இரண்டு பேருமே வகுப்புத் தலைவர்கள், பெண்களுக்கு அவளும், ஆண்களுக்கு அவனும் தலைமைப் பொறுப்பில் நியமிக்கப்பட்டிருந்தார்கள். இருவருமே போட்டி போட்டுக் கொண்டு முதல் மார்க் வாங்கினார்கள். படிப்பிலும் பொது அறிவிலும் கெட்டிக்காரர்கள். புத்திசாலிகள் என்பதால் கிட்டதட்ட ஒன்றாகவே மதிப்பெண்கள் அமைந்து போகும்.

இது தவிர இரண்டு பேரும் நன்றாகப் படிக்கிறவர்கள் என்ற காரணத்தினாலேயே பள்ளியில் எது நடந்தாலும் ஆசிரியர்கள் அவர்கள் இருவரையும் ஒன்றாக நியமிப்பார்கள். பட்டிமன்றமா? அமுதா-பாஸ்கரன், பேச்சுப் போட்டியா, பாஸ்கரன்-அமுதா. இலக்கியக் கட்டுரையா, அமுதா-பாஸ்கரன், பள்ளிக்கு வருகை தரும் முக்கியப் புள்ளிகளை வரவேற்க வேண்டுமா...வரவேற்புரை அமுதா என்றால் நன்றி நவிலல் பாஸ்கரன்.

அதனால் அவர்களை எங்கு ஒன்றாகப் பார்த்தாலும் யாருக்கும் தப்பு தோன்றாது. எப்போது பேசினாலும் பள்ளிக்கூட விஷயமாக விவாதிப்பதாக நினைப்பார்களே தவிர வேறு எதுவும் நினைக்க மாட்டார்கள். இதனால் பாஸ்கரனுக்கு அமுதாவிடம் பேச நிறைய சந்தர்ப்பம் கிடைத்தது. நன்றாய் பழகுகிற வாய்ப்பு ஏற்பட்டது. அந்த வாய்ப்புகளும், அமுதா-பாஸ்கரன் பாஸ்கரன்-அமுதா என்று எழுதப்பட்ட பெயர்களும் அவனுக்குள் ஆழமானதோர் பாதிப்பை ஏற்படுத்தின.

பாதிப்பு அதனால் மட்டும் தான் என்று சொல்லிவிட முடியாது. முதல் முதலாக என்று அமுதா வகுப்பறைக்குள்



நுழைந்தாளோ அன்றே-அவளது அந்தத் தோற்றத்திலேயே சத்தமாகக் கிடைத்த அவனது மனதில் அழுத்தமானதோர் கீறல் விழுந்தது. எல்லாரையும் போல் அவனும் அவளை அடிக்கடி திரும்பிப் பார்த்தான். 'இப்படிக்கூட ஓர் அழகா...' என்ற பிரமிப்பில் பேச்சு எழாமல் கிடந்தான்.

அவளது நிறமும், கருகருவென்று நீளமாய் கால் முடியைத் தொட்ட கூந்தலும், தலைக்குக் குளித்து தளரப் பின்னியிருந்தால் காற்றில் கலைந்து முகத்தில் விழுந்து கொஞ்சும் நேர்த்தியும், கூர்மையான மூக்கும், பளபளக்கும் விழிகளும், ஈரத்தில் மின்னும் உதடுகளும், அளவான உயரமும் வாகான உடம்பும்...

'இப்படிக்கூட ஓர் அழகா!' என்று உள்ளுக்குள் மாய்ந்து மாய்ந்து போனான் அவன். 'யார் இவள்...? இத்தனை நாள் எங்கிருந்தாள்...? எங்கே-படித்தாள்...? ஏன் என் கண்களிற் படாமற் போனாள்...? பெயர் என்னவாக இருக்கும்...?'

அவன் யோசித்துக் கொண்டிருந்த போதே வகுப்பாசிரியர் உள்ளே வந்தார். வரிசையாக ஒவ்வொருவராக எழுந்து நின்று அறிமுகப்படுத்திக் கொள்ளச் சொன்னதும் பாஸ்கரன் அவளது முறைக்கு படபடக்கும் மனதோடு காத்திருக்க,

''அமுதா!''

மெலிதாய் வீணையின் தந்தியை மீட்டினாற் போல வந்த அந்தக்குரல் நரம்புகளில் பாய்ந்து சிலிர்க்க வைக்க அவன் அவள் யாராக இருக்கும் என்பதை ஊகிப்பதில் இறங்கினான்.

அவள்து அகலக் கரையிட்ட பட்டுப்பாவாடையும், காதில் ஜொலித்த வைரக் கம்மல்களும், கழுத்தை ஒட்டி ஓம் எழுத்து பொறிக்கப்பட்ட சங்கிலியும், கை வளையல்களும் விரல்களின் மோதிரங்களும் நின்ற தோரணையும் பேச்சின் பாவனைகளும் பெரிய இடத்தைச் சேர்ந்த பெண் என்பதை உணர்த்த சட்டென்று குனிந்து தன்னைப் பார்த்துக் கொண்டான் பாஸ்கரன்.

வீட்டில் துவைத்து மடித்து இஸ்திரிக்குப் பதிலாக டிரங்குப்பெட்டிகளின் கீழ் வைக்கப்பட்ட சாதாரண சட்டை, பாண்ட், காலில் பழைய செருப்பு, பெயருக்குப் பொட்டுத் தங்க மற்ற உடம்பு, அதனால் அவனோடு ஒப்பிட்டுப் பார்த்து சந்தோஷப்பட முடிந்ததெல்லாம் அவனது அழகிற்குச் சற்றும் குறைவுபடாத எடுப்பான தோற்றம் ஒன்று மட்டும் தான். அவன் சந்தன நிறம் என்றால் அவன் சிவப்பு கலந்த வெள்ளை. கவர்ச்சிகரமான நல்ல முகம். அதை இன்னும் அழகாய்க் காட்டும் முன் நெற்றியில் இயல்பாய் வந்து விழும் கற்றை முடி. நல்ல உயரம். அதற்கேற்ற உடல் வாகு. பதினேழு வயதில் இருபத்திரண்டு, இருபத்தி மூன்று வயது வாலிபனாகத் தோற்றமளிக்கச் செய்த உருவம்...

அந்தப் பள்ளிக்கூடத்தில் அதுவரை அவன்தான் ஹீரோ. படிப்பில் மட்டும்தான் முதல் என்றில்லாமல் எல்லா விளையாட்டுப் போட்டிகளிலும் அவனே முதலாக வருவான். அந்த உருவத்திற்கும், களையான முகத்திற்கும், புத்திசாலித் தனத்திற்கும் அவனோடு ஒரு வார்த்தை பேசுவதற்குத் தவம் கிடந்த பெண்கள் அநேகம். அவனுடன் பழகக் காத்திருந்த பெண்கள் அநேகம். பள்ளிக்கூடத்திலேயே கூட அத்தனை மாணவிகளும் எதாவது ஒரு காரணத்தை வைத்து- அல்லது காரணத்தைத் தாங்களாக ஏற்படுத்திக் கொண்டு வேண்டு மென்றே வந்து பேசிவிட்டுப் போவார்கள். பின்னர் ''இன்னிக்கு பாஸ்கர் என்கிட்டே பேசிச்சே...'' என்று சொல்லிச் சொல்லி பெருமை பட்டுக் கொள்வார்கள்.

அத்தனைக்கும் அவன் ஒதுங்கி இருப்பான். இயற்கையான கூச்ச சுபாவம் காரணமாகத் தள்ளி நிற்பான். தன்னைச் சுற்றி தானே ஒரு வட்டத்தை ஏற்படுத்திக்கொண்டு விலகியே பழகுவான். அவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தவன், சுலபமாக யாராலும் ஈர்க்கப்பட முடியாதவனாக இருந்தவன் அமுதாவின் முதல் தோற்றத்தில்-அவளது ஒரே பார்வையில் கரைந்து ஒன்றுமில்லாமற் போனதை நினைத்து



அவனே ஆச்சரியப்பட்டுக் கொண்டான். அமுதாவோடு பேசவேண்டும், அவளோடு பழக வேண்டும் என்கிற தவிப்பு நாளுக்கு நாள் அதிகமாகி அவளைப் பார்க்காமல் ஒரு நாள் கூட இருக்க முடியாது என்ற நிலைமைக்கு வந்தபோதுதான் அவன் தன் மனத்தை அவளிடம் தெரியப்படுத்துகிற முடிவிற்கு வந்திருந்தான். அதுவும் அன்று காலை பள்ளிக் கூடம் போன உடனே அவளுக்கு சிவப்பு ரோஜாப்பூ ஒன்றைக் கொடுத்து—

தான் எங்கோ படித்த ஒன்றை சொல்ல ஆசைப்பட்டான் ''நீ பிரான்ஸ், பாரீஸ் எல்லாம் போயிருக்கியா அமுதா...''

''ம்ஹூம். இன்னும் மெட்ராசுக்கே போனதில்லை, அப்புறம்தானே லண்டனும், பாரீசும்...''

''நான் கூடப் போனதில்லை. ஆனால் கேள்விப் பட்டிருக்கேன்...''

''எதைக் கேள்விப்பட்டிருக்கே பாஸ்கர்...?''

''பிரான்ஸிலும், பாரீஸிலும் ஒரு ஆண் ஒரு பெண்ணுக்கு சிவப்பு ரோஜாவைக் கொடுத்தால் என்ன அர்த்தம்னு கேள்விப்பட்டிருக்கேன்...''

''என்ன அர்த்தம்...?''

''அவன் அவளைக் காதலிக்கறான்னு அர்த்தம். கல்யாணம் செய்துக்க ஆசைப்படறான்னு அர்த்தம்...''

''ச் சீ...!'' தன் கை ரோஜா அவள் கன்னங்களுக்கு மாறுகிற அழகை ரஸித்துக் கொண்டே சொல்ல ஆசைப் பட்டான்.

''நிஜமாகத்தான் அமுதா. தான் ஒரு பெண்ணை நேசிக் கிறதை இப்படித்தான் அங்கே தெரியப்படுத்துவாங்க. அந்தப் பெண்ணும் அவனை நேசிக்கிறாள்னால் அந்த சிவப்பு ரோஜாவை வாங்கி தலையில் கிளிப் போட்டு செருகிக் கொள்வாள். அதனாலதான் நான் இன்னிக்குப் பாடுபட்டு

எங்கெங்கோ தேடியும் சிவப்பு ரோஜா கிடைக்காததால் இந்தக் காகித ரோஜாவை சிவப்பு வர்ணமடிச்சுக் கொண்டு வந்திருக்கேன். நீ இதைத் தலைல வச்சுக்கிற அழகைப் பார்க்கணும்னு ஓடி வந்திருக்கேன். நீ இதை தலைல வச்சுக்கிட்டா நீயும் என்னை விரும்பறேன்னு அர்த்தம்...நேசிக்கிறேன்னு அர்த்தம். வச்சுக்க அமுதா...''

இவை அனைத்தும் கனவாய்ப் போகிற மாதிரி—கற்பனை என்கிற மாதிரி—எல்லாவற்றிற்கும் மேல் அபசகுனமாக அமுதா வராததை அவனால் தாங்கிக் கொள்ள முடியாமற் போயிற்று.

முதல் மணி அடித்து, பிரார்த்தனை கூட்டத்தில் கடவுள் வணக்கம் பாடுவதும் பின்பு தலைமை ஆசிரியர் ஏதோ சொல்வதும் கேட்க—இவன் பள்ளியின் வாசற் கதவருகிலேயே இன்னமும் நம்பிக்கையோடு காத்துக் கொண்டிருந்தான். தூரத்தில் வண்டி வருகிற ஓசையும், மாட்டு சலங்கையும் கேட்கிற பிரமையில் முகம் பளிச்சிட்டு தலையை உயர்த்திப் பார்த்து இரண்டு மூன்று முறை ஏமாந்து போனான். கடைசியில் முதல் வகுப்பு ஆரம்பிக்கும் தருணத்தில் இனி அவள் வரமாட்டாள் என்பது நிச்சயமாய் பிடிபட்ட பின்னரே அவன் வகுப்பிற்குத் திரும்பினான்.

அன்று முழுதும் வகுப்பு வெறிச்சிட்டுக் கிடக்கிற பிரமையில் ஆசிரியர்கள் நடத்தின எந்தப் பாடமும் காதில் விழாதவனாக எங்கோ தூரத்தில் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்க ஆசிரியர் இரண்டு மூன்றுமுறை அவன் பெயரைச் சொல்லிக்கூப்பிட்டார். பதில் வராது போகவே தானே இறங்கி அவனருகில் தோளைத்தொட அவன் திடுக்கிட்டு தலையை உலுப்பி விட்டுக்கொண்டு திரும்பி அவரை வெறுமையாகப் பார்த்தான். பின் சட்டென்று நினைவிற்கு வந்தவனாக எழுந்து நின்றான். அவன் முகமும் பார்வையும் சரியில்லாததைக் கவனித்துக்கொண்டே அந்த ஆசிரியர் கேட்டார்.



''என்ன ஆச்சு இன்னிக்கு உனக்கு பாஸ்கர்...? நான் மூணு நாலு தரம் கூப்பிட்டும் பதில் வரலை...?

''ஒண்ணுமில்லே சார்...'' என்று மெள்ளத் தலை குனிந்தான்.

''ஒண்ணு மில்லேன்றே...ஆனால் உன் முகமே சரியில்லை... என்னப்பா விஷயம்...தயங்காம சொல்லுப்பா...''

''ஒண்ணுமில்ல சார். ராத்திரியிலேருந்து காய்ச்சலா இருந்துச்சு. இப்போ ரொம்பத் தலையை வலிக்குது சார்...''

''காய்ச்சல்னால் ஏம்ப்பா ஸ்கூலுக்கு வந்தே...?'' என்று அவன் கழுத்தில் கைவைத்துப் பார்த்த ஆசிரியர் சொன்னார்.

''இப்போ உடம்பு சுடலை. ஆனால் தலைவலின்னு சொல்ற. முகமும் பார்வையும் அத்தனை சரியாயில்லை. பேசாமல் ஹெட் மாஸ்டர் கிட்டே சொல்லிட்டு பர்மிஷன் வாங்கிட்டு வீட்டுக்குப் போய் படுத்துக்கப்பா...''

''இல்ல சார் வேணாம்...''

''சொல்ற பேச்சைக் கேளு பாஸ்கர். கொஞ்சம் ரெஸ்ட் எடுத்தியானால் எல்லாம் சரியாப் போகும்...''

''இல்ல சார்... என்னால் வீடு வரை நடக்க முடியாது சார்...''

''நான் சைக்கிள் தரேன் பாஸ்கர். சைக்கிள்ல போ. நாளைக் காலைல ஸ்கூலுக்குக் கொண்டு வந்துடு'' என்று தானாகவே எழுந்து ஒரு பையன் சொல்ல ஆசிரியர் அந்தப் பையனிடமிருந்து சைக்கிள் சாவியை வாங்கிக் கொடுத்து,

''ம்...கிளம்பு...'' என்றார்.

அவன் யோசனை செய்தவாறு புத்தகங்களை எடுத்துக் கொண்டு தலைமை ஆசிரியரின் அனுமதி பெற்று நண்பனின் சைக்கிள் காரியரில் புத்தகங்களை வைத்து சைக்கிளைத்

தள்ளியபடி வெளியில் வந்த போது அவனுக்கு வீட்டுக்குப் போகப் பிடிக்கவில்லை. அமுதாவைப் பார்க்க வேண்டுமென்ற வெறி அதிகமாயிற்று. சட்டைப் பையில் இருந்த காதித சிவப்பு ரோஜவைத் தொட்டுப் பார்த்துக்கொண்டான். நேராக அமுதாவின் வீட்டிற்கே போனால் என்ன என்று தோன்றிற்று ஒரு வகுப்பில் படிக்கிற உரிமையில், வகுப்பு லீடர் என்கிற சலுகையுடன் போவதில் என்ன தப்பு இருக்க முடியும்...?

போய்ப் பார்த்து சந்தர்ப்பம் கிடைத்தால் ரோஜவைக் கொடுத்து சொல்ல வேண்டியதையும் சொல்லிவிட்டே வந்து விடலாமே—மனதிற்குள் இப்படித் தவிப்பதை விட அது நல்லது...

முடிவு செய்தவனாக அவன் சைக்கிளில் ஏறி மிதித்தான். வண்டிக்கார முனுசாமியை சிநேகிதம் பிடித்து வழி கேட்டுக் கொண்டது அப்போது உதவிற்று. யாரிடமும் விசாரிக்காமல் ஒற்றையடிப் பாதையின் குறுக்கு வழியாக மிதித்து, மாந்தோப்பைக் கடந்து, ஏரிக்கரையின் வழியாக ஓட்டி ஊருக்குள் போகாமல், வயற்காட்டு வழியாக அமுதாவின் வீட்டை நெருங்கினான். வீட்டை விட்டுச் சற்று தள்ளி எதிர்ப்புறமிருந்த புளிய மரத்தடியில் நின்று பார்க்க பிரமித்துப் போனான்.

அவன் வசிக்கிற தெரு நீளத்திற்கு இருந்தது அந்த வீடு. முன்புறம் சார்ப்பு வேய்ந்த காரைத் தரையில் பெஞ்சு போடப் பட்டு நிறைய பேர் உட்கார்ந்திருந்தார்கள். கீழண்டை, வாயிலும், மேலண்டை வாயிலுமாக ஆட்கள் போய் வந்து கொண்டிருந்தனர். ஒரு பெண்ணின் தலை கூடத் தென்படாத அந்தக் கூட்டத்தில நுழைந்து எப்படி அமுதாவைக் கேட்பது என்கிற பயம் ஏற்பட்டது. உட்கார்ந்திருந்த ஆட்களின் பணக்காரக் களையும், தோரணையும் மருட்ட பாஸ்கரன் என்ன செய்வதென்று புரியாமல் மரத்தடியில் சைக்கிளை ஸ்டாண்ட் போட்டு நிறுத்தி சரிந்து நின்று யோசித்தான்.



கை சட்டைப் பையின் ரோஜாவைத் தொட்டுப்பார்த்துக் கொண்டது. 'எப்படி அமுதாவைப் பார்ப்பது...? ரோஜாவைத் தருவது...? எப்படிப் பேசுவது...?'

அவன் நின்று கொண்டிருந்தபோது கீழண்டை வாசலினின்று முனுசாமி வெளியில் வருவது தெரிய இவன் சட்டென்று முகம் மலர்ந்தான். யார் கவனத்தையும் திருப்பாமல் மெலிதான குரலில் அவனைக் கூப்பிட்டான். அந்த இடத்தில் பாஸ்கரைச் சற்றும் எதிர்ப்பார்க்காத முனுசாமி ஒரளவு அதிர்ச்சியடைந்தவனாக அருகில் போய்,

''என்ன தம்பி இவ்வளவு தூரம்...?'' என்று கேட்டான்

இவன் உமிழ் நீரை விழுங்கியபடி ''அமுதா இல்லே...?'' என்று பதில் கேள்வி எழுப்பினான்.

''சின்னம்மா உள்ளார இருக்காங்க... என்ன விஷயம்...''

''இப்போ நான் பார்க்கணுமே...வாத்தியாரு ஒரு விஷயம் சொல்லீட்டு வரச் சொன்னாரு. படிப்பு சம்பந்தமாகத்தான்...''

''வீட்ல விசேஷமாச்சே தம்பி. நிறைய மனுஷாள் வந்திருக்காங்க... இப்போ போய் கூப்பிட்டால் எப்படி தம்பி...''

''அதுக்குத் தயக்கப்பட்டுக்கிட்டுத்தான் நானும் இங்கேயே நிக்கறேன். நீ ஒரு உதவி செய் முனுசாமி. உள்ளே போய் அமுதா கிட்ட நான் வந்திருக்கிற விஷயத்தை யாருக்கும் தெரியாமல் சொல்லு. முடிஞ்சா நீ வந்த வாசல் வழியா ஒரு நிமிஷம் தலையைக் காட்ட சொல்லு... விஷயத்தைத் தெரிவிச்சுட்டு நான் போயிடறேன்...''

''ஐயயோ...பெரிய பண்ணைக்குத் தெரிஞ்சால் கொன்னுடுவாரு தம்பி...''

''எதுக்குக் கொல்லணும்? வாத்தியாரு அனுப்பித் தானே நான் வந்திருக்கேன். முக்கியமான விஷயமானதால் தானே வாத்தியாரு அனுப்பியிருக்காரு...''

''அப்போ நீயே உள்ள போயி சொல்லிடேன் தம்பி...''

''அட என்னப்பா நீ...அது முடியும்னால் நான் ஏன் இங்கே நிக்கறேன், உன் உதவியைக் கேட்டு கெஞ்சப் போறேன்? இந்த மாதிரி பணக்கார வீட்டுக்குள்ள நுழைஞ்சு எனக்குப் பழக்கமில்லேப்பா... பழக்கமில்லாதது மட்டுமில்லாமல் மனசுக்குப் பிடிக்கவும் இல்லே... நீ கூப்பிட்டியானால் சொல்லிட்டு இப்படியே திரும்பிப் போயிடுவேன்...''

முனுசாமி ஒரு வினாடி யோசித்துப் பின் ''இரு. இதோ உள்ள போய் பார்த்திட்டு வரேன்...'' என்று திரும்பிப் போக இவன் விரல் நகங்களைக் கடித்தபடி நின்றிருந்தான்.

முனுசாமி கீழண்டை வாசல் வழியாக உள்ளே நுழைந்து முற்றத்தைக் கடக்கும் முன்னர் உள்ளேயிருந்து பட்டு வேஷ்டியின் சலசலப்போடு ராஜா வெளிப்பட்டான். ராஜாவைப் பார்த்துப் பயந்து முனுசாமி தயங்கி நிற்க, அவனது முகபாவம் தன்னைக் கண்டு வெளிறியதை கவனித்த ராஜா அருகில் போய் ''என்ன முனுசாமி?'' என்று விசாரித்தான்.

அவன் மென்று விழுங்கித் தடுமாறும் குரலில் ''ஒண்ணுமில்லீங்க...'' என்று இழுக்க, அவன் சொன்ன விதத்திலிருந்தே எதையோ மறைக்க முயலுவதைப் புரிந்து கொண்ட ராஜா விடாமற் கேட்டான்.

''நீ ஒண்ணுமில்லேன்ற போதே ஏதோ இருக்குதுன்னு தெரியுது. என்ன விஷயம் சொல்லு...?''

அதற்கு மேல் மறைப்பது ஆபத்தாக முடியும் என்பதால் சட்டென்று நிஜத்தைச் சொல்ல ஆரம்பித்தான் முனுசாமி.

''வந்து... சின்னம்மா கூட படிக்கிற ஒரு புள்ளை வாசல் புளியமரத்தடியில் வந்து நின்னுட்டிருக்குங்க, வாத்தியாரு



ஏதோ சொல்லியனுப்பினாருன்னு சின்னம்மா கிட்ட பேச வந்திருக்குதுங்க...''

''அப்போ ஏன் வாசல்ல நிற்கணும்...? உள்ள வர வேண்டியது தானே...?''

''உள்ள வரப் பயந்துகிட்டுத் தான் அங்கேயே நிற்குது...''

''சரி... நான் போய் அவரைக் கூப்பிட்டு கீழண்டை வாசல் திண்ணையில் உட்கார வைக்கிறேன். நீ போய் அமுதாவை நான் கூப்பிடறேன்னு கூட்டிட்டு கீழண்டை திண்ணைக்கு வா...''

''சரிங்க...'' என்று முனுசாமி உள்ளே போக ராஜா கீழண்டை வாசலைப் பார்க்க நடந்தான்...

## 6

கன்னங் கரேலென்று இருந்தாலும் நல்ல உயரமும், பரந்த மார்புமாய் கம்பீரமாகத் தெரிந்த ஒருவன் முனுசாமி போன அதே வாசலில் வந்து நின்று தன்னைக் கையசைத்துக் கூப்பிட்டதும் சட்டென்று பாஸ்கரனின் மனதைப் பயம் கவ்விக் கொண்டது. முனுசாமி அமுதாவிடம் சொல்வதற்கு பதில் இவனிடம் சொல்லிவிட்டதைப் புரிந்து கொண்டான். யார் இவன் என்ற கேள்வி எழ மெல்ல அவனை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

'ஒருவேளை அமுதாவின் அப்பாவாக இருக்குமோ...' என்று தோன்றியது. சீ! அமுதாவின் அப்பா இவ்வளவு இளைஞராகவா இருப்பார் என்று தானே மறுத்துக் கொண்டான். 'பின், அவளுடைய அண்ணனோ...? ம்ஹூம். இருக்காது. அத்தனை நிறமாக இருப்பவளுக்கு இந்தக் கரிக்கரும்பில் அண்ணன் இருக்க முடியாது. இவன் வேறு யாராவது தூரத்து உறவினனாக இருப்பான். அல்லது வீட்டு மேனேஜர். [illegible] என்றிருக்கும்...!'

புளிய மரத்தடியிலிருந்து வாசலை நெருங்குவதற்குள் இத்தனையும் நினைத்து முடித்து விட்டான் பாஸ்கரன். அருகில் போய் ராஜாவின் முகத்தைப் பார்த்ததும் சட்டென்று மனதிற்குள் ஓர் ஆச்சரியம் ஏற்பட்டது. கறுப்பானாலும் எவ்வளவு அழகாக இருக்கிறான் இவன்!

வாளால் கீறிக்கீறி வைத்த மாதிரி மூக்கும், கண்களும் எவ்வளவு லட்சணம்! கூடவே அவனுக்கு பெருமாள் கோவில் களில் பார்க்கும் ராமன், கோவிந்தராஜன் போன்ற மூல விக்கிரகங்களின் நினைவு வந்தது. அதே முகமும், உடல் வாகுமாய் நிற்கிற இவன் யார்...? இந்தக் கருப்பிற்கு இவன் சிரிப்பது எத்தனை கவர்ச்சிகரமானதாக இருக்கிறது...!

அவனது எண்ண ஓட்டத்தை அறியாத ராஜா புன்முறுவ லோடு மரியாதை குறையாமல் வரவேற்றான்.

''வாங்க... ஏன் வீட்டுக்குள்ள வராமல் அங்கேயே நின்னுட்டீங்க... இதோ அமுதாவுக்குச் சொல்லியனுப்பி இருக்கேன்... வந்திடுவா...''

அந்த வரவேற்பை எதிர் பார்க்காத பாஸ்கரன் திணறிப் போனான்.

எதிரில் நின்றவனது புன் சிரிப்பும், மரியாதையும், கண் ணியமும் இவனைத் தலை குனியச் செய்ய வார்த்தைகள் தடு மாற்றத்துடன் வந்தன.

''வந்து... வந்து... வாத்தியார் அமுதா கிட்டே நோட்டுப் புஸ்தகம் ஒன்று கேட்டு வாங்கிட்டு வரச் சொன்னாரு...''— கை அவனையும் அறியாமல் சட்டைப் பை ரோஜாவைத் தொட்டுப் பார்த்துக் கொண்டது.

''ஓ... அப்படியா... அதுக்கா இவ்வளவு தூரம் வந்தீங்க...? உட்காருங்க... என்ன சாப்பிடறீங்க? காபி, டீ ஏதாவது தரச் சொல்லட்டுமா...?''

''ம்ஹூம், வேணாம்...''



''மோர்...''

''அதுவும் வேணாம்...''

ராஜா கேட்டுக் கொண்டிருந்த போதே அமுதா உள்ளே யிருந்து வந்தாள். பட்டுப் புடவையும், தலைநிறைந்த பூவும், உடம்பு கொள்ளாத நகைகளுமாக அவளைப் பார்த்ததும் பாஸ்கரின் கண்கள் அகன்றன. கல்யாணப் பெண் மாதிரி எத் தனை அழகாக இருக்கிறாள் என்ற பிரமிப்பில் கண் கொட்டா மல் சில வினாடிகள் அவளையே பார்த்தவன் அவள் முகத்தில் தெரிந்த கேள்விக் குறியையும் கவனித்தான்.

அவனைச் சிறிதும் எதிர்பார்க்காத அமுதா மிக மிக ஆச்சரியமாகக் கேட்டாள்.

''பாஸ்கர், நீயா... எப்போ வந்தே...?''

''இப்போதான், பத்து நிமிஷத்துக்கு முன்னாலே...?'' உட்கார்ந்திருந்தவன் எழுந்து திண்ணையின் மரக்கம்பத்தில் சரிந்து நின்று கொண்டான். எதிரில் நின்றிருந்த ராஜா உள்ளே போகமாட்டானா என்று காத்திருந்தான். அமுதாவை யும் ராஜாவையும் சேர்த்துப் பார்த்த போது தான் படித்த ஷேக்ஸ்பியரின் ஒத்தல்லோ டெஸ்டிமோனோவின் ஞாபகம் அவனையும் மீறி வந்தது. இந்தக் கருப்பன் எப்போ உள்ளே போவான், அமுதாவிடம் சிவப்பு ரோஜாவைக் கொடுக்க லாம்...? என்று தோன்றிற்று. ஆனால் ராஜா உள்ளே போகிறவனாகத் தெரியவில்லை.

''எப்படி வந்தே பாஸ்கர்...?''

''சைக்கிள்ல...''

''சைக்கிள் எங்கே...?''

''அதோ அந்த மரத்தடியில...''

இந்த சந்தர்ப்பத்தில் ராஜா குறுக்கிட்டு புன்னகை மாறா மல் சொன்னான்.

''உன்னோட கிளாஸ்மேட் உன்னைப் பார்க்க வந்திட்டு வீட்டுக்குள்ள வராமல் எதிர் புளிய மரத்தடியில் போய் நின்னுட்டிருக்காரு. முனுசாமி கிட்டே உன்னைக் கூப்பிடச் சொல்லியனுப்பினாரு. எதேச்சையா நான் முனுசாமி கிட்ட விசாரிக்கப் போக இவரு மரத்தடியில் காத்துக்கிட்டிருக்கிறது தெரிஞ்சது. உடனே உனக்குத் தெரிவிக்கச் சொல்லி இவரைக் கூப்பிட்டு உட்காரச் சொன்னேன்...''

''ஏன், எதிர் புளிய மரத்தடியில் நிக்கணும் பாஸ்கர்? நேரா வீட்டுக்கு வரவேண்டியது தானே...!''

அவன் பதில் பேசாமல் இருக்க ராஜா சொன்னான்.

''நான் காபி, டீ சாப்பிட றீங்களான்னு கேட்டேன். வேணாம்னு தலையாட்டிட்டாரு. நீயாவது கேட்டு எதாவது கொடு அமுதா...''

''இல்லீங்க...வேணாம்...காபி, டீ யெல்லாம் அதிகப் பழக்கமில்லே...''

''அப்போ மோர் குடி...''

''வேணாம்னால் விட மாட்டீங்க போல் இருக்கு...சரி கொடுங்க...''

அவன் ஒரு வேளை ராஜா உள்ளே போவானோ என்று நினைக்க அமுதா தானே போய் ஒரு நிமிஷத்துக்கெல்லாம் வெள்ளி டம்ளர் மோருடன் திரும்பி வந்தாள். பெரிய டம்ளர் மோர். வெயிலில் வந்த களைப்பிற்கு அந்த மோர் இதமாகத் தெரிந்தாலும் வந்த காரியம் நிறைவேறாத காரணத்தால் அவனுக்கு அது கசந்து போயிற்று. மோர் டம்ளரைத் திருப்பிக் கொடுத்ததும் அமுதா கேட்டாள்.

''என்ன காரியமா வந்தே பாஸ்கர்...''

''இன்னிக்கு நீ ஏன் ஸ்கூலுக்கு வரலே அமுதா...?''

அதைக் கேட்டுச் சிரித்தாள் அவள்.



''அதைக் கேட்கவா இவ்வளவு தூரம் வந்தே...?''

''இல்லே...ஏன் வரலேன்னு சாதாரணமாத்தான் கேட்டேன்...''

அதற்கு ராஜா பதில் சொல்ல வாயெடுக்க சட்டென்று குறுக்கிட்டு அவசரமாகச் சொன்னாள் அவள்.

''வீட்லே ஒரு விசேஷம். வரமுடியலை. அவ்வளவு தான்...''

''நீ வந்திருந்தியானால் எல்லாம் சுலபமாய்ப் போயிருக்கும்! நான் இவ்வளவு தூரம் வரவேண்டிய தேவையே இருந்திருக்காது...''

''நீ வந்தது சந்தோஷமாக இருக்கு பாஸ்கர்...'' என்று அவள் சொன்ன பதிலில் அவனது முகம் பழைய பளிச்சிடலுக்கு வந்தது. 'நிஜமாகவா அமுதா...?' என்று கேட்க வந்து சட்டென்று நிறுத்திக் கொண்டான்.

''எதுக்கு வந்தேன்னு இன்னும் சொல்லவே இல்லையே பாஸ்கர்...?''

''அது...அது வந்து...தமிழ் வாத்தியார் உன்கிட்ட தமிழ் புத்தகம் ஒண்ணு கொடுத்தாராமே...அதை வாங்கிட்டு வரச் சொன்னாரு. நோட்ஸ் எழுதிப் போடணுமாம்...''

''இல்லையே...என்கிட்ட புஸ்தகம் ஒண்ணும் தரலியே அவர்...''

''தரலியா...பின்னே என்னை ஏன் இத்தினி தூரம் அனுப்பினாரு...''

''வேற யார் கிட்டேயும் கொடுத்திட்டு மறந்துபோய் என் கிட்டேன்னு சொல்லியிருப்பாரு...''

''ச்சூ...அதுக்காக என்னை இவ்வளவு தூரம் விரட்டினாரே...'' என்று நிஜமாக வருத்தப்படுகிற மாதிரி முகத்தை வைத்துக் கொள்ள ராஜா குறுக்கிட்டுச் சொன்னான்.

''அதனால என்ன, வந்திட்டீங்க...இருந்து சாப்பிட்டு விட்டுப் போகலாம்.''

''ஐயோ இல்லீங்க. ஸ்கூலுக்குத் திரும்பிப் போகணும், ஏற்கெனவே ரெண்டு மூணு பீரியட் போயிருக்கும்'' என்றவன் ''அப்போ வரேன் அமுதா. நாளைக்கு நீ ஸ்கூலுக்கு வருவாய் இல்லையா...?''

''கட்டாயம் வருவேன்...''

''சரி...நாளைக்குப் பார்க்கலாம். வரேன்...சார்...'' என்று ராஜாவிற்குக் கை கூப்பி ''வரேன் அமுதா...'' என்று விடைபெற்று சைக்கிள்வரை நடந்து ஸ்டாண்டை விலக்கி ஏறி மிதித்தபோது கை மீண்டும் சட்டைப்பை ரோஜாவைத் தொட்டுப் பார்த்துக்கொணடது. மறுநாள் எப்படியும் அதைக் கொடுத்துவிட முடிவு செய்தான்.

ரோஜாவைக் கொடுக்க முடியாது போனாலும் அவளைப் பார்த்த மனதிருப்தியிலும், சந்தோஷத்திலும் சைக்கிளை வேகமாக மிதிக்கத் துவங்கினான்.

வீட்டிற்குள் திரும்பிய ராஜா அமுதாவிடம் கேட்டான்.

''ஏன் அமுதா? இன்னிக்கு நமக்குக் கல்யாணம் நிச்சயமாகித் தாம்பூலம் மாற்றின விஷயத்தை அந்தப் பையன் கிட்டே சொலலாமல் வீட்டுல விசேஷம்னு மழுப்பிட்டே...?''

கன்னங்களில் சிவப்பு ஏற தலையைக் குனிந்து கொண்ட அவள்,

''வேணும்னுதாங்க சொல்லலை. தெரிஞ்சால் கேலி பண்ணித் தீர்த்திடுவாங்க. கல்யாணம் வரை நான் யார்கிட்டேயும் சொல்றதாக இல்லை...''

## 7

மறுநாள் காலையில் புத்தகங்களை அடுக்கி வைத்துக் கொண்டபோது மறக்காமல் அந்த சிவப்பு ரோஜாவை எடுத்து



சட்டைப் பையினுள் போட்டுக் கொண்டான் பாஸ்கர். பிறையினுள் கிடந்த அந்தப் பழைய சின்ன அலாரத்தில் மணி பார்த்தான், எட்டுப் பத்துதான் ஆகியிருந்தது. பள்ளிக்கூட முதல் மணி ஒன்பதரைக்குத்தான் அடிக்கும். வீட்டிலிருந்து பள்ளிக் கூடம் போக அதிக பட்சமாகப் பத்து நிமிடம்தான். இப்போது கிளம்பினால் எட்டு இருபது, இருபத்தைந்திற்கெல்லாம் போய் விட முடியும். அவ்வளவு சீக்கிரம் போவதால் எந்த வித லாபமுமில்லை. அமுதா சரியாக ஒன்பது மணிக்குத்தான் வருவாள். அதுவரை கிட்டத் தட்ட ஒரு மணி நேரம் அவளுக்காகக் காத்துக் கொண்டிருப்பதை விட நரகம் வேறு இல்லை. வண்டிச் சக்கரங்கள் மணலைப் பொடிக்கிற ஓசைக்கும், சலங்கை சத்தத்திற்கும் ஏக்கப்பட்டு நின்றிருக்கிற கொடுமையை நிறைய நாட்கள் அனுபவித்திருக்கிறான். ஆனால் அப்போதைய மனநிலையில் ஒவ்வொரு வினாடியும் யுகமாகத் தோன்றி வேதனைப் படுத்தும் என்பதால் அவன் பள்ளி வாசலில் காத்திருக்கப் பிரியப்படவில்லை. என்ன செய்யலாம் என்பதை யோசித்த போது சட்டென்று ஒரு யோசனை தோன்றிற்று. வண்டி வருகிற பாதி வழியில் போய் நிறுத்தி அதில் ஏறிக்கொண்டு கூடவே பேசியபடி வந்தால் என்ன...? அதிலும் ஒரு சங்கடம் இருப்பது புலப்பட்டது.

முனுசாமி இருப்பான். அவனெதிரில் ஒன்றும் பேச முடியாது. அதைவிட சரியாக எட்டே முக்காலுக்குக் கிளம்பி வழக்கப்படி பள்ளிக்கூட வாசலில் காத்திருப்பதுதான் சரி...

அவன் யோசித்து முடிவிற்கு வந்த போது மணி எட்டு இருபதாகி இருந்தது. இன்னும் இருபது இருபத்தைந்து நிமிடங்கள் தான் எதையாவது படிக்கலாமென்றால் படிப்பில் புத்தி சொல்லவில்லை. பேசாமல் உட்கார்ந்திருப்பதும் சங்கடமாக இருக்க கையில் கிடந்த பத்திரிகையைப் புரட்டின போது.

சமையற்கட்டிலிருந்து அம்மா அவனைக் கூப்பிட்டாள்.

''டே பாசு, சாப்பாடு வச்சிருக்கேன்; சாப்பிட வாடா...''

இவன் அம்மாவின் குரல் காதில் விழாதவனாகப் பேசாதிருக்க அவள் எழுந்து வெளியில் வந்தாள்.

''டேய் என்னடா, நான் கூப்பிடறேன்—நீ பாட்டுக்குப் பேசாமல் இருக்கே..?''

திடுக்கிட்ட மாதிரித் திரும்பியவன் ''கூப்பிட்டியாம்மா?'' என்று கேட்க, அந்த அம்மாள் கோபப்பட்டாள்.

''கொஞ்ச நாளா நானும் பார்க்கறேன் என்னடா ஆச்சு உனக்கு...? பிரமை பிடிச்ச மாதிரி உட்கார்ந்திட்டிருக்க... தானா சிரிச்சுக்கற...கூப்பிட்டா காதுல வாங்கிக்க மாட்டேன்ற என்ன ஆச்சு அப்பிடி...?'

''ஒண்ணுமில்லேம்மா...''

''ஒண்ணுமில்லையா...? வயக்காட்டுப் பக்கம் போறப்ப எதையாவது பார்த்து பயந்திட்டியா...?''

''சீ...அதெல்லாம் ஒண்ணுமில்லே...''

''பின்னே காற்று கறுப்புன்னு எதாவது இருக்குமோ..?''

''ஐயோ, அதெல்லாம் ஒண்ணுமே இல்லையம்மா... என்னைக் கொஞ்ச நேரம் சும்மா விடு...''

''என் வாயை அடைச்சுப்பிடு...எனக்கு வேலை இருக்கு. நான் போறேன். நீ எழுந்திருச்சு சாப்பிட வா...''

''ம்ஹூம். எனக்கு சாப்பாடு வேணாம்...''

''சாப்பாடு வேணாமா...?''- உள்ளே போகக் காலடி எடுத்து வைத்த அந்த அம்மாள் சர்ரென்று திரும்பினாள்.

''ஏண்டா... நீ ஒழுங்கா சாப்பிட்டு எத்தனை நாளாச்சுன்னு தெயுமா...? எதுக்கோசரம் இப்படி சாப்பாடு பிடிக்காம, தூக்கம் கெட்டுத் திண்டாடற...? என்ன ஆச்சுது அப்படி... பெத்தவ கேட்கறேன் சொல்லுடா...''



''ஐயோ ஒண்ணுமே ஆகலைம்மா. பரிட்சை வருது. பெரிய கிளாஸ் படிப்பு. நல்லாப் படிக்கணுமேன்னு கவலையா இருக்குதே தவிர வேற ஒண்ணுமில்லை...''

''இப்படி உடம்பைக் கெடுத்துக்கிட்டு என்னடா படிப்பு வேண்டியிருக்கு...?''

''எழுந்து ஒரு வாய் சாப்பிட்டு விட்டுப் போ. உனக்குப் பிடிச்ச காரக் குழம்பு வச்சிருக்கேன். சின்ன கத்தரிக்காய் போட்டு. ஒரு வாய் சாப்பிட்டு விட்டுப்போ...''

அதற்கு மேலும் மறுத்து அம்மாவை சங்கடப்படுத்த இஷ்டப்படாமல் எழுந்து போனான். சாப்பிடுவதாகப் பெயர் பண்ணி விட்டு அலார டைம்பீஸின் முள்ளைப் பார்த்துக் கொண்டே இருந்து விட்டு எட்டு நாற்பத்தைத் தாண்டும் புஸ்தகங்களை எடுத்துக் கொண்டு, ''அம்மா போயிட்டு வரேன்...'' என்று குரல் கொடுத்து விட்டுப் பள்ளிக் கூடத்தை நோக்கி ஓடினான்.

இவன் பள்ளிக்கூட வாசலை அடைவதற்கும் சலங்கை சத்தத்தோடு வில் வண்டி உள்ளே நுழைவதற்கும் சரியாக இருக்க, இவன் அவசரமாக வண்டியின் அருகில் போய் அமுதா கீழே இறங்குவதற்குள் ''குட்மார்னிங்'' சொன்னான். அவளிடமிருந்து பதில் குட்மார்னிங் வாங்கிக் கொண்டு ''என்ன இன்னிக்கு நேரம் கழிச்சு வந்திருக்கே...'' என்று சம்பந்தமில்லாமல் எதையோ வாய் கேட்க, மனசு சட்டைப் பையின் ரோஜாப் பூவிலும் சொல்ல நினைத்த விஷயத்திலுமே குறியாய்க் கிடந்தது. அவனது பேச்சின் வித்தியாசம் புரியாதவளாக அமுதா முகத்தின் குழந்தைத் தனம் மாறாமலே பதில் சொன்னாள்.

''இல்லையே... தினம் வர்ற அதே நேரத்துக்குத்தானே வந்திருக்கேன்...''

''சரி இப்போ கிளாசுக்குப் போறதுக்கு முன்னால என் கூட ஒரு நிமிஷம் சயன்ஸ் லாப் (Lab) வரைக்கும் வா அமுதா.''

''என்ன விஷயம் பாஸ்கர்...?''

''புதுசா நேற்று ஒரு பரிசோதனை கற்றுக் கொடுத்தாரு சார். அதை இப்பவே உனக்கு செய்துகாட்டி விளக்கிடணும்னு தோணுது...''

''நேற்றிக்கு சயன்ஸ் கிளாஸே கிடையாதே பாஸ்கர்...'' என்று அவள் அவனை ஆச்சரியமாகப் பார்க்க அவன் நெற்றியில் வியர்வைப் பொடிகள் துளிர்க்க சாமர்த்தியமாகச் சொன்னான்.

''சயன்ஸ் இல்லை தான். ஆனால் ப்ரீ பீரியடை சயன்ஸ் மாஸ்டரு எடுத்துக் கிட்டாரு...''

''அப்படியா...?'' என்று அவளது புருவங்கள் லேசாய் சுருக்கமடைவது தெரிந்தவுடன் அதற்கு மேல் அவளை யோசிக்க விடாமல் அவசரப்படுத்தி - அழைத்துக் கொண்டு போகத் தவித்தான்.

''சீக்கிரம் வா அமுதா. பெல் அடிச்சுடப் போறாங்க...''

''பெல் அடிக்க இன்னும் இருபது நிமிஷத்துக்கு மேல இருக்குது பாஸ்கர். கொஞ்சம் இரேன். புஸ்தகங்களைக் கிளாஸ்ல வச்சிட்டு வந்துடறேன்...''

''அப்புறம் ஒரு வழியா வச்சுக்கலாம் அமுதா...முதல்ல லாப் விஷயத்தை முடிச்சுடலாம்...''

''சரி வா...'' என்றவளுடன் கூட நடந்தவாறு பேச வேண்டிய விஷயங்களை மனதில் கோர்வைப் படுத்திக் கொண்டான். சோதனைச் சாலையில் நுழைந்ததும், ''இங்கே இல்லே, அங்கே...'' என்று உள் அறைக்கு அவளை அழைத்துப் போய் வாசலை மறைக்கிற விதமாக நின்று கொண்டு உள்ளே இருந்த அவளிடம் சட்டைப் பையிலிருந்த ரோஜாவை ஒரு பதட்டத்தோடு எடுத்து நீட்டினான்.

அவனது செய்கையில் முதல் தடவையாகச் சந்தேகமும், பயமும் எழ பூவை வாங்காமல் தயங்கின அமுதா,



''என்ன இது...?'' என்றாள்.

''சிகப்பு ரோஜா. வாங்கிக்கயேன் சொல்றேன்...''

''முதல்ல சொல்லு. அப்புறம் வாங்கிக்கறேன்...'' சட்டென்று உள்ளுணர்வால் தூண்டப்பட்டு ஜாக்கிரதையானாள் அவள்.

''ம்ஹூம். நீ வாங்கிக்கிட்டாதான் சொல்வேன்...'' அவன் பிடிவாதம் பிடிக்க அவளுக்குள் சுள்ளென்று ஒரு கோபம் தோன்றியது.

''என்ன பாஸ்கர் இது...? பரிசோதனை விளக்கம்னு கூட்டிட்டு வந்து பூவை நீட்டற...?''

''முதல்ல நீ பூவை வாங்கிக்க. அப்புறம் நான் எல்லாத்தையும் விவரமா சொல்றேன். நான் என்ன பாம்பு, தேளையா நீட்டறேன். நீ இப்படிப் பயப்பட...? வெறும் பூ... அதுவும் நிஜரோஜாகூட இல்லே...சிகப்பு சாயம் தோய்ச்ச காகித ரோஜா...இதுல பயப்பட என்ன இருக்கு...?''

அவள்-தயங்கி, பின் வலது கையை நீட்டினாள்.

''சரி...கொடு.''

தந்தமாய் நீண்ட அந்தக் கரத்தில் உணர்ச்சி வசப்பட்ட அவன், அதைப் பற்றி இதயத்தில் பதித்துக் கொள்ளத் தோன்றிய ஆசையை அடக்கியபடி பூவைக் கொடுத்துவிட்டு கரகரத்த குரலில் பேசத் தொடங்கினான்.

''உனக்கு பிரெஞ்ச் வழக்கம் தெரியுமா அமுதா...?''

''நான் என்ன பிரான்சுலயா பிறந்தேன் பிரெஞ்ச் வழக்கமும் கலாச்சாரமும் தெரிஞ்சுக்க...?'' நறுக்கென்று பதில் வந்தது. ''இல்லே அமுதா, பிரெஞ்ச் வழக்கப்படி ஒருத்தன் ஒருத்திக்கு சிவப்பு ரோஜா கொடுத்தால் என்ன அர்த்தம் தெரியுமா...?''

''த்து...என்ன அர்த்தமாக இருந்தால் என்ன நான்? தெரிஞ்சுக்க ஆசைப்படலே...''

''இல்லே, நீ தெரிஞ்சுக்கனும் உனக்கு அதைத் தெரியப் படுத்தனும்னே கஷ்டப்பட்டு இந்தக் காகித ரோஜாவுக்கு சிவப்பு வர்ணம் தீட்டிக் கொண்டுவந்திருக்கேன்...''

''————''

''என்ன பேசாமல் இருக்க அமுதா...? பிரான்ஸ்ல ஒருத்தன் ஒருத்திக்கு சிவப்பு ரோஜா பரிசாகக் கொடுத்தால் அவன் அவளை நேசிக்கறான் என்று அர்த்தம்... காதலிக் கறான்னு அர்த்தம், அந்தப் பொண்ணு அதைத் தலைல சொருகிக்கிட்டா அவளும் அவனைக் காதலிக்கிறதுக்கு சம்மதமா பச்சைக் கொடி காட்டிட்டதா அர்த்தம். நான் அந்த அர்த்தத்தோட இத்தனை நாள் மனசுக்குள் வச்சு பூட்டினதை இனி மேலும் பூட்ட முடியாதுன்னு தான் சிவப்பு ரோஜாவை உனக்குக் கொடுத்திருக்கேன். நேற்றிக்கே இதைக் கொடுக் கனும்னுதான் வீட்டுக்கே வந்தேன். அந்தக் கருப்பன் பக்கத்துலயே நின்னதால் பூவைக் கொடுக்கவோ, பேசவோ முடியாமல் போய்விட்டது. அதான் இப்போ இங்கே கூட்டிட்டு வந்து கொடுத்திருக்கேன். தலைல செருகிக்க அமுதா...''

மூச்சு விடாமல் அவன் பேசப் பேச அவளுக்குள் ஒவ் வொரு வார்த்தையும் அனலாய் விழுந்து தகித்தது. அதிர்ச்சி யிலும், கோபத்திலும் உடம்பு பதறிற்று. ஜிவு ஜிவுவென்று ரத்தம் முழுதும் தலைக்கு ஏறின மாதிரி கண்களும், முகமும் சிவந்து போயிற்று.

எத்தனை தைரியம் இவனுக்கு...கூடப் படிக்கிற பெண்ணை அழைத்து வந்து காதலுக்கு அடையாளம் சொல்லி சிவப்பு ரோஜாவைக் கொடுக்கிறானே...! அதைக் கொடுக்க நேற்று வீடு தேடி வந்ததாக வேறு தெரிவிக் கிறானே...ராஜாவை அந்தக் கருப்பன் என்று மரியாதை யற்று சொ...ல்...லி...?



நினைக்க நினைக்க மனதோடு உடம்பும் சேர்ந்து துடிக்க அவன் அவளது உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளாதவனாக கெஞ்சிக் கொண்டிருந்தான்.

''தலைலவச்சுக்க அமுதா...ப்ளீஸ்...இல்லாட்டிபோனால் நான் உடைஞ்சு தூள் தூளாகிப் போயிடுவேன் அமுதா. உன்னைப் பார்த்த முதல் நாள்லேருந்து அந்த முதல் நிமிடத்துலேருந்து நான் உன்னைக் காதலிக்க ஆரம்பிச்சுட் டேன்; நேசிக்கத் தொடங்கிட்டேன். அது இப்போ பெரிய மரமா பூதாகாரமா வளர்ந்து ஆட்டிவைக்குது. இனி நீ இல்லாமல் என்னால் ஒரு நிமிஷம் கூட இருக்க முடியாது அமுதா...உயிர்வாழ முடியாது. அந்த அளவு உன்னை நேசிக்கிறேன். முதல்ல இந்த ரோஜாவைத் தலைல செருகிக்க; அப்போதான் எனக்கு மூச்சுக் காற்று சீராக வரும்...''

''பூவைத் தலைல வச்சுக்கனுமா? எத்தனை தைர்ய மிருந்தா அப்படிக் கேட்பே நீ...? எவ்வளவு துணிச்சல்? இந்தா உன் பூவும் நீயும்...''

கையிலிருந்த சிவப்புக் காகித ரோஜாவைக் கிழித்து இதழ் இதழாகப் பிய்த்து அவனது முகத்தில விசிறி எறிந்து விட்டு அவனுக்கும் கதவிற்கும் நடுவிலிருந்த இடை வெளியில் புகுந்து அமுதா வெளியில் ஓட-

அவன் ஏமாற்றத்தாலும் அவமானத்தாலும் கோபத்தா லும், ஏக்கத்தாலும் ஒரு மொத்தமாய் தாக்கப்பட்டு முதல் மணி அடிப்பது கூட காதில் விழாதவனாக அப்படியே நின்றிருந்தான்...

## 8

**பொ**ங்கிப் பொங்கி வந்தது அழுதாவிற்கு. எப்படிக் கேட்டு விட்டான் அவன்...என்கிற குமைச்சல் நெஞ்சை முட்

டிற்று. அவன் அந்த மாதிரி கேட்கக்கூடிய அளவிற்குத் தான் நடந்து கொண்டதாகத் தன்னையே நொந்து கொண்டாள். ஆனால் யோசித்துப் பார்த்தபோது பாட சம்பந்தம் தவிர ஒரு வார்த்தை அதிகப்படிதான் பேசினது கூடக் கிடையாது என்பதுதான் நிஜம் என்று புரிந்தது. ஆனாலும் அவன் எப்படி இவ்வாறு எடுத்துக் கொண்டான். இந்த விதமாக நினைக்கத் தான் ஒருபோதும் இடம் கொடுத்ததில்லையே...பின் ஏன் இந்த எண்ணம் இவன் மனதில் உருவாயிற்று...

கடவுளே...நானே எத்தனையோ பிரச்சினைகளுக்கிடையில் படிக்க வந்திருக்கிறேன். ராஜாவின் விசாலமான மனகம் கம்பீரமான எண்ணங்களும் ஏற்படுத்திக் கொடுத்த சுதந்திரத்தில் விளைந்த படிப்பு இது. இதில் ஏன் தேவையற்ற விஷயங்கள் பாஸ்கரனின் உருவத்தில் குறுக்கிட வேண்டும்...? இதைச் சொல்ல வீடு தேடி வந்தானாமே...? அவனை அழைத்து உட்கார வைத்து எப்படி உபசரித்தார் ராஜா... இது தெரிஞ்சிருந்தால் அப்படிச் செய்திருப்பாரா...?

கடவுளே...எதற்காக இந்தச் சிக்கல்கள்...? இதை இப்போது யாரிடம் சொல்வது...? அப்பா, அம்மாவிடம் சொல்ல முடியாது. சொன்னால் அம்மா உடனே படிப்பை நிறுத்திவிட்டு மறுகாரியம் பார்ப்பாள். அப்பா உடனே ஆத்திரமும் கோபமும் பட்டு பாஸ்கரனைப் பள்ளிக்கூடத்தை விட்டே நீக்கச் செய்வார். இதனால் அவன் படிப்பும் கெடும். என் படிப்பும் கெடும். அதைவிட அவர்களிடம் சொல்லாமல் இருப்பதே நல்லது...

இந்த முடிவிற்கு வந்தபின் சொல்லாமல் இருப்பதின் காரண காரியங்களை ஆராய்ந்து பார்த்தாள். அதிகம் பின்விளைவுகள் ஏற்படும் என்று தோன்றவில்லை. ஏதேதோ பேசிவிட்டான். புதிதாய் எங்கிருந்தாவது சிவப்பு ரோஜா கொடுப்பது காதலுக்கு அறிகுறி என்று படித்திருப்பான். அதன் பாதிப்பு இப்படிச் செய்யத் தூண்டியிருக்கும். இன்று பூவைக் கிழித்து முகத்தில் அடித்து பேசிவிட்டு வந்த பின் அவனுக்குத்



தன் தவறு தெரிந்திருக்கும். தன் செய்கைக்காகவும், பேச்சிற்காகவும் வருத்தப்பட்டுக் கொண்டிருப்பான். தன்னை மாதிரி அவனும் இப்போது யோசித்துக் கொண்டிருக்கக்கூடும். பாஸ்கரன் புத்திசாலி. சாமார்த்தியசாலி. நிச்சயம் தவற்றைத் திருத்திக் கொள்ளக் கூடியவன். நாளைக்கே வந்து மன்னிப்புக் கேட்டாலும் கேட்பான். அல்லது அப்படியே மறந்தும் போகலாம். எதுவானாலும் இப்படி ஒரு விஷயம் நடக்கவே இல்லை போன்று மனதில் ஏற்பட்ட சங்கடத்தையும் வலியையும் துடைத்துத் தூர எறிந்துவிட்டு சாதாரணமாக நடந்து கொள்வதுதான் புத்திசாலித்தனம். அதுதான் இருவருக்கும் நல்லது...

மனதிற்குள் தீர்மானித்துக் கொண்ட பின்பும் அமைதி ஏற்படவில்லை. அப்பா, அம்மாவிடம் சொல்லாது போனாலும் பரவாயில்லை. ராஜாவிடம் சொல்லாமல் மறைப்பது தவறு என்கிற உறுத்தல் ஏற்பட்டது. நிச்சயம் இதற்காக அவன் அவளைத் தப்பாக நினைக்கப் போவதில்லை... குற்றம் சாட்டப்போவதில்லை. சந்தேகப்படப் போவதில்லை. முடிந்தால் பாஸ்கரனைக் கூப்பிட்டு புத்தி சொல்லுவான். இல்லாவிட்டால் 'அறியாத பையன், இளவயசு. அந்த வேகத்தில ஏதோ பேசிவிட்டான். அதைப் பெரிசு படுத்தாமல் அந்த மாதிரி ஒரு நினைப்பிற்கு இடமே இல்லை என்பதை நீ பக்குவமாக எடுத்துச் சொன்னால் நிச்சயம் மாறி விடுவான அழுதா...' என்பான் ஓர் ஆழ்ந்த அமைதியுடனும், நிதானத்துடனும்.

அவன் என்ன சொல்வான் என்பது தெரிந்த பின்னரும் எதற்காக இதைப் போய் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும்...? சொல்லத் தகுதியற்ற விஷயம். ராஜா என்ன சொல்வாரோ அதன்படி நாமே நடந்து கொண்டு விட்டால் போகிறது...

ஒருவேளை நேற்று பாஸ்கரன் வீட்டிற்கு வந்தபோது தனக்கும் ராஜாவிற்கும் அப்போதுதான் நிச்சயதார்த்தம்

நடந்து முடிந்த விஷயத்தைச் சொல்லியிருந்தால் கூட இன்று இப்படி ஒரு விஷயம் நடக்காமல் தடுக்கப்பட்டிருக்கலாம், ராஜா கூட ஏன் சொல்லவில்லை என்றுதான் கேட்டார்.

நாம் தான் வெட்கப்பட்டுக் கொண்டு சொல்லாமல் இருந்து விட்டோம்...இனி இந்தப் பிரச்சினை எழும்புமானால் நிச்சயம் தான் ராஜனின் மனைவியாகப் போகிறவள் என்பதைச் சொல்லிவிட வேண்டும். தயங்கக் கூடாது......

அமுதா இந்த விதமான முடிவிற்கு வந்தபோது பாஸ்கரன் தன் வீட்டில் அறைக் கதவை மூடித் தாழிட்டு உள்ளே வெறுந்தரையில் படுத்து குமுறிக் கொண்டிருந்தான். அமுதாவின் மறுப்பு அவனால் தாங்கிக் கொள்ள முடியாததாக இருந்தது. துக்கம் குமுறிக் குமுறி வந்தது. அவள் அந்த சிவப்பு ரோஜாவைப் பிய்த்து முகத்தில் எறிந்து விட்டு கதவிடுக்கின் வழியாகக் குனிந்து ஓடின காட்சி ஆக்ஷன் ரீப்ளே மாதிரி அடிக்கடி கண்ணெதிரில் தெரிய அவன் துடித்துப் போனான். அவள் அப்படி நடந்து கொள்வாள் என்று அவன் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. தன் பார்வைக்கும், ஒரே ஒரு பேச்சிற்கும் நிறைய பெண்கள் ஏங்கிக் காத்துக் கொண்டிருக்கிறபோது-அவர்களில் யாரையும் இவன் ஏறெடுத்தும் பார்க்காத நிலைமையில் தன்னை ஒருத்தி அவ்வாறு நடத்தக் கூடும் என்பது நிஜத்திற்கு அப்பாற்பட்ட விஷயமாக இருக்க-

அதை அமுதா நிஜம் தான் என்றாக்கி விட்டாள். அவனது கனவுகளையும், கற்பனைகளையும் காலடியில் போட்டு மிதித்து நசுக்கி விட்டாள். இந்த மறுப்பை அவன் எதிர்பார்க்கவில்லை.

எதிர் பார்க்கவில்லை என்பதை விட தன்னை மறுக்கக் கூடும் என்பதே அவன் நினைத்தும் பார்க்காத ஒரு விஷயமாக இருந்தது. நம்ப முடியாமல் தடுமாறிக் கூடப் போனான். ஆனால் அமுதாவின் அந்தத் தோற்றம், ரத்தமாய் சிவந்து போன முகம், பூவைப் பிய்த்து முகத்தில் வீசிய கொடூரம்...



நிச்சயம் அவனால் அதை மறக்க முடியப் போவதில்லை. அதை மட்டுமல்ல அவளையே மறக்க முடியாது. அவளுக்காக கிட்டதட்ட இந்த ஒரு வருடமாக ராப்பகல் தூக்கமின்றி அலைந்திருக்கிறான். சாப்பாடு இன்றித் தவித்திருக்கிறான். கால் கடுக்க பள்ளிக்கூட வாசலில் தவமிருந்திருக்கிறான். சாப்பிடும்போது, குளிக்கும் போது, படிக்கும் போது, நிற்கும் போது, நடக்கும் போது என்று விநாடி தவறாமல் அவள் ஸ்மரணையில் இருந்திருக்கிறான். பைத்தியம் பிடித்த மாதிரி, அவள் நினைவில் கூரையை வெறித்துப் பார்த்தவாறு உட்கார்ந்திருக்கிறான்...

இவை அனைத்தையும் அர்த்தமற்றுப் போகச் செய்கிறாற்போல் அவள் பூவோடு பூப்போன்ற அவனது இதயத்தையும் இதழ் இதழாகப் பிய்த்துப் போட்டு விட்டாள். அதை நினைக்க நினைக்க அவனுக்குள் மீண்டும் ஓர் கோபமும் ஆக்ரோஷமும் எழுந்தது. எப்படியும் அவளை அடைந்து விட வேண்டும் என்கிற வெறி ஏற்பட்டது.

இத்தனைத் தவிப்பிற்கும், அலைச்சல்களுக்கும், கஷ்டங்களுக்கும் அப்புறம் அவளது புறக்கணிப்பை ஏற்றுக் கொண்டால் முட்டாளாகிப் போவோம். எல்லாம் அர்த்தமற்றதாகி விடும். அப்படி அர்த்தமற்றுப்போகச் செய்யக் கூடாது; அவளை விட்டு விடக்கூடாது. அவளிடம் கெஞ்சி, பிச்சை கேட்டாவது அன்பைப் பெற்றாக வேண்டும். அவளை, அந்த முகத்தை, அதன் அழகை மறக்கிற சக்தியில்லாத போது வேறு வழியில்லை.

அமுதா...

நீ எனக்கு வேண்டும்.

உன் அன்பு வேண்டும்.

காதல் வேண்டும்.

கனிவு வேண்டும்.

இவையெல்லாம் கிடைக்கிற வரை நான் ஓயப் போவதில்லை. என் மூச்சு ஓய்ந்தாலும் ஓயுமே தவிர நான் ஓய மாட்டேன்.

மூர்க்கத்தனமான அந்த முடிவிற்குப் பின்னர் அவன் சடாரென்று தரையை விட்டு எழுந்தவன் ஃரப் நோட்டுப் புத்தகத்தின் நடுத்தாளைக் கிழித்தெடுத்து உட்கார்ந்து,

என் உயிரினும் மேலான அமுதா, என்று ஆரம்பித்து கிட்டதட்ட நான்கு பக்கங்களுக்குக் கடிதம் எழுதி முடிந்தான். மறுநாள் எப்படியும் அதை அவளிடம் சேர்த்து விடவேண்டும் என்கிற ஆவேசத் தீர்மானத்திற்குப் பின்னரே ஒரு வடிகால் எற்பட்ட உணர்வில் மனதின் மூலையில் சிறிதளவு அமைதி எற்பட்டது...

மறு நாள் பிரார்த்தனை முடிந்து முதல் வகுப்பு தொடங்கிய பின்னரே அமுதா பள்ளிக்கு வந்தாள். அவ்வாறு வருவதன் மூலம் அவனைத் தவிர்க்கிற வசதியை எற்படுத்திக் கொண்டாள். பகல் சாப்பாட்டின் போது சினேகிதிகளை விட்டு நகராமல் இருந்து மாலை மணியடித்த உடனே வீட்டிற்குக் கிளம்பி விட்டால் மீண்டும் பிரச்சினைகள் எற்பட வழியில்லை என்று கருதினாள். அதன் காரணமாகவே காலையில் தினமும் நேரம் கழித்து வருகிற முடிவு. அதன் முதல் கட்டமாக அன்று வகுப்பு ஆரம்பித்த பின்னர் உள்ளே நுழைந்த அமுதாவை எரித்து விடுகிற மாதிரி பார்த்தான் பாஸ்கரன். அவனது பார்வையின் தீட்சண்யம் தன்னைத் தாக்குவதை உணர்ந்த போதிலும் அவள் அவனை எறிட்டுப் பார்க்கவில்லை. அவன் இருந்த திசையையே தவிர்த்தாள்.

அதைப் புரிந்து கொண்ட பாஸ்கரனுக்குள் ஒரு வெறி கொழுந்துவிட்டு எரியத் தொடங்கிற்று 'இத்தனை அலட்சியமா உனக்கு...? நான் உன் நினைவில் உருகி உருகிச் சாகிறேன். நீ நீரோ மன்னனாகப் பிடிலா வாசிக்கிறாய்...?' என்று உறுமிக் கொண்டான். அன்று இடைவேளை முழுதும்



அவள் பெண்கள் வட்டத்தை விட்டு நகராமல் பாதுகாப்பாக இருந்தது அவனது எரிச்சலை விசிறி அதிகமாக்க அவன் பகல் சாப்பாட்டின்போது எப்படியும் அவளிடம் அந்தக் கடிதத்தைக் கொடுத்துவிடுவது என்று எழுந்தான். பள்ளியின் விளையாட்டு மைதானப் பக்கம் விளாமரத்தடி நிழலில் அமுதா சினேகிதிகளோடு உட்கார்ந்து சாப்பிடுவதைக் கண்டுபிடித்து நேராக அங்கு போய் அமுதாவின் பக்கத்தில் நின்றான்.

அவன் வந்தவுடன் எல்லாப் பெண்களும் பேசுவதை நிறுத்த அந்த அமைதியில் அவனது குரல் மட்டும் ஆணியடிக்கிற தீர்க்கமாகக் கேட்டது.

''அமுதா...இந்தக் கடிதத்தை உனக்கின்னே எழுதிக் கொண்டு வந்திருக்கேன். சாப்பாட்டு பெல் அடிக்கிறதுக்கு முன்னால் இதைப் படிச்சுப் பார்த்துட்டு என்கிட்ட வந்து 'பாஸ்கர் நான் நடந்துகிட்டது தப்பு. உங்களை நான் மனசார எத்துக்கறேன்னு சொல்லணும். அப்படி நீ சொல்லாத பட்சத்தில் நான் என்ன செய்வேன்றது எனக்கே தெரியாது ஜாக்கிரதை...''

சொல்லிவிட்டுப் பரபரவென்று அவன் திரும்பிப்போக- அதிர்ச்சியடைந்திருந்த மற்ற பெண்கள் கொஞ்சம் கொஞ்சமாக நிதானத்திற்கு வந்து அமுதாவைப் பார்த்து கேட்டனர்.

''என்ன அமுதா இதெல்லாம்...?''

அந்தச் சின்னக் கேள்வியில் தூண்டப்பட்டவளாக மடியில் விழுந்து கிடந்த கடிதத்தை தொடப் பிடிக்காமல் அவள் விசித்து அழ ஆரம்பித்தாள். பின் குரலடைக்க மெதுவாக சொன்னாள்.

''என்னன்னு தெரியலேப்பா...நேற்று காலையிலேருந்து பாஸ்கர் என்னை...என்னை...லவ் பண்றதாகச் சொல்றான். நானும் பதிலுக்கு அவனை லவ் பண்ணணும்ங்கறு எதிர் பார்க்கிறான்''என்று சொல்லி நேற்றைய விஞ்ஞான பரிசோதனை அறையினுள் நடந்த சம்பவம் வரை விவரித்தாள். பின்னர்,

''இப்போது வந்து இந்த லெட்டரைப் போட்டுட்டுப் போறான்? அவன் பயமுறுத்தினதைத் தான் நீங்கள்ளாம் கேட்டீங்களே...?''

ஏதோ கதை கேட்கிற மாதிரி கேட்டுக் கொண்டிருந்த வர்களில் ஒருத்தி ''நீ உங்க வீட்ல போய் சொன்னியா...?'' என்று கேட்டாள்.

'ம்ஹூம்' என்று தலையாட்டினாள் அமுதா.

''என் சொல்லலை...? உங்கப்பாகிட்டே ஒரு வார்த்தை சொன்னால் அவர் இவனை பள்ளிக்கூடப் பக்கம் தலைவச்சு கூடப் படுக்கவிடாமல் செய்திடுவார் இல்லே...?''

''அதனால்தான் சொல்லலை. அவனோட படிப்பு கெட்டு அதனால் எதிர்காலமே பழாயிடுமேன்னுதான் சொல்லலை.''

''போடி போ... உன் எதிர்காலத்தைப் பற்றி அவன் அப்படி நினைச்சுப் பார்த்தானா...? நினைத்திருந்தால் இந்த மாதிரி ஒரு கடிதத்தை வீசி இப்படியெல்லாம் பேசிகிட்டுப் போயிருப்பானா...? நீ யாரு, அவன் யாரு...? நீ எங்கே, அவன்எங்கே...?''—ஆத்திரமும், கோபமுமாக ஒருத்தி படபடக்க அமுதா அமைதி குறையாமல் சொன்னாள்.

''அதெல்லாம் கூட பெரிசில்லை சிவகாமி. நான் என்னோட அத்தைப் பையனைத்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன். எங்க வீட்டிலேயே வளர்ந்தவரு அவரு. சின்ன வயசுலேயே நிச்சயம் பண்ணின கல்யாணம். இப்போதுதான் காலேஜ் படிப்புக்காக அத்தை மாமா, அவரு எல்லாம் தனியாப் போயிருக்காங்க. நேத்றைய முன்தினம், பாஸ்கரன் எங்க வீட்டுக்கு வந்ததா சொல்லலை. அன்னிக்குத்தான் ஒப்பந்த தாம்பூலம் மாற்றினாங்க. இவன் கூட வீட்டு வாசல்ல அவரை சந்திச்சுப் பேசியிருக்கான்...''

''நீ அவரைக் கட்டிக்கப் போற விஷயம் இவனுக்குத் தெரியுமா...?''



''தெரியாது...''

''இங்கேதான் தப்பு பண்ணிட்ட அமுதா. அவன் வீட்டுக்கு வந்தப்ப உங்க அத்தானை நீ அறிமுகப்படுத்திருக்கணும். அவருக்கும் உனக்கும் நிச்சயதாம்பூலம் நடந்த விஷயத்தைச் சொல்லியிருக்கனும். இவரைத்தான் நான் கல்யாணம் செய்துக்கப் போறேன்னு காட்டி இருக்கணும்...''

''தெரிஞ்சால் கேலி பேசுவீங்களேன்னு மறைச்சுட்டேன்.''

''சரி, இப்போ என்ன செய்யப்போறே...''

''நீங்கள்ளாம் இருக்கீங்களே...சொல்லுங்கடி...''

''நேரா இந்தக் கடிதத்தைக் கொண்டு போய் ஹெட் மாஸ்டர் கிட்ட காட்டி புகார் பன்னினால் என்ன...?''

''கிளாஸ் மாஸ்டர்கிட்ட காட்டினால்கூடப் போதும். அவரே அவனைக் கூப்பிட்டுக் கண்டிப்பார், இதுக்கு எதுக்கு ஹெட்மாஸ்டர்...''

''இதையெல்லாம்விட நான் ஒன்று சொல்றேன், கேட்கறீங்களா...?'' என்றாள் சியாமளா. பெருமாள் கோவில் பட்டாச்சாரியாரின் பெண்.

''இப்படியெல்லாம் ஹெட்மாஸ்டர், கிளாஸ் மாஸ்டர்னு சொல்லி தருக்கடிக்கிறதை விட நாம் நாலு பேரா சேர்ந்து பாஸ்கர்கிட்ட போய் இந்த லெட்டரைத் திருப்பிக் கொடுத்துட்டு, இனிமேல் அமுதா வழிக்குப் போகாதே, அவளை நினைக்காதே. அவ இன்னொருத்தனுக்கு மனைவியாகப் போறவ. அன்னிக்கு அவ வீட்டு வாசல்ல நீ பார்த்துப் பேசினியே அவரைக் கல்யாணம் பண்ணிக்கப் போறவ. நீ போன அன்னிக்குத்தான் அவங்க ரெண்டு பேருக்கும் நிச்சய தார்த்தம் நடந்தது...சின்ன வயசுலயே நிச்சயமாகிப்போன கல்யாணம். அமுதாவும் அவரைத்தான் நேசிக்கறா... அதனால் அனாவசியமாக தொந்தரவுபட்டு அவளையும் தொந்தரவு படுத்தாதேன்னு மெதுவா, நிதானமா,

அவனோட மனசுல பதியற மாதிரி எடுத்துச் சொல்லி காதும் காதும் வச்ச மாதிரி பிரச்சினையைத் தீர்த்து விட்டு வரலாமா...?''

அந்த கூர்மையான யோசனையில் ஒரு வினாடி அத்தனை பேரும் ஆச்சரியத்தில் வாயடைத்துக் கிடக்க அமுதா தான் முதலில் பேசினாள்.

''இது எனக்கு சரியான யோசனையாப் படுது...''

''எனக்கும்தான்...'' என்றாள் பட்டு.

''எனக்கும் கூடத்தான்.''

''எனக்கும்''

''எனக்கும்...''

''எனக்கும்...''

''அய்யிரு வீட்டுப் பொண்ணில்ல, அதான் புத்தி கூர்மையா வேலை செய்யுது''

''சரி, சியாமளா! அப்போ நீயே இந்தக் கடிதத்தை எடுத்துக்கிட்டு வா. நீயே பேசு. நாங்கள்ளாம் கூட இருக்கோம்...''

''சரி...''

''நான், கமலம், பட்டு கலா, சிவகாமி அஞ்சு பேரும் போறோம்...''

''சியாமளாவோட சேர்ந்து ஆறுடி...''

''பெரிய கூட்டமா இல்ல இருக்கு...''

''என் கூட இருக்க ஆளில்லையே...'' என்று பயந்தாள் அமுதா.

''சரி, நானும், சிவகாமியும் உன் கூட இருக்கோம் அமுதா. மற்ற நாலும் பேரும் போய் பாஸ்கர் கிட்ட பேசிட்டு வரட்டும்...''



சியாமளாவுடன் மற்ற மூவரும் தூரத்திலிருந்த பாஸ்கரனை நெருங்கிய போது காரணமற்ற பயத்திலும், இனம் புரியாத கவலையிலும் அமுதாவின் நெஞ்சு படபடக்கத் தொடங்கிற்று...

## 9

**அ**வனா...அந்தக் கறுப்பனா...? என்று உள்ளுக்குள் பொருமி மாய்ந்துமாய்ந்து போனான் பாஸ்கரன். அன்று வீட்டு வாசலில் கருங்கல் விக்கிரமாக நின்ற அவனையா அமுதா கல்யாணம் பண்ணிக் கொள்ளப்போகிறாள்...? அவளுடைய அழகு எங்கே, அந்தக் கறுப்பன் எங்கே...? சந்தனத்தையும் தாரையும் யாராவது ஒன்று சேர்ப்பார்களா? கருங்கல்லில் தந்தத்தை இழைப்பார்களா...? ஒத்தெல்லோ டெஸ்டிமோனா மாதிரி யார் இவர்களை ஒன்று சேர்த்தார்கள்? வீட்டுப் பெரியவர்கள் சொன்னால் அமுதாவிற்கு எங்கே புத்தி போயிற்று? 'இந்தக் கறுப்பனை நான் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்' என்று மறுப்பதற்கென்ன...? அழகு, படிப்பு, புத்திசாலித்தனம், இவை எல்லாவற்றையும் விட அளவிட முடியாத பணம் எல்லாம் இருக்கிறபோது எதற்காக அமுதாவை அவனுக்குக் கல்யாணம் செய்து கொடுக்க வேண்டும்? வெறும் உறவு காரணமாகவா...? இல்லாவிட்டால் சொத்து வெளியில் சிதறிப்போகக் கூடாது என்பதற்காகவா...?

எது காரணமானாலும் அமுதா அவனை கல்யாணம் பண்ணிக் கொள்வதை இவனால் தாங்க முடியாது.அவளே ஒப்புக் கொண்டாலும் இவன் ஒப்புக் கொள்ள மாட்டான்... சியாமளா சொன்னாளே அமுதா அவனை நேசிக்கிறாள் என்று... அவனைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதில் சந்தோஷப்படுகிறாள் என்று... அது நிச்சயம் உண்மையாக இருக்காது. அமுதா போன்ற அழகியால் அப்படிப்பட்ட கறுப்பனை விரும்ப முடியாது. ஒன்று சியாமளா சொன்னது பொய், அல்லது

அமுதா இந்தக் கல்யாணத்திற்கு வற்புறுத்தப் பட்டிருக்கிறாள்.

இல்லாவிட்டால் அமுதாவின் அழகிற்கு இணையாக, நிறத்திற்குச் சமமாக, புத்திசாலித்தனத்திற்கு ஈடு கொடுப்பவனாக இருக்கும் தன்னைவிட்டு அவள் என் அந்தக் கறுப்பன் பெயர் என்ன சொன்னார்கள்...ராஜா... (அவனது முகரக் கட்டைக்கு அந்தப் பெயர் ஒன்றுதான் பாக்கி...) அந்த ராஜாவை மணக்க சம்மதித்திருப்பாளா...? என்னைக் காதலிக்காமல் அவனை விரும்புவதாகச் சொல்வாளா...? அவனை எப்படி அவள் மனசு ஏற்றுக்கொள்ளும்? தொடுகிறபோதே அருவருப்பு தோன்றாதா...? இது நிச்சயம் கட்டாயக் கல்யாணம்தான். இதை நடக்கவிடக்கூடாது. எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டும். அந்தக் கறுப்பனை அவள் வாழ்க்கையை விட்டு நகர்த்தியாக வேண்டும். அவன் இருக்கிறவரை அமுதா பயமுறுத்தல் காரணமாகத் தன்னை நேசிக்க மாட்டாள். விரும்பினாலும் வெளிப்படுத்த மாட்டாள். தன்னை விரும்பாமல் எந்தப் பெண்ணாலும் இருக்க முடியாது. இவள் மனதிற்குள் தான் இருப்பது நிஜம். அந்தக் கறுப்பனால்தான் அதை மறைக்கிறாள். முதலில் அந்தக் கறுப்பனை அகற்றினால் எல்லாம் தன் விருப்பப்படி நல்ல விதமாக நடக்கும். எல்லாம் நல்லபடி நடக்க வேண்டுமானால் கறுப்பனை அமுதாவின் வாழ்க்கையை விட்டு விரட்ட வேண்டும்...

'எப்படி...?'

அன்றிரவு முழுதும் வினாடி நேரம்கூடக் கண் மூடாமல் எந்தெந்த வழியெல்லாமோ யோசித்தான். கடைசியில்ஒரே ஒரு வழிதான் சரியானதாகத் தெரிந்தது. அது ஒன்றுதான் அனைவருக்கும் நன்மை பயக்கும் என்கிற தீர்மானத்திற்கு வந்தான். அதுதான் அமுதாவின் வாழ்க்கையை விட்டு ராஜாவை விலக்கும். அவள் தன்னுடன் சேர வேண்டுமானால் துணிந்து செயல்பட வேண்டும்...

'உனக்கு அமுதா வேண்டுமா வேண்டாமா...?'



'வேணும், நிச்சயம் வேணும். அவள் இல்லாமல் எனக்கு வாழ்க்கையே கிடையாது...' பின் தயங்கினால் எப்படி...? பயந்தால் எப்படி? இல்லை, நான் பயப்படப் போவதில்லை. தயங்கப்போவதில்லை, அமுதாவிற்காக எதுவும் செய்யத் தயார்.

மறுநாள் காலை ஆறு மணிக்கெல்லாம் எழுந்து அமைதியாகக் குளித்து உடை மாற்றிக் கொண்டான். வாடகைக்கு சைக்கிள் ஒன்று எடுத்தான். எத்தனையோ நாளாகச் சாப்பிடாததெல்லாம் சேர்த்து அன்று சாப்பிட்டான். புத்தகங்களை எடுத்துக் கொள்ளாமல் 'அம்மா போயிட்டு வரேன்...' என்று எங்கே என்பதைச் சொல்லாமல் சொல்லிக் கொண்டு நிதானமாக சைக்கிளில் ஏறி மிதித்தான்.

அமுதாவின் ஊரை நெருங்க வேகம் அதிகமாயிற்று. மனதிற்குள் புதிதானதோர் உக்கிரம் தோன்றியது. தான் யார், எங்கிருக்கிறோம் என்பதெல்லாம் மறந்து பார்க்கிற இடமெல்லாம், பொருளெல்லாம் அமுதா மட்டுமே தெரிய-

அன்று போல் கீழண்டை வாசலில் போய் இறங்கினான் அவன். அதே எதிர் புளிய மரத்தடியில் சைக்கிளை நிறுத்தி ஸ்டாண்ட் போட்டு விட்டு முன்பு மாதிரி தயங்கிக் கொண்டிராமல் நடந்து வாசல் வரை வந்தான்.

உள்ளிருந்து வெளியில் வந்துகொண்டிருந்த ஆள் காட்டி ஒருவன், ''யாருங்க வேணும்...?'' என்று கேட்க, ''ராஜா இல்லே...?'' என்று பதில் கேள்வி போட்டான்.

''இருக்காரு... நீங்க யாருன்னு சொல்லட்டும்...?''

''அவரோட சிநேகிதன்னு சொன்னால் போதும்...''

''பேர் சொல்ல வாணாங்களா...?''

''வாணாம்...''

அந்த ஆள் உள்ளே போய் ஒரு நிமிடத்திற்கெல்லாம் வெளியில் வந்து ''இதோ வாராருங்களாம். உட்காருங்க...'' என்று திண்ணையைக் காட்டிவிட்டுப் போனான்.

அதற்குள் அவன் பொறுமை இன்றி தவித்தான். சட்டைப் பையில் கைவிட்டு எதையோ துழாவினான். பாண்ட் பையைத் தொட்டுப் பார்த்தான். கைவிரல் நகங்களைக் கடிக்க ஆரம்பித்த வினாடியில்—

வெறும் வேட்டியும், மேலே ஒரு சின்ன துவாலையுமாக வெளியில் வந்த ராஜா பாஸ்கரனைப் பார்த்ததும் சற்று ஆச்சரியப்பட்டாலும் சினேகமாய் சிரித்தான்.

''அடேடே... நீங்களா... படியாள் என் சிநேகிதன் யாரோ என்னைத் தேடி வந்திருக்கிறதா இல்லே சொன்னான்... இருங்க அமுதாவைக் கூப்பிடறேன்...''

''இல்லே வேணாம்...'' என்று அவசரமாக மறுத்த பாஸ்கரன் ''இப்போ நான் உங்களைத் தேடித்தான் வந்திருக்கேன்...'' என்றான்.

''என்னைத் தேடியா...'' என்று மேலும் ஆச்சரியப்பட்ட ராஜா, ''சொல்லுங்க...?'' என்றான் சகஜமாக.

''எனக்கு உங்க உதவி கொஞ்சம் வேணும்...''

''என் உதவியா... என்னால் முடிஞ்சால் தாராளமாக செய்வேனே...சொல்லுங்க, என்ன செய்யணும்...?''

''இங்க சொல்ல முடியாது. என் கூட கொஞ்சம் ஏரிக்கரை வரை நடந்து வந்தால் சொல்றேன்—''

''ஏரிக்கரை வரைக்குமா...? இப்படியே வா...?''

''பரவாயில்லே...அஞ்சு நிமிஷத்துல திரும்பிடலாம்...''

''இருங்களேன், சட்டை போட்டுக்கிட்டு வந்துடறேன்...''

''வாணாங்க...இது தாங்க வசதி. இப்படியே வாங்க—''



''வசதியா...எதுக்கு...?''

''ஒரே புழுக்கமாயில்லே, அதுக்கு...''

ராஜா அவன் சொன்னதைக் கேட்டு புன் சிரிப்பாகச் சிரித்தவாறு, ''சரி வாங்க போகலாம்...'' என்று கூட நடந்தான்.

ஏரிக்கரையை நெருங்குகிறவரை பேச்சு எதுவும் இல்லை. பாஸ்கரன் அமைதியற்று, தவிப்பும், படபடப்புமாக நடக்க அதற்கு எதிர் மாறாக ராஜா மிக இயல்பாக நிதானமாக வந்தான். ஏரிக்கரையை நெருங்கி யாருமற்ற இடத்திற்கு வந்ததும் அதற்குமேல் பாஸ்கரன் தாமதிக்கவில்லை. கால் சட்டைப் பையிலிருந்து அத்தனை நேரம் மறைத்து வைத்திருந்த அந்தப் புதிய கத்தியை எடுத்து சட்டையற்ற வெற்று ராஜா சிறிதும் எதிர் பார்க்காத போது மார்பில் ஒரே குத்ததாகக் குத்த-

''ஏய்...என்ன இது—?'' என்று வெறும் கைகளால் தள்ளாடி தடுத்துக் கொள்ளப் பிரயத்தனப்பட்ட ராஜாவின் முகம், கைகள், மார்பு, வயிறு எல்லா இடங்களிலும் கத்திக் குத்து விழுந்தது. வெறி பிடித்த மாதிரி ''உனக்கு அமுதாவா வேணும் ?'' என்று கேட்டவாறே கத்தியைச் செருகிச் செருகி இழுத்து தன் முகம், சட்டை, கால் சட்டை, கைகள் எல்லாம் ரத்தம் பீறி அடிப்பதையும், பொருட்படுத்தாமல் ராஜாவின் உடம்பு கீழே சரிகிற வரை வெறி அடங்காதவனாகச் செயல்பட்டான்.

அதன் பின்னரே ஓய்ந்து போய் தள்ளாடித் தள்ளி நின்றான். ராஜாவின் உடம்பைச் சுற்றி மணல் சிவப்பாக மாறுவதைக் கண் கொட்டாமல் பார்த்த போது அவனுக்குத் தான் வர்ணமடித்த அந்தக் காகிதச் சிவப்பு ரோஜா ஞாபகத்திற்கு வந்தது. அமுதா அதைப் பிய்த்துத் தன் முகத்தில் எறிந்தது, அவளுடைய சிநேகிதிகள் கூட்டமாக வந்து ராஜாவைப் பற்றி சொன்னது.

'அவ அவரைத் தான் நேசிக்கிறா...அவரையே கல்யாணமும் பண்ணிக்கப் போறா...நடுவில் குறுக்கிட்டு நீங்களும் சிரமப்பட்டு வீணாக அவங்களையும் ஏன் சிரமப்படுத்தறீங்க...?'

அந்த சிரமம் இனி இல்லை. அமுதா இந்தக் கறுப்பனுக்குச் சொந்தமானவள் இல்லை. தான் ஜெயிலிலிருந்து திரும்பி வந்த பின் அமுதாவைக் கல்யாணம் பண்ணிக் கொள்வான். அவளும் அவனை நேசிப்பாள்...காதலிப்பாள்...

கத்தியை மறக்காமல் எடுத்துக் கொண்டு போலீஸ் ஸ்டேஷனை நோக்கி நடந்த போது ஊர் ஜனங்கள் பார்த்து பதறி விசாரித்து ராஜாவின் உடம்பைக் கண்டு பிடிக்க-

பூவராகனின் வீட்டிற்கு ஆள் போயிற்று...

## 10

எல்லாம் நடந்து ஒரு வழியாக முடிந்து போயிற்று. ராஜா கிடந்த கோலத்தையும், பாஸ்கரின் ஆவேசத்தையும் பற்றிப் பேசி பேசி ஊர் ஓய்ந்து அடங்கியாயிற்று. பாஸ்கரனை வேலூர் ஜெயிலில் அடைத்திருப்பதாகச் சொல்லிக் கொண்டார்கள். பாஸ்கரின் அம்மாவும், அப்பாவும் வந்து பூவராகனின் வீட்டு வாசலில் நின்று கதறினார்கள்.

''ஐயா...அவன் அப்படியெல்லாம் செய்யக் கூடியவனே இல்லீங்க. ரொம்ப சாதுங்க. இரக்க சுபாவம் உள்ளவனுங்க. நான் வீட்ல கோழி அறுத்தாகூடத் தாங்கமாட்டாங்க. அதுக்கோசரமே, கறி, மீனு எதையும் தொடமாட்டாங்க. சுத்த சைவமுங்க...அப்படிப்பட்டவன் இந்த வேலை செய்ததைத்தான் தாங்கிக்க முடியலீங்க. தகாத பொருளுக்கு ஆசைப்பட்டு பொருளையும் மூளியாக்கி, தானுமில்ல வீணாகப் போயிட்டான். அய்யா...உங்களைக் கை எடுத்துக்



கும்பிடறோங்க. உங்க மக வாழ்க்கையை வீணாக்கின பாவம் அவனைச் சும்மா விடாதுங்க...மன்னிச்சிடுங்கன்னு கேட்கிறதுக்குக்கூட மூஞ்சியில்ல எங்களுக்கு. மன்னிச்சு சும்மா விடக்கூடிய சாதாரணத் தப்பையா செய்திருக்கான் அவன்...ஆனாலும் அப்படி ஒரு மகனைப் பெற்ற குற்றத்துக்காக உங்ககிட்ட மன்னிப்பு கேட்கறோங்க அய்யா...எங்களை மன்னிச்சிடுங்க அய்யா...''

சரேலென்று இருவரும் பூவராகனின் காலில் விழுந்து வணங்கி அழுதுகொண்டே எழுந்து போக-

பூவராகவன் குலுங்கினார். ''இனி யார் மன்னிப்பு கேட்டு என்ன பிரயோசனம்...? எவன் எந்த ஜெயில்ல இருந்தா என்ன...? என் ராஜா... ரா.. ஜா திரும்பி வரவா போறான்...?'' அதற்குமேல் தாங்க முடியாமல் மேல் துண்டால் அவர் வாயைப் பொத்திக்கொண்டு எழுந்து உள்ளே போக வடிவாம்பாளும் துக்கம் தாங்காமல் அழத் தொடங்கினாள்...

அப்படி அழுதழுது துக்கம் கரைந்து உள்ளுக்குள் இறுகி பேச்சுவார்த்தை, சிரிப்பு எல்லாவற்றையும் இற்றுப் போக வைக்க-

அமுதா அன்று ராஜாவின் உடல்மீது விழுந்து கதறினாளே அதோடு சரி. அதற்குப்பின் ஒரு துளிக்கண்ணீர் இல்லை. நெஞ்சு மனசு எல்லாம் வரண்டு போய் இயந்திரம் மாதிரி இயங்கிக் கொண்டிருந்தாள்.

பத்தாம் நாள் காரியங்கள் எல்லாம் நடந்து முடிந்தவுடன் வந்திருந்த அத்தனை பேருக்கிடையில் அமுதா உடம்பிலிருந்த நகைகளை உருவி, தலைப் பூவை உதறி நெற்றிப் பொட்டை அழித்துக் கொண்டு வெறுமையாக நின்றதும், அடி வயிறு புரள வடிவாம்பாளும், பூவராகனும் கேட்டார்கள்.

'என்னம்மா இது...?'

அமைதியாக அவர்களை எதிட்டுச் சொன்னாள் அமுதா...

''கல்யாணம் பண்ணிக்கிட்டால் தானாப்பா...? மனசு ஒன்றுபட்டால் இல்லையா...?''

''அ...ம்...மா...!''

'ஏம்பா வீணா அழறீங்க. ராஜா உடம்பால தான் பிரிஞ்சிருக்காரே தவிர உள்ளத்தால் இல்லையே...? ஆஞ்ச னேயர் மாதிரி மார்பைத் திறந்து காட்டற சக்தி எனக்கும் இருந்தால் அதுக்குள்ளே ராமனுக்குப் பதிலா ராஜா இருப் பதை நீங்களும் உணருவீங்க... அதனால் அழ வேண்டிய அவசியமே இல்லைன்னு தோணுது. அதுதான் நான் அழலை. அன்னிக்கப்புறம் அழுகை வரலை. ராஜாவை நான் நேசிக்கிறது நிஜம்னால் ஒண்ணு செய்யணும்ப்பா நான்; அதற்கு நீங்க அனுமதி கொடுக்கணும்...''

''என்னம்மா...?''

''படிப்பை நிறுத்திடாமல் தொடரணும். அவர் ஆசைப் பட்ட மாதிரி இந்தப் படிப்பு மட்டுமில்லாமல் மேலேயும் படிக் கணும்... இதுக்கப்புறம் படிப்பு கூட இல்லேன்னால் நான்... நான் நொறுங்கிப் போயிடுவேன்ப்பா...''

''ஏம்மா... இத்தனைக்கப்புறம் திரும்பவும் பள்ளிக் கூடமா...?''

அந்தக் கேள்விக்கு அவளிடமிருந்து விரக்தியாய் சிரிப்பு வந்தது.

''பள்ளிக்கூடம் என்னப்பா தப்பு பண்ணிச்சு...? எல்லா ருமா பாஸ்கர் மாதிரி இருப்பாங்க...? அதுவுமில்லாமல் இனி கொல்றதுக்கு எந்த ராஜாப்பா இருக்கார்... இல்லே என்கிட்ட தான் என்ன இருக்கு...? நானே ஒரு நடமாடற பிணம் தானேப்பா...''



கரகரவென்று கண்களிலிருந்து நீர் வழிய அவர் சொன்னார்.

''நீ படிம்மா... எவ்வளவு உன்னால முடியுமோ அவ்வளவு படி... பட்டணம் மட்டுமில்லே, சீமைக்குப் போற தானாலும் போய்ப் படிம்மா... நாங்க தடுக்க மாட் டோம்...''

மீண்டும் சரியாக ஒன்பது மணிக்குப் பள்ளிக்கூட வாசலில் வில் வண்டிக்குப் பதிலாக காரில் வந்து இறங்கினாள் அமுதா. பூவராகனே கொண்டு வந்து விட்டார். ''சரியாக நாலு மணிக்கு வரேம்மா...?'' என்று சொல்லி விட்டுப் போனார்.

அமுதா வகுப்பறைக்குள் நுழைந்து காலியாகக் கிடந்த பாஸ்கரனின் மேஜையைக் கடந்து தன் இடத்தில் போய் உட்கார்ந்த போது ஒரு வினாடி அத்தனை பார்வைகளும் அவளைப் பாவமாய், வேதனையாய், மதிப்பாய், மரியாதை யாய்ப் பார்க்க வகுப்பாசிரியர் ஒரு ஆழமான பெருமூச்சோடு திரும்பி புஸ்தகத்தைத் திறந்து பாடம் நடத்த ஆரம்பித் தார்...

(முற்றும்)